அரிசமய தீபம்

T.D.R.C. 2170
R.R. No. 62 4-1904

O22:4196
N04
118256

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

கிழையூர் - சடகோப தாசர் அருளிச்செய்த

அரிசமயதீபம்

என்னும்

குருபரம்பரை.

௯-வது { நாதமுனிச்சருக்கம்
யாமுநச்சருக்கம்
இராமாநுசச்சருக்கம்.

கவனிப்பு.

இச்சஞ்சிகையோடு அரிசமயதீபம் முடிவுபெற்றது. இச்சஞ்சிகையின் முதலிற் சேர்த்திருக்கும் முகவுரை, சருக்க அட்டவணை முதலியவைகளை முதற் சஞ்சிகையிலுள்ள நான்முகத்துக்கு முன்னே சேர்த்துக்கொள்க.

சே. முத்துகிருஷ்ணநாயுடு,
19, சாமிபிள்ளை தெரு,
சூளை, சென்னை.

MADRAS:
CHENGALROYA NAICKER'S ORPHANAGE PRESS.
56, Budriah Street,

1904.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

கிழையூர்-சடகோபதாசர்

அருளிச்செய்த

அரிசமயதீபம்

என்னும்

குருபரம்பரை.

ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாததூளியான

திருவல்லிக்கேணி

சே. முத்துகிருஷ்ண நாயுடு

இயற்றிய பொழிப்புரையுடன்

REGISTERED 20 OCT 1904 MADRAS.



சென்னை:

செங்கல்வராய நாயகர் ஆர்பனேஜ் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1904.

Copy right.] [விலை அ. 2.

022.4496
N04
118256

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

முகவுரை.

ஸ்ரீய:பதியும் ஸகலஜகத்காரணபூதனும், ஸர்வரக்ஷகனும், மோக்ஷப்ரதனும் அகில கல்யாணகுணாகரனுமான ஸ்ரீமந்நாராயணனது நியமநத்தின்படி அகிலசேதநரு முய்யும்பொருட்டுத் திருவவதரித்து, தமிழ் வேதத்தையும் அதின் அங்கோபாங்கங்களையும் அவற்றின் வியாக்கியானங்களையும் அருளிச்செய்தவர்களான ஆழ்வாராசார்யர்களுடைய திவ்விய வைபவங்கள், பகவத்சாஸ்திரத்தில் பகவானது அம்சமா யவதரித்தவர்களைக் குறித்துக் கூறுமிடத்தும், ப்ரஹ்மாண்டம் பாத்மம் மார்க்கண்டேயம் என்னும் புராணங்களிலும் பார்க்கவம் வ்ருத்தபாத்மம் ப்ரவ்ருத்த பாத்மம் என்னும் உபபுராணங்களிலும் எதிர் காலவரலாறுகளை யுரைக்குமிடங்களிலும், பூர்வாசார்யர்க ளருளிச்செய்தனவான திவ்யஸூரி சரிதம் ப்ரபந்நாம்ருதம் என்னும் வடமொழி நூல்களிலும், ஆறாயிரப்படி குருபரம்பராபிரபாவம் பன்னீராயிரப்படி குருபரம்பரை பெரிய திருமுடியடைவு என்னும் மணிப்பிரவாளகிரந்தங்களிலும், சுருக்கமாகவே ப்ரபந்தஸாரம் உபதேசரத்தினமாலை என்னும் தமிழ்ச்செய்யுணூல்களிலும் சொல்லப்படுகின்றன.

அவ்வைபவங்கள், ஆழ்வார் ஆசார்யர்களிடத்து அன்புமிக்குடையாரும் பண்டிதர்களுமான சில பாகவதோத்தமர்களால் தமிழில் பத்திய பாகமாகப் பாடப்பட்டுள்ளன. அவைகளில் வேறு வேறான ஆசிரியர்களா லியற்றப்பட்ட ஐந்து நூல்கள் அடியேன் காணக்கிடைத்தன.

முதலாவது: **அரிசமயதீபம்** என்னும் இந்நூலாகும். இந்நூலாசிரியரான கீழையூர்-சடகோபதாசர், தொண்டைநாட்டினின்று தென்னாட்டுக்குச்சென்ற, வல்லி-காளத்தியப்ப முதலியார் மரபிலுதித்தவரெனவும், இற்றைக்கு இருநூற்றைம்பது வருஷங்களுக்கு முன் நாகபட்டணம் தாலூகா கீழையூரில் சடகோபராமாநுஜ முதலியாரென்னுந் திருநாமத்துடன் பிரபலமாக வாழ்ந்தவரெனவும், இவரது குமாரர் பத்ராவி முதலியாரவர்களது பெண் சந்ததியார் இப்போது அவ்வூரிலிருக்கின்றனரெனவும், தாயாதிகள் சிலர் வேறிடத்திலுள்ளாரெனவும், அவ்வூரினின்று

வந்த கடிதத்தாற் றெரியவந்தது. மற்று மிவரது சரித்திரத்தையும் இவ ரியற்றிய வேறு நூல்களையும் பற்றி விசாரித்தவிடத்து இதுகாறும் ஒன் றுந் தெரிந்திலது.

இரண்டாவது: **குருபரம்பரை** யென்னும் பெயர் பெற்றிருப்பது. வருஞ் செய்யுளால் இதனை யியற்றினார் திருநாமமும் செய்யுளிலக்கமும் விளங்கும்.

“முன்பினும்பின் பழகியநம் பெருமாண்முன்னை
மொழிந்தகுரு பரம்பரையாம் வடசொல்லான
தன்புமிகு சுலோகமோ ராயிரத்தைந்
நூற்றினையு மழகப்ப னடியிற்சேர்ந்தே
இன்பமுறு மழகியநம் பிப்பேர்பூண்ட
வெழிலுடையான் றமிழதனி லிசைத்தபாடல்
அன்பறவைத் தருளியதீ ராயிரத்தின்
றொளாயிரமே லறுபத்தைந் தெனச்சொல்வாரே.”

இந்நூலினின் றெடுத்து இவ்வரிசமயதீபத்தில் இடையிடையே காட்டிய செய்யுட்களுக்கு † இக்குறியிடப்பட்டிருக்கிறது.

மூன்றாவது: **குருபரம்பராபுராணம்** அடியிற்காட்டுஞ் செய்யுட்களால் பாட்டுத் தொகையும் ஆக்கியோர் திருநாமமும் விளங்கும்.

“பாலாழிநாரணன்சீர்பாடியும்பரிபாலனித்தும்
மேலாம்பதம்பெற்றவாழ்வார்களாரியர்விற்சரிதம்
நாலாயிரத்துமூன்னூற்றறுபத்தொருநற்கவியின்
மாலாயொருகவிகற்கினுநல்கிடும்வைகுந்தமே.”

“திருவளருறைநவிசயராகவன்செந்தமிழினூற்செங்கண்மாலருளால்
மருமலர்வருஞ்சீர்ப்பொய்கையார்முதலாழ்வார்கடஞ்சரிதமஃதுடனே
அருண்மிகுநாதமுனிவனேமுதலாமாரியர்சரிதமதாமிக்
குருபரம்பரையாம்பிரபந்தமதனைக்கூறினன்விருத்தப்பாக்கொண்டே.”

இதினின் றெடுத்து இவ்வரிசமயதீபத்திற் காட்டிய செய்யுட்களுக்கு ‡ இவ் வாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நான்காவது: **பரமயோகிவிலாசம்** என்பது. கிடைத்தபிரதியில் பல ஏடுகள் சிதைவுற்றிருந்தன; அவைகளில் அவசியமானவைகளை இவ்வரி சமயதீபத்திற் காட்டி, அவற்றிற்கு * இக்குறியிட்டிருக்கிறேன். இதனை யியற்றினார் திருநாமமும் செய்யுட்டொகையும் இன்னுந் தெரிந்தில.

ஐந்தாவது: **இராமாநுசசரிதை** என்பதாம். இந்நூலை யியற்றி னவர் பாகை-ஸ்ரீராமதாசரவர்கள். செய்யுள் ௧௨௧௫. இது, இராமாநுச ரது வைபவங் கூறவந்ததேனும், இடையே திருவரங்கப்பெருமாளரையர் இராமாநுசருக் கருளிச்செய்ததாகத் தோற்றுவாய் செய்யப்பட்டு, ௭௫௯ செய்யுட்களால் ஆழ்வார்கள் வைபவங்களை யெடுத்துரைக்கின்றது. இவ் வரிசமயதீபத்திற் சில பகுதிகளை அச்சிட்டு வெளியிட்டதன் பிறகு இந் நூல் கிடைத்தமையால் இவ்வரிசமயதீபத்தின் ௯-ம் பக்கத்தில் அதுவரை யிற்கிடைத்த நான்கு நூல்களையே குறித்திருக்கிறேன்.

இவ்வரிசமயதீப நூலாசிரியரும் மற்றையோரும் முதலாழ்வார்கள் முதல் இராமாநுசர் வரையிலுமுள்ளார் வைபவங்களையே யெடுத்துரைத் தனர். அதன்மேற் செல்லாது அவ்வளவிலே நின்றுவிட்டது, அங்கு நின்றுந் தென்கலை வடகலை யென ஆசார்ய பரம்பரைகள் பிரிவுபட்டுச் செல்வதை நோக்கிப்போலும். ஆகவே இந்நூல் அவ்விருபாலாருக்கும் ஒப்பமுடிந்ததேயாகும்.

வைபவங்களை யெடுத்துரைப்பதில், இவ்வரிசமயதீபம் ஒருவகையாக வும், இரண்டாவதும் மூன்றாவதும் தம்மிலியைந்து வேறு வகையாகவும், நான்காவது இம்மூன்றிலும் சிறிது வேறுபட்டும், ஐந்தாவது சுருக்கமாக வும் நடைபெற்றுச் செல்லாநின்றன.

இவைகளில் அரிசமயதீபம் என்னும் இந்நூலுக்கு மாத்திரம் அடியே னுடைய ஆசிரியர்களான ஸ்ரீமாந் கூ-முதலியாண்டான் ஸ்வாமிகள் ஸ்ரீமாந் கொ-பள்ளிகொண்டான் பிள்ளையவர்கள் என்னும் இப்பெருமா ன்களது நியமநம்பெற்றுப் பொழிப்புரையெழுதி சில காலமாக வைத்திருந் தேன். அப்பால் இதனை இப்பொழிப்புடன் அச்சிடுதற்கான முயற்சி செய்கையில், பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியரான ஸ்ரீமாந் திரு மணம்-செல்வக்கேசவராய முதலியாரவர்கள் எம். ஏ., உற்சாகத்துடனே துணைநின்று செய்துவந்த உதவியால் இது இனிது முடிவதாயிற்று.

அடியேனுக்கு அரிசமயதீபப் பிரதிகளையும் மற்றைச் செய்யுட் குரு பரம்பரைப் பிரதிகளையும் உதவினவர்கள் :—

ஸ்ரீமாந் கூ-முதலியாண்டான் ஸ்வாமிகள்
,, கொ-பள்ளிகொண்டான் பிள்ளையவர்கள்
,, ச-பு-குருஸ்வாமி நாயுடவர்கள்
,, புரசை கு-தேவராசக் கவிராயரவர்கள்
,, நா-சி-கண்ணபிரான் முதலியாரவர்கள்
,, உ-கிருஷ்ணசாமி பிள்ளையவர்கள்

ஸ்ரீமாந் சோ-சஞ்சீவிராய நாயக்கரவர்கள்
,, புவனகிரி-அழகிய மணவாளதாஸரவர்கள்.

இவர்கண்மாட்டு அடியேன் மிகக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்நூலிற் சில பகுதிகளைப் பரிசோதித்துபகரித்த இயற்றமிழாசிரியரான மஹாவித்வான் ஸ்ரீமாந் கா-இராமசாமி நாயுடவர்கள் திறத்தும் அடியேன் நன்றி பாராட்டற்பாலேன்.

இந்நூலைச் சஞ்சிகை ரூபமாக வெளியிட்டு வருகையில், இதிற் சில பாகங்களை B. A. பரீக்ஷைக்குப் பாடமாக ஏற்படுத்திவந்த சென்னை சர்வகலாசங்கத் திராவிட பாடசபையாருக்கும் அடியேனது அன்புற்ற வந்தனம் உரியதேயாம்.

கிடைத்த சில பிரதிகளின் உதவியே உதவியாகப் பொழிப்புரையுடன் வெளியிடும் இவ்வரிசமயதீப முதற்பதிப்பில் நேர்ந்த தவறுகளை ஆன்றோர் பொறுத்தருள்வதன்றி, அவைகளை அடியேனுக்குத் தெரிவித்து அடுத்த பதிப்பில் இந்நூல் சுத்தமடையுமாறு அருள்புரிவாரெனப் பிரார்த்திக்கிறேன்.

சே. முத்துகிருஷ்ணநாயுடு,
19, சாமிபிள்ளை தெரு,
1904ஆம் செப்டம்பர் மீ 24உ — சூளை, சென்னை.

ஸ்ரீ

௧௨-வது நாதமுனிச்சருக்கம்.

ஆர்காவினமுமிழ்தருமணியகாவேரி
தீரநாண்மலர்மதுநுகரளியிசைசிறக்கே
பாரகான்மறைமுனிவர்நாலாயிரம்பயிலும்
வீரநாரணபுரந்தன்வளமியார்விதிப்பார்.

(இ-ள்.) சங்கினங்கள் முத்துக்களை யுமிழும் அழகையுடைய திருக்காவேரி தீரத்தில், புதியமலர்களில் தேனை யுண்ணும் வண்டுகளின் இசைகள், சிறக்க, நிறைவுற்ற நான்கு வேதங்களையுணர்ந்த மநசிலர்கள் நாலாயிரவர்கள் நித்தியவாசஞ் செய்யும் வீரநாராயண புரத்தின் வளப்பத்தை யார் சொல்லுவார்கள்? (எ-று.) (௧)

௨. துகளிலாவளந்துதையுமப்பதிவயின்றொகையாப்
பகருநாலுநாற்பதின்மரும்பரமபாகவதர்
அகமுமாற்றமேயிணையவரவருளும்பெரியோன்
இகலிலாதசொட்டைக்குலத்தீசுரனென்பான்.

(இ-ள்.) குற்றமற்ற வளப்பமிகுந்த அந்தத் திருப்பதியினிடத்து, தொகையாகச் சொல்லும் நாற்பத்துநாற்பது திருநாமங்களும் பரமபாகவதர்களாயிருப்போர்; தமது உள்ளமும் சொல்லும்போலுள்ளவர்கள் (உள்ளமும் சொல்லும் ஒன்றோடொன்றொத்திருப்பதேயன்றி மாறுபடாதவர்கள்). அவர்களில் பெரியோராயுள்ளவர், பிறர் பகைத்தலில்லாத சொட்டைக்குலத்திலுள்ள ஈசுவரமுனிகளென்பவர். (எ-று.) (௨)

௩. அனையவன்றிருமதலையாய்மால்படையதிபன்
தனைவணக்கிமற்றவன்படைத்தலைவனுந்தகைமை
புனையுமால்கரிமுகனவதரிப்பமுப்புரிநூல்
வினைகளாறுடைமுனியுநோக்கினன்மிகுவிருப்பால்.

(இ-ள்.) சேனைமுதலியாரை வணங்கி, அவரது சேனைக்குத் தலைவராய்ப் பெருமையைக் கொண்டிருக்கும் சிறப்புற்ற கஜமுகர், அவரது அழகிய திருக்குமாரராகி அவதரிக்க, முப்புரிநூலும் ஆறுதொழில்களும் உடைய ஈசுவரமுனிகளும் மிகுந்த விருப்பத்தோடு அவனைக் கண்டனர். (எ-று.) ()

௪. விளங்குநாமமுநாதமாமுனியெனவிதித்தே
அளக்குறுதயர்கருமமுமுடித்தனன்சுதனும்
வளங்கொளேழிசைமறைகளுஞ்செலவகளும்வழுவா
துளக்குறாவகையதிகரித்தெவரினுமுயர்ந்தான்.

(இ-ள்.) விளக்கத்தையுடைய திருநாமமும் நாதமுனிகளென்று அருளிச்செய்து, செய்யவேண்டிய கருமங்களெவற்றையும் தவறாமல் முடித்தனர். குமாரரும், வளப்பத்தையுடைய ஏழிசைகளையும் நான்கு வேதங்களையும் வேறெவற்றையும் தவறாது திருவுள்ளத்தில் நிறையும்படி அதிகரித்து, அப்படி யதிகரித்த யாவரினும் உயர்ந்தனர். (எ-று.) (௪)

௫. இசையினன்முகன்சுருதியிற்சதுமுகனிருநாற்
றிசையினேர்ந்தசெந்தமிழினிற்குறுமுனிதிருமால்

வசையிலொண்மலர்த்திருவடிவழுத்திடயேமறவா
நசையினுயர் தருவனாயினன்முனிநாதன்.

(இ-ள்.) ஏழிசைகளால் தும்புருவும், வேதத்தால் பிரமனும், எட்டுத் திக்கிலும் நிறைந்த செந்தமிழாலே அகஸ்தியரும், பெருமானது குற்றமற்ற மலர்போன்ற திருவடிகளைத் துதித்து என்றும் மறவாத பக்தியினாலே அருவருமாயினர் ஸ்ரீமந் நாதமுனிகள். (எ-று.) (௫)

௬. கரியநாரணன்பதத்துறைாழ்பிருச்சினிகருப்பன்
பெரியநாதமாமுனிக்கொருமதலையாய்ப்பிறந்தான்
உரியனும்புதல்வனைமுனிநாதனுமுவகை
விரியநாடுபெயருமீச்சுரனெனவிதித்தான்.

(இ-ள்.) ஸ்ரீமந்நாராயணனது பெருமைதங்கிய் பரமபதத்தில் நித்தியவாசஞ் செய்யும் பிருச்சினிகருப்பர் ஞானவொழுக்கங்களிற் பெரியோரான ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு ஒரு திருக்குமாரராகி யவதரித்தனர். தமக்கு உரியவரான அப்புதல்வனை ஸ்ரீமந்நாதமுனிகளும் சந்தோஷமதிகரிக்கப் பார்த்துத் திருநாமமும் ஈசுவரமுனிகளென்று சாத்தினர். (எ-று.) (௬)

௭. கருதினான்முறைசவுளமேமுதலியதொழில்கள்
பொருவின்மைந்தனுக்கயர்ந்துபின்வதுவையும்புரிவித்
தருணிறைந்தமால்வீரநாரணன்றிருவடிதாழ்ந்
திருமைகூர்ந்துயர்வீரநாரணபுரத்திருந்தான்.

(இ-ள்.) வேதசாஸ்திர முறைப்படி சவுளம் முதலிய கருமங்களை ஒப்பற்ற அத்திருக்குமாரருக்குச்செய்து, பிறகு திருக்கலியாணமும் செய்வித்து, அருள் நிறைந்த வீரநாராயணப்பெருமானது திருவடிகளை வணங்கி, பெருமை யதிகரித்துயர்ந்த வீரநாராயணபுரத்தில் எழுந்தருளி யிருந்தனர். (எ-று.)

௮. அவனியுண்டமாலருச்சனைவடிவுளவனைத்துந்
தவலிலன்புடன்பணிகுவானறனையனுந்தானும்
உவகைபொங்கமுன்வீரநாரணனிடமளிக்கொடுவாப்
புவனமெண்டவநாதமாமுனிவரன்போந்தான்.

(இ-ள்.) உலகங்களை யுண்டருளிய பெருமானது அர்ச்சாவதாரங்களையெல்லாம் கெடுதலில்லாத பக்தியோடு சேவிப்பதற்காகத் தமது திருக்குமாரரும் தாமுமாகச் சந்தோஷமதிகரிக்க வீரநாராயணப் பெருமான் திருமுன்பே சென்று பணிந்து நீங்கிப் பூமியிலுள்ளவர்கள் மெச்சும் தவத்தையுடைய ஸ்ரீமந்நாதமுனிகள் பிரயாணமாயினர். (எ-று.) (௮)

௯. பதிகடோறுமும்மூன்றுநாள்வதிந்துயர்பனிநீர்
நதிகளேமுதற்றீர்த்தமும்படிந்துவானவிரும்
மதியளாவியசயிலகோவர்த்தனமருவி
அதிகமாநதியமுனையங்கரையினையடைந்தான்.

(இ-ள்.) திருப்பதிகள் தோறும் மும்மூன்று நாளாக வசித்து, உயர்ந்த குளிர்ந்த நீரையுடைய நதிகள் முதலிய தீர்த்தங்களிலும் நீராடி, ஆகாயத்திற் பிரகாசிக்கும் சந்திரனைக் கிட்டியிருக்கும் கோவர்த்தனகிரியை யடைந்து, உயர்ந்ததான யமுனையாற்றின் அழகிய கரையை யடைந்து, (எ-று.)

௧௦. புனிதமாநதிபடிந்துகோவர்த்தனபுரமாம்
பனிநதிக்கரைப்பதிவயினுலகெலாம்பரவ
நனிநடம்புரிகண்ணனைவணங்கியந்நகர்வாய்
இனியசீலமிக்கெண்ணிலாவைகல்வீற்றிருந்தான்.

(இ-ள்.) அந்தப் பரிசுத்தமாகிய நதியில் நீராடி, கோவர்த்தனபுரமாகிய குளிர்ந்த அந்த யமுனாநதியின் கரையிலுள்ள திருப்பதியில் உலகத்திலுள்ளோ ரெல்லாம் வணங்கும்படி நன்றாகத் தாண்டவஞ்செய்யும் யமுனைத்துறைவனை கண்ணனெம்மானை வணங்கி, அந்நகரத்தினிடத்து நல்ல ஆசாரமிகுந்தவராகிக் கணக்கற்ற தினங்கள் எழுந்தருளி யிருந்தனர். (எ-று.) (௧௦)

௧௧. முன்னைவீரநாரணபுரத்தெம்பிரான்முனிவன்
தன்னைநம்பதிசார்கெனக்கனவினிற்சாற்ற
என்னையேயிதுபுதிதெனயமுனையந்துறைவாழ்
பின்னைகேள்வனைவணங்கினன்விடைகொளாப்பெயர்ந்தான்.

(இ-ள்.) முன்பு தாமெழுந்தருளியிருந்த வீரநாராயணபுரத்து எம்பெருமான் ஸ்ரீமந்நாதமுனிகளை நமது திருப்பதிக்கு வருவீராகவென்று கனவில் அருளிச்செய்ய, இது என்ன புதுமையென்று யமுனையாற்றின் அழகிய துறையினிடத்து நித்தியவாசஞ் செய்யும் பெரியபிராட்டியாருக்கு நாயகனை வணங்கி விடைகொண்டு பிரயாணமாய் (எ-று.) (௧௧)

௧௨. நண்ணினன்பதிவீரநாரணத்தைவானளினக்
கண்ணினன்பதம்பணிந்தனன்பரவலுங்கடவுள்
விண்ணினன்பலகோடிபோல்வடிவொடும்வெளிநின்
றண்ணினன்புநன்றென்றுநல்லுணர்வளித்தொளித்தான்.

(இ-ள்.) தமது திருப்பதியாகிய வீரநாராயணபுரத்தை யடைந்து, உயர்ந்த தாமரைபோன்ற திருக்கண்களையுடைய வீரநாராயணப் பெருமானது திருவடிகளைப் பணிந்து துதித்தலும் பெருமான் ஆகாயத்திலிருக்கும் பலகோடி சூரியரைப் போன்ற திருமேனியுடன் தோன்றி, உமது உள்ளன்பு நல்லதாயிருந்ததென்று உத்தமமான ஞானத்தைக் கொடுத்து மறைந்தருளினன். (எ-று.) (௧௨)

௧௩. நிறைந்தஞானத்தன்பதுமநாபன்பதநீங்கா
துறைந்தகாலையின்குருகைமாறப்பெயருரவோன்
அறைந்தவாதிநாற்றமிழினிற்பத்தொராயிரத்துள்
மறைந்திடாதுணர்வயினவிருவர்கள்வந்தார்.

(இ-ள்.) (பெருமானருளிச்செயலின்படி) பூர்ணமான ஞானத்தையுடையவரான ஸ்ரீமந்நாதமுனிகள் பதுமநாபியையுடைய பெருமானது திருவடிகளை விட்டு நீங்காமல் நித்தியவாசஞ் செய்துகொண்டிருந்த காலத்தில், திருக்குருகூரிலவதரித்த மாறனென்னுந் திருநாமமுடைய பிரபந்நஜந கூடஸ்தரான ஆழ்வார் அருளிச்செய்த முதன்மைவாய்ந்த நூலாகிய தமிழ் வேதத்தில் திருவாய்மொழி ஓராயிரத்தில் பத்துப்பாடல்களை மறைந்து போகாமல் அறிந்த இரண்டு ஸ்ரீ வைஷ்ணவத் திருநாமங்கள் வந்தார்கள். (எ-று.) (௧௩)

௧௪. தொழுதுமாலையாராவமுதென்றுமுன்றொடங்கிப்
பழுதுறுநிசைத்ததனிலாயிரத்துளிப்பத்தென்
றெழுதுபாடல்சொற்றிடமுனிநாதனுமிவைநீர்
முழுதுமோர்ந்ததிரோவெனவயிணவர்மொழிவார்.

(இ-ள்.) பெருமானை வணங்கி "ஆராவமுதே" என்று முதலில் ஆரம்பித்துக் குற்றம்வாராமல் அருளிச்செய்த பதிகத்தில் "ஆயிரத்துளிப்பத்து" என்று எழுதப்பட்டிருந்த பாசுரத்தைச் சொல்ல, ஸ்ரீமந்நாதமுனிகளும் இவற்றை நீங்கள் முழுமையுமறிந்திருக்கிறீர்களோ என்று கேட்க, அந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் சொல்லுவார்கள். (எ-று.) (௧௪)

௧௫. இவையுமாங்கெங்கள்பாலன்றிமற்றெவனும்
நவையிலாய்பெறற்கரிதெனுவதன்முறைநவின்றார்
சுவைஞர்நாதனுமவற்றினுட்பொருளெலாங்கருத்தாற்
சுவையினோர்ந்தவைநாடுவாயினியெனத்துணிந்தான்.

(இ-ள்.) குற்றமற்றவரே! இப்பத்தும் பூமியில் எங்களிடத்தன்றி வேறெவ்விடத்திலும் பெறுவதற்கரிது என்று அதன் பிரகாரத்தைச் சொன்னார்கள். ஸ்ரீமந்நாதமுனிகளும் அவற்றின் உட்பொருள்களை யெல்லாம் தமது கருத்தினாலே சுவையுடனறிந்து இனி இப்பாசுரங்களை நாடுவோமென்று ஆலோசித்தனர். (எ-று.) (௧௫)

௧௬. அல்குமப்பதிவீரநாரணன்றிருவருளான்
மல்குபொற்குருகூர்புகுந்துயர்தமிழ்மாறன்
நலகுமெய்த்திருவாய்மொழிநாண்கலறுடி
ஒல்குளத்தினனாகியப்பதிவயினுமுன்றான்.

(இ-ள்.) அந்தத் திவ்விய தேசத்தில் நித்தியவாசஞ் செய்யும் வீரநாராயணப் பெருமான் திருவருளாலே அழகு மிகுந்த திருக்குருகூரிற் பிரவேசித்து உயர்ந்த தமிழராகிய ஆழ்வார் அருளிச்செய்த உண்மையுற்ற திருவாய்மொழியை விசாரித்துக் காணுதவராய்ச் சோர்ந்த திருவுள்ளமுடையவராகி அத்திருக்குருகூரிலிடத்துத் திரிந்தனர். (எ-று.) (௧௬)

வேறு.

௧௭. அப்பதியுட்சடகோபன் மிசைமதுரகவிதமிழா லன்புற்றங்காட், செப்பரியபொருட்கண்ணி நுண்சிறுத்தாம்பொருபாநுந் தெளிந்துஞானத், தொப்பரியபராங்குசதா சனையனுகியவையவ னுணர்ந்துஞானத், துப்பருளுந்திருப்புளிக்கீ ழிருந்துபராங் குசன்மலர்த்தாட் டுணையுட்கொள்ளா

(இ-ள்.) அந்தத் திருப்பதியில், ஆழ்வார்மீது மதுரகவியாழ்வார் பக்தியுடையவராகித் தமிழிலருளிச்செய்த அறிவதற்கரிய பொருளையுடைய கண்ணிநுண் சிறுத்தாம்பு ஒருபது செய்யுளையும் தெரிந்து, ஞானத்தில் ஒப்பில்லாத பராங்குசதாசரென்பவரை யடைந்து அப்பத்துச் செய்யுளையும் அவராலே அறிந்து, ஞானவலிமையை யளிக்கும் திருப்புளியாழ்வா ரடியிலிருந்து பராங்குசரான ஆழ்வாரது தாமரை மலர்போன்ற இரண்டு திருவடித்தாமரைகளைத் திருவுள்ளத்திற் கொண்டு, (எ-று.) (௧௭)

௧௮. ஆயிரண்டாயிரமுருச்சொற் றடிபணியப்பராங்குசனுண்டனுமிமுன்றுன், மாறிருந்தமயர்வகற்றி மதிநலந்தான்பெறவளித்தமாட்சிபோல, நாறிருந்துபுயநாதமுனிமயறீர்த்தறிவுநலமேனைமைநல்கா, வீறிருந்ததமிழ்க்கருதி நான்குமறையின்பொருளைவையும் விரித்துச்சொற்றான்.

(இ-ள்.) பன்னீராயிரமுரு அநுசந்தித்து ஆழ்வார் திருவடிகளை வணங்க, ஆழ்வார் அவ்விடத்தெழுந்தருளி, முற்காலத்தில் எம்பெருமான் தாம் திருத்தமடையும்படி அஞ்ஞானத்தை நீக்கி மதிநலங்களைப் பெறும்படி கடாக்ஷித்த மாட்சிமையைப்போல, பூணூல் திருத்தமடைந்திருக்கும் புயங்களையுடைய ஸ்ரீமந்நாதமுனிகளது மையலைத்தீர்த்து மதிநலப் பெருமையை யளித்து, பெருமையடைந்த நான்காயிருக்கும் தமிழ் வேதத்தையும் அதின் எல்லாப்பொருள்களையும் விஸ்தாரமாக அருளிச்செய்தனர். (எ-று.) (௧௮)

௧௯. அருள்பெருகிப்பின்னருமுன் றுதியோகியர்மூவ ரடிக்கேகாட்டும், கருகுரிசின்மதிகுலக்கோன் றொண்டரடிப்பொடிப்பாணன் றகைசால்பட்டா, பெருமனுயர்பரகாலனில் பனுவலெலவையவையும் பிறழக்கூறி, ஒருமைதருபரம்பொருளின் மந்திரமெட்டக்கரமுமுபதேசித்தான்.

(இ-ள்.) ஆழ்வார் பின்னரும் அருள்பெருகி, அத்தமிழ்வேதத்துக்கு அங்கோபாங்கங்களாகப் பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் ஆகிய முதலியோகியர் மூவர், திருவடிகளில் கண்களுள்ள திருமழிசையாழ்வார், குலசேகராழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், பெருமைமிகுந்த பெரியாழ்வார், உயர்ந்த திருமங்கையாழ்வார், இவர்கள் அருளிச்செய்த பிரபந்தங்களெவையோ அவற்றையும் விளங்கும்படி யருளிச்செய்து, ஒப்பற்ற வீடுபேற்றை யளிக்கும் பரம்பொருளான பெருமானது திருமந்திரமான அஷ்டாக்ஷரமும் உபதேசித்தருளினர். (எ-று.) (௧௯)

ஆண்டாள் பெரியாழ்வார் திருமகளாய்த் தமது திருநாமத்தைப் "பட்டர்பிரான் கோதை" யென்று ஆழ்வாரை முன்னிட்டே யருளிச்செய்ததால் ஆண்டாளைப் பிரித்துக் கூறிற்றிலர்.

௨௰. தறங்குதிரைக்கருங்கடனீர் செங்கதிர்தன்கிரணமெனுங் கரத்தாலள்ளிப், பிறங்குபுவிக்கருள்புரிவான் புயற்குதவவதுதரிக்கும் பெற்றிபோலச், சிறந்தமகிழ்த்தொடைமாறன் றமிழின்மறைப்பொருளைவையுந் தெரியக்கூற, அறந்தழைக்கதவநாதமுனிதரித்தான்மாறனும்பின் னருளினேக்கா

(இ-ள்.) ஒலிக்கும் அலைகளையுடைய கருங்கடலின் நீரைச் சூரியன் தனது கிரணங்களென்னும் கைகளாலே எடுத்துப் பெரிய பூமியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கும்படி மேகங்களுக்குத்தர அம்மேகம் அதனைத் தரித்துக் கொண்டிருக்கும் தன்மைபோலே, சிறப்பையுடைய மகிழம்பூமாலையை யணிந்த ஆழ்வார் தமிழ்வேதத்தின் பொருளைவிளக்கும் அங்கோபாங்கங்களின் பொருளையெல்லாம் தெரியும்படி யருளிச்செய்ய, தருமம் விர்த்தியான தவத்தையுடைய ஸ்ரீமந்நாதமுனிகள் அவைகளைத் தரித்துக்கொண்டனர். பிறகு ஆழ்வாரும் கிருபையோடு கடாக்ஷித்து, (எ-று.) (௨௰)

௨௧. நத்துமலர்க்கரந்தரித்தோ னுருவிசிட்டாத்துவிதமதா நவி
ன்றுஞாலத், தத்துவிதங்களைகடவுட் பனுவலிவையதிசரித்தோர்
க் கருளுமுத்தி, எத்துயருமாற்றுமெனப் பரமபதம்புகுந்தனனன்
றிருந்துநாதன், தத்துவஞானந்தெளிந்து தமிழ்ச்சுருதிபுவிவிளங்
கச் சாற்றுங்காலை

(இ-ள்.) பாஞ்சசந்நியத்தை மலர்போன்ற திருக்கைகளில் தரித்த பெருமானது திவ்ய ஸ்வரூபத்தை விசிஷ்டாத்வைதபரமாக அருளிச்செய்து, பூமியில் அத்வைதத்தை ஒழிக்கும் தெய்வத்தன்மையுள்ள பனுவல்களான இவைகள், தம்மை யதிசரித்தவர்களுக்கு மோக்ஷத்தைக் கொடுக்கும்; எந்தத் துயரையும் மாற்றிவிடுமென் றருளிச்செய்து பரமபதத்துக்கெழுந்தருளினர். அவ்விடத்தில் ஸ்ரீமந்நாதமுனிகள் எழுந்தருளியிருந்து தத்துவஞானத்தை யறிந்து, தமிழ்வேதத்தைப் பூமியிலுள்ளோர் விளங்கும்படி பிரவசனஞ் செய்யுங்காலத்தில், (எ-று.) (௨௧)

௨௨. வீரநாரணப்பெருமா னவன்கனவினனுகிமறை விளங்க
வேலை, ...னைம்புகுந்துமுனங் கொணர்ந்தனநீதமிழ்வேத
நாடித்தந்தாய், தேர...நீருமேவோரு மயலலமித்தமிழ்வேதச் சிறப்
பைநின்னோ, டோரநாமுவந்தனநம் பதிவருதியெனவவனு முவப்
பிற்சென்றான்,

(இ-ள்.) வீரநாராயணப்பெருமான் அவரது சொப்பனத்தி லெழுந்தருளி, "முன்பு நாராயணனான நாம் சமுத்திரத்தில் பிரவேசித்து கீர்வாண வேதத்தை விளங்கும்படி மீட்டுக்கொண்டு வந்தோம். நீரோ தமிழ்வேதத்தை ஆராய்ந்து கொண்டுவந்து கொடுத்தீர். அறியுமிடத்தில் நாமிருவோரும் வேறானவர்களல்லேம். இந்தத் தமிழ்வேதத்தின் சிறப்பை உம்மோடு கூடியிருந்து நாம் அநுபவிக்க இச்சித்தோம். நமது திவ்யதேசத்துக்கு வருவீராக" என்றருளிச்செய்ய, அவரும் சந்தோஷத்தோடு சென்றனர். (எ-று.) (௨௨)

௨௩. புனிதம்மறைச்செழுந்தமிழை வீரநாரணனுடனே பொரு
டேர்ந்தோதி, இனிமைபடைத்தவைதாள வட்டனைகாந்திருவ
விசை யேழிற்பாடி, நனிதகைமைதழைத்திருந்தா னந்நாளிற்கா
வேரி நாடன்முன்னே, மனிதவிசைகாந்திருவ முணர்மடவாரிரு
வருள மாறுய்வந்தார்.

(இ-ள்.) பரிசுத்தமான செழிப்புடைய தமிழ்வேதத்தை வீரநாராயணப் பெருமானுடனே பொருளையுணர்ந்து ஓதி இனிமைபடைத்த அப்பாசுரங்களை வட்டமான தாளத்துடனும், தெய்வராகமான காந்திருவம் ஏழிசையிலும் பாடி மிகவும் பெருமை அபிவிருத்தியடைந் திருந்தனர். அக்காலத்தில் சோழநாட்டுக்குத் தலைவனான சோழபூபதியின் சமுகத்தில் மநுஷ்யராகம் காந்திருவராகம் இவைகளைத் தனித்தனி யுணர்ந்த பெண்களிருவர் உள்ளம் மாறுபட்டு வந்தார். (எ-று.) (௨௩)

௨௪. கற்புடையகுலமாதர் ...மதிகணனையொருவாக் காட்சி
போலப், பெ...டையவிலக்கண...யகலாதகாந்திருவப் பொ
ருவில்பாட, ...ருவமனுங்க...விழியிமையாக்களைமிடறு
விம்மாதத்தப், ...தோன்றுதலை...லோவியம்போலணங்
கொருத்தி ப...ால.

(இ-ள்.) கற்புடைய குலஸ்திரீகளின் எண்ணம் புருஷனைவிட்டு நீங்காத தன்மையைப்போலப் பொலிவுபொருந்திய இலக்கணத்தை நீங்காத காந்திருவமென்னும் ஒப்பற்ற பாடலை வில்போன்ற புருவம் வளையாமலும் கண்கள் இமைக்காமலும் ஒலிக்கும் கண்டம் விம்மாமலும் அழகையுடைய பற்கள் வெளியிற் றோன்றாமலும் அசையாத சித்திரம் போலப் பெண்மகள் ஒருத்தி பாடினள். (எ-று.) (௨௪)

௨௫. கனகமெவருதவுகினு மவரவர்கட்கினிமைபுரி கணிகைமா
தா, னவுலகிவிலக்கியநீர் மையதாந்தேசிககானத் தியல்பையா
ரும், மனமுருகவிழிபுருவங் கொடுமருட்டிநகைவழிதே யக்கி
வார்பூண், தனமிலகத்துகினீக்கிப் பாடினள்சூத்திரப்பாவை தனி
லொன்றையல்.

(இ-ள்.) எவர் பொன்னைக் கொடுத்தாலும் அவரவர்களுக்கு இனிமைசெய்யும் வேசியரைப்போல, உலகத்தில் இலக்கியத்தன்மையுடைய தான தேசிககானத்தின் இயல்பை, யாரும் மனமுருகும்படி கண்களையும் புருவங்களையுங் கொண்டு மருட்டி, சிரிப்பை வீணையாக விளைத்து, கச்சணிந்த தனங்கள் தோன்றும்படி மேலாடையை நீக்கி, சூத்திரப்பதுமைபோல ஒரு பெண் பாடினள். (எ-று.) (௨௫)

௨௬. வளவனுமாங்கவைகேட்டுத் திருமாலைவழுத்திமுத்தி வா
ய்க்குங்காட்சி, அளவறியாதயலலகில் கடவுளரைவழுத்திமகி ழறி
விலார்போற், றுளவமுகின்மகிழ்பாடற் றிறனுணராதவனியுளோ
ர் துதிக்குங்கானத், தளவநகைக்கயல்விழியாட் கரியபலவரிசை
யந்த டைப்பளித்தான்.

(இ-ள்.) சோழனும் அவைகளைக்கேட்டு, பெரியபிராட்டியாருக்கு நாயகனான பெருமானைத் துதித்து மோக்ஷமடையும் ஞானத்தின் அளவை யறியாமல் புறம்பே பலவான தேவதைகளை வாழ்த்தி மகிழும் ஞானமில்லாதவர்களைப்போல், திருத்துழாய் மாலையையணிந்த பெருமான் மகிழும் காந்திருவப் பாடலின் கூறுபாட்டை யறியாமல், பூமியிலுள்ளவர்கள் புகழும் தேசிக கானத்தைப்பாடிய முல்லை யரும்புபோன்ற பற்களையும் கயல்மீன்போன்ற கண்களையுமுடையவளுக்கு அரிய பலவான வரிசைகளை அருளுண்டாகக் கொடுத்தனன். (எ-று.) (௨௬)

௨௭. காந்திருவவிசைமாது நகைத்துநமதிசைகருணைக் கடவு
ளல்லால், வேந்தனுமோ வுணரானும் பரந்தாமன்பதிதொறும்
விரிப்பாமென்றப், போந்தினியநாதமுனி வீரநாரணபுரத்துட்
புகுந்துவீணை, யேந்திமுனிவரன்கேட்ப வீரநாரணன்றிருமுன்
னிசைத்தாளன்றே.

(இ-ள்.) காந்திருவ இசையைப்பாடும் மாது சிரித்து, நமது இசையைக் கருணைக்கடவுளான பெருமானல்லாமல் அரசனான இவனோ அறியமாட்டான். நாம் பரந்தாமன் எழுந்தருளியிருக்கும் திருப்பதிகள் தோறும் போய்ப் பாடுவோமென்று புறப்பட்டு, இனியவரான ஸ்ரீமந்நாதமுனிகள் எழுந்தருளியிருக்கும் வீரநாராயண புரத்திற் பிரவேசித்து, வீணையையேந்தி, ஸ்ரீமந்நாதமுனிகள் கேட்கும்படி வீரநாராயணன் திருமுன்னர் பாடினள். (எ-று.) (௨௭)

௨௮. கேட்டமுனிவனுமகிழ்வும் மதிசயித்துப்புழுவரிக் கெண்
டைபோலும், வாட்டடங்கண்மடவாரு மவனின்விடைகொடுவா
வன் மருங்குசார்ந்தென், பாட்டறியுந்தகைநிபுண நாதமுனியென்
வுலகோர் பரவும்பொன்னி, நாட்டரசுமவனையழைத் திடமுனியு
மரசவையை நண்ணினுனல்.

(இ-ள்.) அதைக்கேட்ட ஸ்ரீமந்நாதமுனிகளும் மகிழ்ந்து அதிசயித்துப் புகழ, செவ்வரி கருவரி பரந்த கெண்டை மீன்போன்றிருக்கும் ஒளி பொருந்திய விசாலமான கண்களையுடைய அம்மாதும், அவரிடத்து விடை பெற்றுக்கொண்டு சோழனிடத்தடைந்து, பெருமையையுடைய நிபுணரான ஸ்ரீமந்நாதமுனிகள் என் பாட்டையறிவார் என்று கூற, உலகத்திலுள்ளவர்கள் வணங்கும் திருக்காவேரி சூழ்ந்த சோழநாட்டரசனும் அவரையழைக்க, ஸ்ரீமந்நாதமுனிகளும் இராஜசபையையடைந்தனர். (எ-று.)

௨௯. எழுந்துவளவனும்பரவி யரியணையிந்திவரிருவ ரிசையா
ன்காணச், செழுந்தவனிதெரித்திடென மனிதரிவ்விசையறியார்
தேவரெல்லாந், தொழுந்தகைமாலிவ்விசை யறிவனெனவேந்த
னும்பார் துதிக்குஞானக், கொழுந்தனையாய்நீயவையின் டறிந்த
தியானிருதற்குக் குறியேதென்றான்.

(இ-ள்.) அப்போது சோழனும் எழுந்து வணங்கிச் சிம்மாசனங்கொடுத்து, இவர்களிருவரது இசையை நானறியும்படி செழிப்புற்ற தவத்தையுடைய நீவிர் தெரிவிப்பீராக வென்று கூற, (ஸ்ரீமந்நாதமுனிகளும் காந்திருவ இசையைப் பாடுவோனைக் குறித்து) மனிதர்களாயுள்ளவர்கள் இவனது இசையை யறியமாட்டார்கள்; தேவர்களெல்லாம் தொழும் பெருமையையுடைய பெருமான் இவனது இசையையறிவன் என்றருளிச்செய்ய, சோழபூபதியும் பூமியிலுள்ளவர்கள் துதிக்கும் ஞானக்கொழுந்து போன்றவரே! நீவிர் அவற்றை இங்கு அறிந்ததை நான் அறிவதற்கு என்ன குறிப்பு என்றனன். (எ-று.) (௨௯)

௩0. ஒருகாலத்தாயிரந்தா ளம்பிடிப்பவாங்கவற்றி னோசைதே
ரா, அருகாதுசிறிதுமிகா தவற்றவற்றின்பலனுவல்வ லதனுற்கா
ண்டி, முருகாரின்றொடையாயா னுணர்ந்தபரிசெனவவையம்
முறையேசொற்றான், பெருகார்வத்தரசனெழுந் தடிபணியாநீயே
நம் பெருமானென்றான்.

(இ-ள்.) ஒரே காலத்தில் ஆயிரந் தாளங்களை ஒத்த, அவற்றின் ஓசையையறிந்து சிறிதும் குறையாமலும் அதிகப்படாமலும் அவையவைகளின் இடையைச் சொல்லுவேன்; அதனுல் அறிந்து கொள்வாயாக. இனிய வாசனையுடைய ஆத்திமாலையைத்தரித்த சோழபூபதியே! இவை நான் அறிந்தவிதமாகும் என்றருளிச்செய்து, அவ்வாறே ஒத்திய தாளங்களினிடைகளைச் சொல்லினர். அபிவிருத்தியாகும் அன்பையுடைய சோழராசனெழுந்து ஸ்ரீமந்நாதமுனிகளது திருவடிகளைப் பணிந்து நீவிரே எம் பெருமான் என்றுரைத்தனன். (எ-று.) (௩0)

௩௧. மறைநான்குஞ்சடகோபன் வருத்ததமிழ்ச்சுருதியினோன்
மற்றியாவுங், குறைபாமலதிகரித்தார் இன்னிலைவரெனமறையோ
ருவகைகூர்ந்தான், இறையானெரிச்சிலம்ப லவையின்முனிவர
ரெவரு மிறும்பூதுற்றூர், நிறையான்றபாகவத ரியாவரினுமதிக
ரெனா நிகழ்த்தினுரால.

(இ-ள்) நான்கு வேதங்களும் ஆழ்வார் பிரந்தருளிச்செய்த தமிழ் வேதமாகிய நாலும் மற்றெவையும் குறைவுபடாமல் அப்பியசித்தவர்கள் உம்மைக் காட்டிலும் யாவரிருக்கின்றனர் என்றுகூற, ஸ்ரீமந்நாதமுனிகள் உவப்படைந்தனர். சோழராசனது சபையிலுள்ள முனிவர் யாவரும் அதிசயமடைந்து, இவர், குணங்கள் நிறைந்த பாகவதர் யாவரினும் உயர்ந்தவரென் றுரைத்தார்கள். (எ-று.) (௩௧)

௩௨. அரசனவைவிடுத்தரிவாழ் வீரநாரணத்தையடைந் தல்
குக்காலை, பரமபதச்செயச்சேன னுய்யக்கொண்டானென்றும்
பக்காளன்சிர், விரவுதமிழ்க்குருகைகா வலனென்றும்புவித்தோ
ன்றி விளங்கிஞான, வரமுனிதன்னையடைந்தா ரவர்க்குவிசிட்டா
த்துவித மறையைச்சொற்றான்.

(இ-ள்.) இராஜசபையைவிட்டுப் பெருமான் நித்தியவாசஞ் செய்யும் வீரநாராயணபுரத்தையடைந்து அங்கு எழுந்தருளியிருக்கும்போது, பரமபதத்திலிருக்கும் ஜயச்சேனரென்பவர் உய்யக்கொண்டாரென்றும், சொல்லப்படும் காளர் என்போர் தமிழின் சீர் பரவிய குருகைகாவலரென்றும், பூமியிலவதரித்து விளங்கி, ஞானத்தில் சிரேஷ்டரான ஸ்ரீமந்நாதமுனிகளை ஆசிரயித்தார்கள். அவர் அவர்களுக்கு விசிஷ்டாத்வைத ரஹஸ்யார்த்தங்களை யருளிச்செய்தனர். (எ-று.) (௩௨)

௩௩. ஏறுதிருவுடையானே முதலாமுதலிகளு மேதில்ஞானம்,
கூறுதியென்றடிவணங்க வவர்க்குமறைநவின்றடிமை கொண்டு
பார்மேல், மாறுதிகழ்பரசமய விருட்பருதியாகிநிறை மாயோகத்
தில், ஊறுதிருஞானவமு தருந்தியிருந்தனனுலகி லுவமையில்
லான்.

(இ-ள்.) ஏறுதிருவுடைய தாசர் முதலான முதலிகளும் குற்றமற்ற ஞானத்தை எங்களுக்கு அருளிச்செய்ய வேண்டுமென்று திருவடிகளை வணங்க, அவர்களுக்கும் ரஹஸ்யார்த்தங்களை யருளிச்செய்து அடிமைகொண்டு, பூமியின்மீது தம்மோடு மாறுபடும் இதரசமயங்களாகிய இருளுக்குச் சூரியனுகி, நிறைந்த பெருமை பொருந்திய யோகத்தில் அபிவிருத்தியாகும் ஞானமிர்தத்தையுண்டு எழுந்தருளியிருந்தனர், உலகத்தில் தமக்குச் சமானமில்லாதவரான ஸ்ரீமந்நாதமுனிகள். (எ-று.) (௩௩)

௩௪. இருந்தமுனிவான்றனைகனை நேரியன்கேட்டவணனுகா வி
றைஞ்சிப்போற்றிச், கருந்துளவத்திருமாலை வணங்கிவிடைகொடு
மீள்வோன் கருதாரஞ்சப், பொருந்தடக்கைமதகளிற்றிற் சாமந்
தன்மணிமுடிமேற் பொலன்பூட்டூந்தான், திருந்தவமைத்திவ்வ்ர்தனு
மாங் கதுநாதமுனிவனெனுந் தேவன்காணு.

(இ-ள்.) அப்படியிருந்த ஸ்ரீமந்நாதமுனிகளது பெருமையைச் சோழன் கேள்விப்பட்டு அவ்விடத்துக்கு வந்து வணங்கித்துதித்து, பெருமைபொருந்திய திருத்துழாய்மாலையையணிந்த பெருமானைச் சேவித்து விடைபெற்றுக்

கொண்டு தன்னூருக்குப் போகும்வன், சத்துருக்கள் பயப்படும்படி யுத்தஞ் செய்யும் விசாலமான துதிக்கையும் மதமுமுடைய யானையின்மீது சாமந் தனது முடியில் பொன்னாபரணங்களணிந்த அழகிய பாதங்களைப் பொருந்தவைத்து ஏறுதலும், அதனை ஸ்ரீமந்நாதமுனிகளென்னும் தெய்வத் தன்மையுடையவர் பார்த்து, (எ-று.) (௧௪)

௧௫. எந்தைதிருமால்பிரமா தியர்முடிமீதடிமலர்வைத் திணையிலாத, முந்தையருட்பெரியதிரு வடிப்புயமீதிவர்தலுமிம் முறையேயென்றுச, சிந்தையுருகிடமோகித் திருந்தனல்போந்தாசார்பிரான் பிரிந்தங்கோர்நாள், விந்தைநிகர்மனைவியர்சூழ் தாவனுகிவிண்டுவின்முள் வணங்கிமீண்டான்.

(இ-ள்.) எனது ஸ்வாமியாய்ப் பெரியபிராட்டியாருக்கு நாயகனான பெருமான் பிரமாதியர் முடியின்மீது தனது திருவடிமலர்களை வைத்து ஒப்பில்லாத அருட் பழமையையுடைய பெரிய திருவடியின் திருத்தோள்களின்மீது ஏறியருளுவதும் இவ்விதமேயாகு மென்று சிந்தையுருகும்படி மோகமடைந்திருந்தனர். முன்புவந்த சோழபூபதி மறுபடியும் அவ்விடத்துக்கு ஒருதினம் அர்ச்சைக்குச் சமானமான மனைவியர்கள் சூழும்படி வந்து பெருமானது திருவடிகளை வணங்கி மீண்டனன். (எ-று,) (௧௫)

௧௬. தேவியர்சூழ்தரக்கனக முடிவேந்தன்சேறலுமச் சிறப்பை நோக்கிக், கோவியருங்கண்ணனுமா மெனநாதன்பின்சென்றுன் ராவன்பின்னே, ஆவிநிகர்புண்டரிகன் குருகைகாவலன்முதலோரனுகிப்போற்றி, நீவியநீர்புடைசூழ்ந்த நிலவேந்தன்பின்னேக நிபமேதென்றார்.

(இ-ள்.) தனது மனைவியர்கள் சூழும்படி பொன்மயமான மகுடத்தையணிந்த சோழன் செல்லுதலும் அந்தச் சிறப்பைப்பார்த்து அவர்கள் கோபிகைகளும் கண்ணனுமாகுமென்று ஸ்ரீமந்நாதமுனிகள் அவர்கள் பின்னே சென்றனர். ஆசாரியருக்குப்பின்னே உயிருக்குச் சமானமான உய்யக்கொண்டார் குருகைகாவலப்பன் முதலியவர்கள் சென்று வணங்கி ஆண்டையைப்போலச் சமுத்திரநீர் பக்கங்களிற் சூழ்ந்த பூமியையாளும் அரசன் பின்னே போவதற்குக் காரணமென்னவென்று கேட்டார்கள். (எ-று.) (௧௬)

௧௭. அண்டர்குலவனிதையரு மவர்களுடன்குரவைநடித் தவனுமாவுட், கொண்டதனுல்வந்தனனென் றவர்களொடுந்திரிந்து பதி குறுகிச்சான்ற, புண்டரிகன்குருகைகாவலன்முதலிேரைத் தன் புதலவனேடுந், தண்டவிலாதருகிருமி னெனவிருத்திப்புண்டரிகன் றன்னைநோக்க.

(இ-ள்.) இடைப் பெண்களும் அவர்களோடு குரவைக் கூத்தாடின கண்ணனெம்மானுமாக எண்ணியதனுல் வந்தேனென்று அருளிச்செய்து, அவர்களோடு திரும்பித் தமது ஊரையடைந்து, குணங்கள் நிறைந்த உய்யக்கொண்டார் குருகைகாவலப்பன் முதலியவர்களைத் தமது திருக்குமாரரான ஈசுவர முனிகளோடு பிரியாமல் அருகிலே யிருங்களென்றுரைத் திருக்கவைத்து, உய்யக்கொண்டாரைக் கடாக்ஷித்து (எ-று.) (௧௭)

௧௮. பொருவிலரிசமயகவி றமிழ்மறையின்முறையேயிப் புவிமீதேறு, திருவுடையன்குருகன்முத லினர்களொடுநீவளர்த்திச் சிறக்கவென்றுக், குருகையதிபனைநோக்கி யோகநிலைவழுவாது குயிற்றுநீயென், றருளினுடனிருவருக்கு மரியமறைப்பொருளனைவையுமறைந்தானெமமான்.

(இ-ள்.) ஒப்பற்ற அரிசமய ஸ்வரூபத்தைச் சொல்லும் தமிழ்வேதத் தின்படியே இப்பூமியின்மீது ஏறுதிருவுடையதாசர் குருகைகாவலப்பன் முதலியவர்களுடன் நீர் வளர்த்திச் சிறப்படைவீராக வென்றருளிச் செய்து, குருகைகாவலப்பனை நோக்கி யோகநிலையை வழுவாமற் செய்து வருவீராக் வென்றுரைத்து, அவ்விருவருக்கும் கிருபையோடு இன்னும் அருமையான பொருள்களெவற்றையும் அருள்செய்தனர் எமது ஸ்வாமியான ஸ்ரீமந்நாதமுனிகள். (எ-று.) (௧௮)

௧௯. தன்புதல்வன்முகநோக்கித் திருமால்சிங்காதனமித் தலத்தோர்வாழ, நின்புதல்வனெனவுதிக்கு மம்மகவையாமுனைப்பேர் திருமியென்றுப், பின்புண்டரிகன் குருகைநாதனை நோக்கிப் பின்சென்றேனும், என்புதல்வன்புதல்வனுக்கிப் பொருளனைவையு நீவிர்நவின் றிடுமினென்றான்.

(இ-ள்.) தமது திருக்குமாரர் முகத்தைக் கடாக்ஷித்துப் பரமபதநாதனுடைய சிம்மாசனம் இந்தப்பூமியிலுள்ளவர்கள் உஜ்ஜீவிக்கும்படி உமது குமாரனுக அவதரிக்கும். அக்குழந்தைக்கு யமுனைத்துறைவர் என்று திருநாமகரணஞ் செய்வீராக வென்று அருளிச்செய்து, பிறகு தவத்தையுடைய உய்யக்கொண்டார் குருகைகாவலப்பன் இவர்களை நோக்கி நீங்கள் அநுவர்த்தித்தாவது என்குமாரன் குமாரனுக்கு (பேரனுக்கு) இந்த விசேஷார்த்தங்களையெல்லாம் சொல்லுவீர்களாக வென்றனர். (எ-று.) (௧௯)

௨௦. இயம்பியெழுத்தெட்டிதயத் திருத்தியொளிதிகழலகி லிரவிபோல, வயங்குமுயர்பரமபதத் தெம்பெருமான்றிருவடித்தாமரையேசால, நயந்தரியதவயோகத் திருந்தனனண்டவன்மருங்கு நண்ணியன்னுன், பயந்ததிருமகளெந்தாய் கேட்டியொருபுதுமையெனுப் பகர்வதானுள்.

(இ-ள்.) இப்படி அருளிச்செய்து திருவஷ்டாக்ஷரத்தைத் திருவுள்ளத்தில் வைத்துப் பிரகாசமுடைய கணக்கற்ற சூரியர்களைப்போல விளங்கும் உயர்ந்த பரமபதத்தி லெழுந்தருளியிருக்கும் எம்பெருமானுடைய திருவடித்தாமரைகளை மிகவும் விரும்பி அருமையான தவயோகத்தி லெழுந்தருளியிருந்தனர். அப்போது அவர்பெற்ற திருமகள் அவர் சந்நிதியையடைந்து எனது தந்தையே! ஒரு புதுமையைக் கேட்பீராக வென்று சொல்லத் தொடங்கினர். (எ-று.) (௨௦)

௨௧. குனிதவக்கைகொடுதிருவை நிகர்வனிதையொருத்தியொடுங் குரங்கிரேடும், மனிதரிருவோர்நமது மாளிகைவந்திருக்கின்றார் வருதியென்னப், பனிதருகண்ணொடும்புளக மெய்யினெடுமடியார்தம் பவங்கடீர்க்கும், புனிதவிராகவன்முதலோரனைத்திருமாளிகைவிரைவிற் போந்துகாணுன்.

(இ-ள்.) வளைக்கும் வில்லைக் கையிற்கொண்டு பெரியபிராட்டியாருக்குச் சமானமான பெண்ணொருத்தியோடும் ஒரு குரங்கோடும் இரண்டு மனிதர்கள் நமது திருமாளிகைக்கு வந்திருக்கின்றார்கள்; விருவீராக வென்றுரைக்க, ஆநந்தபாஷ்பம் வரும் திருக்கண்களோடும் புளகமுண்டாகும் திருமேனியோடும் அடியார்களது பிறவியைத் தீர்க்கும் ஸர்வலோகபாவநனான சக்ரவர்த்தித் திருமகன் முதலானவர்களென்று திருவுள்ளத்திற் கொண்டு தமது திருமாளிகைக்கு விரைவாக வந்து அவர்களைக் காணாதவராகி (எ-று) (௪௧)

இராகவன் முதலினோரென்றது சக்ரவர்த்தித் திருமகன் இளையபெருமாள் சீதாபிராட்டி திருவடி என்பவர்களை.

௪௨. மீண்டுதிருவீதியினோர்க் கேட்பவவனோரின்னே வில்லினோர்கள், ஈண்டுமெழில்வனிதையொடுங் குரங்கினொடும்போகின்றாரெனப்பின்னேகிக், காண்டுமெவனேனுமெனக் கங்கைகொண்ட சோழபுரங் காறுஞ்சென்றான், ஆண்டுமவர்க்காணகிலா னுடனுறவாப்பரமபதத் தவரைக்கண்டான்.

(இ-ள்.) திரும்பிவந்து திருவீதியிலுள்ளவர்களைக் கேட்க அங்குள்ளவர்கள், வில்லைத் தரித்த இருவர், கூடிய அழகையுடைய பெண்ணோடும் குரங்கோடும் இப்பொழுதே போகின்றார்களென்று சொல்லப் பின்னே போய் அவர்களை எங்கேனும் காணுவோமென்று கங்கைகொண்ட சோழபுரம் வரையிற் சென்றனர்; அவ்விடத்திலும் அவர்களைக் காணாதவராகித் திருமேனியைத் துறந்து பரமபதத்தில் அவர்களைச் சேவித்தனர். (எ-று.) (௪௨)

௪௩. தங்குரவன்பின்னேகிப் புண்டரிகனேமுதலோர் தனயனோடும், பொங்குதுயர்க்கடன்மூழ்கிப் புலம்பினராங்கயர்கருமம் புதல்வன்றன்னால், அங்குமுடித்தனர்குரவன் றுயின்றதலத்தினிற் குகையொன் றமைத்தியோகத், தெங்குரவற்றணக்கிலே னெனக் குருகைகாவலன்விற் றிருந்தானிப்பால்.

(இ-ள்.) தமது ஆசாரியர் பின்னேசென்று உய்யக்கொண்டார் முதலானவர்கள் அவரது திருக்குமாரரோடு மேலிட்ட துக்கசமுத்திரத்தில் மூழ்கி அழுது, செய்யவேண்டிய கிரியைகளைத் திருக்குமாரரால் அவ்விடத்தில் முடித்தனர். பிறகு தமது ஆசாரியர் திருக்கயிலமர்ந்த இடத்தில் குகையொன்றை யமைத்து எமது ஆசாரியரைப் பிரியமாட்டேனென்று குருகைகாவலப்பன் யோகத்தி லெழுந்தருளியிருந்தனர். (எ-று.) (௪௩)

௪௪. புண்டரிகனெனுமுய்யக் கொண்டானுநாதமுனி புகன்ற சால்புட், கொண்டவனிமிசைத்திருவாய் மொழிவிளங்கவிரித்தனுவுங் கோதில்ஞானத், தெண்டவர்களொடுமிருந்தா னக்காலத் துயர்குமுத னென்னுந்தேவன், மண்டனிலோர்மறையவன்பாலுதித்தனுஞ்சிராமனென வருத்தானமம்.

(இ-ள்.) புண்டரீகாக்ஷரென்னும் உய்யக்கொண்டாரும் ஸ்ரீமந்நாதமுனிகள் அருளிச்செய்த பிரகாரத்தைத் திருவுள்ளத்திற்கொண்டு பூமியின் மீது திருவாய்மொழி விளங்கும்படி பரவச்செய்து அணுவளவுங் குற்றமில்லாத ஞானத்தையுடைய தெள்ளிய தவத்தையுடையவர்களோடு மெழுந்

தருளியிருந்தனர். அக்காலத்தில் உயர்ந்த குமுதரென்னும் நித்ய சூரியர் பூமியிலிட்டத்து ஒரு பிராமணரிடத்தில் திருவவதாரஞ் செய்தலும் அவருக்கு ஸ்ரீராமரென்று திருநாமகரணஞ் செய்தனர். (எ-று.) (௪௪)

௪௫. அன்னவனையேமணக்கா னம்பியென்பரவன்முதலா வலகின்மேலோர், பன்னருஞ்சீர்ப்புண்டரிகன் பதத்தனுகிவழிபடுநாட் பகர்சிராமன், இன்னலுறுதிருபருவம் பரிந்தேத்தக்கருணையுளந் தெய்தநோக்கித், தன்னகத்துட்பொருளெவையு நவின்றுபொருட் சாமஞ்சபின் சாற்றுங்காலை

(இ-ள்.) அவரையே மணக்கால் நம்பியென்று சொல்வார்கள். அவர் முதலாக [illegible]ணக்கற்ற மேலோர்கள் சொல்லுவதற்கரிய வைபவத்தையுடைய உய்[illegible]க்கொண்டார் திருவடிகளை யாசிரயித்து வழிபடும்நாளில் யாவரும் சொல்லும் மணக்கால்நம்பி, வெறுப்படையாமல் இரண்டு பொழுதிலும் பிரீதியோடு வழிபட்டுவர அதனால் உய்யக்கொண்டார் தமது திருவுள்ளத்தில் கருணை மிகும்படி பார்த்துத் தமது திருவுள்ளத்திலுள்ள அர்த்தங்களெவற்றையும் அருளிச்செய்து பிறகு சரமசுலோகார்த்தத்தையும் அருளிச்செய்யும்போது, (எ-று.) (௪௫)

௪௬. சிராமமுனிவானு மவனிருதாள்பணிந்தெவர்க்குந் தேவனின்பேர், நாராயணன்சமய நிறுத்தயாராவரினி ஞாலத்தென்ன, ஆரார்வத்தெனையடைந்த முதலிகளெண்ணிலரோடு மண்ணினிடை, பாரார்வுறுவிருத்தி மேனாதமுனியாலன் பாலனுவான்.

(இ-ள்.) மணக்கால் நம்பியும் உய்யக்கொண்டாரது இரண்டு திருவடிகளைப்பணிந்து யாவருக்குந் தெய்வம்போன்றவரே! உமது திருநாமத்தையும் ஸ்ரீமந்நாராயணனுடைய சமயத்தையும் நிர்வகிக்கும்படி பூமியில் இனி யாராவர் என்று கேட்டருள, அவர், நிறைந்த பிரீதியோடு என்னை ஆசிரயித்த கணக்கற்ற முதலிகளோடு சேர்ந்து நீவிரே பூமியிலுள்ளவர்கள் பக்தி பெறும்படி இருப்பீராக; அதற்குமேல் ஸ்ரீமந்நாதமுனிகள் திருக்குமாரரான ஈசுவரமுனிகளுக்குத் திருக்குமாரரானவர் தர்சனநிர்வாஹகராவர். (எ-று.) (௪௬)

௪௭. அவனைவலிதடைந்தேனு நினக்குநவின்மறையனைத்து மறையியன்றான், நிவலகன்றிடத்திருமால் சமயநமர்யாவரினுந் திருத்தவல்லான், புவனமவனருளதனன் மிகவிளங்குமெனநவிலாப் புநீத்தெல்லும், பவமதகல்விபவமருடிருநாட்டிற்பரந்தாமன் பதத்தைச்சார்ந்தான்.

(இ-ள்.) நீவிர் அவரைப் பலாத்காரமாகச் சேர்ந்தாயினும் உமக்கு அருளிச்செய்த ரஹஸ்யார்த்தங்களை யெல்லாம் அருளிச்செய்வீராக; அவர் பூமியில் செழித்தோங்கும்படி பெரிய பிராட்டியாருக்கு நாயகனான பெருமானது சமயத்தை நம்மவர்கள் யாவரினும் திருத்த வல்லராவர். அவரருளாலே பூமி மிகவும் விளங்கும் என்று அருளிச்செய்து திருமேனியை நிவர்த்தித்துப் பிறப்பற்ற வைபவத்தை யளிக்கும் திருநாட்டில் பரமபத நாதனது திருவடிகளை யடைந்தனர். (எ-று.) (௪௭)

வேறு.

௪௮. பொருவினாதமா முனிவனும்புகழ்ப் புண்டரீகனும் வண்டறுத்தார், மருவுவார்குழற் றிருவினாயகன் வண்மையார்பதத் தொண்மையெய்தினார், ஒருவின்ஞானமுந் திருவுமானமு முண்மையாவையுந் திண்மைநேயமுந், தருமியாமுனைக் குருவின்மாக்கதைத் தன்மைகூறுவா நன்மையேறவே.

(இ-ள்.) ஒப்பற்ற பெருமைபொருந்திய ஸ்ரீமந்நாதமுனிகளும் கீர்த்தியையுடைய உய்யக்கொண்டாரும் வண்டுகள் நீங்காத மாலையையணிந்த கூந்தலையுடைய திருமகள் நாயகனுடைய திருவடிகளில் ஒழுங்குடனடைந்தார்கள். இனி நீங்காத ஞானமும் செல்வமும் பெருமையும் உண்மையானவையும் திண்மையான பக்தியும் அருளும் கொடுக்கும் யாமுநாசாரியரது விசேஷமான வைபவப்பிரகாரத்தை நன்மையுண்டாகும்படி சொல்லுவோம். (எ-று.) (௪௮)

ஸ்ரீமந்நாதமுனிகள், கலியுகம் ௩௪௮௩-ம் வருஷமான சோபகிருது வருஷம் ஆனிமாதம், சுக்லபக்ஷம் திரயோதசி அனுஷ நக்ஷத்திரம் புதவாரம் கூடின தினத்தில் திருவவதாரஞ்செய்து ௩௫௧ வருஷம் இந்நிலவுலகில் யோகவலியால் எழுந்தருளியிருந்தனர்.

உய்யக்கொண்டார், கலியுகம் ௩௩௨௭-ம் வருஷமான பராபவ வருஷம் சித்திரை மாதம் சுக்லபக்ஷம் பிரதமை கிருத்திகை புதவாரம் கூடிய தினத்தில் திருவவதாரஞ் செய்து இவ்வுலகில் ௪௦௫ வருஷம் எழுந்தருளியிருந்தனர்.

நாதமுனிச்சருக்கம் முற்றிற்று.

ஸ்ரீ

௧௩-வது யாமுநச்சருக்கம்.

௧. எண்ணருமுதலிகளுடனுமென்னையாள்
அண்ணலசீராமனுமனந்தன்மேற்றுயில்
பண்ணவன்சமயமாம்பயிர்க்குமேகமாய்
மண்ணவர்வணங்கியேவழுத்தவைகுநாள்

(இ-ள்.) கணக்கற்ற முதலிகளுடனும் என்னையாளும் பெருமையிற் சிறந்த மணக்கால்நம்பியும் திருவனந்தாழ்வான்மீது அறிதுயிலமரும் பெருமானது சமயமாகிய பயிருக்கு மேகமாகிப் பூமியிலுள்ளவர்கள் வணங்கித் துதிக்கும்படி எழுந்தருளியிருக்குங் காலத்தில், (எ-று.) (௧)

௨. மாதவன்றனதணிமணிச்சிங்காதனம்
ஏதமினாதமாமுனிவனீன்றருள்
காதலன்மனைவிபாற்கருப்பமல்குறுப்
பூதலத்துதித்தோர்புதல்வனாகியே.

(இ-ள்.) ஸ்ரீயப்பதியினது அழகிய மணிமயமான சிங்காசனமானது குற்றமற்ற ஸ்ரீமந்நாதமுனிகள் ஈன்றருளிய திருக்குமாரரான ஈசுவரமுனிகள் தேவியாரது கர்ப்பத்தில் நிறைந்து ஒரு புதல்வனாகிப் பூமியிலவதரித்தது. (எ-று.) (௨)

௩. பயந்தருண்முனிவனுநோக்கிப்பாலனை
நயந்தியாமுநப்பெயர்விதித்துநாள்களின்
அயர்ந்தவன்கருமமுமாபினையனும்
உயர்ந்தனன்மறையினிதோதன்மேயினன்.

(இ-ள்.) பெற்றளித்த ஈசுவரமுனிகளும் பாலனைப்பார்த்துப் பிரீதியுடையவராகி யமுனைத்துறைவர் என்னுந் திருநாமமிட்டுத் தகுந்த நாள்களில் செய்யவேண்டிய கருமங்களையும் செய்தனர். யாமுநாசாரியரும் முறையாக வளர்ந்து வேதத்தை யினிதாக அத்தியயநஞ் செய்யத்தொடங்கினர். (எ-று.)

௪. பொழுதொடுகுரவனையடைந்துபூங்கழல்
தொழுதவன்குணனுரைத்தடங்கித்தொன்மறை
பழுதறநவில்கெனநவின்றுபாங்கரின்
எழுதுசித்திரமெனவிருந்துகற்குநாள்

(இ-ள்.) பொழுதோடு ஆசாரியரை யடைந்து அவரது அழகிய திருவடிகளைத்தொழுது, வாழ்த்தி, அடக்கமாயிருந்து, பழமையான வேதத்தைக் குற்றமற அத்தியயநஞ் செய்வாயாக வென்று சொல்லத் தாம் அத்தியயநஞ்செய்து அவரருகே எழுதிய சித்திரம்போல இருந்து அப்பியசித்துக்கொண்டுவருநாளில், (எ-று.) (௪)

௫. ஓதுநூல்நெருநலென்னுளத்திலார்ந்ததிப்
போதுநவிறலென்பொருவிலாயிதன்
மீதுநீநவில்கெனுவிளம்புமேதையான்
யாதுமாங்கரிதெனத்தெளிதிற்கற்றனன்.

(இ-ள்.) ஓதிவருநூலில் சேர்ந்து என்னுள்ளத்தில் பதிந்ததான இந்தப் பாடத்தை மறுபடியும் இப்போது ஓதுதல் யாதுக்கு? ஒப்பற்றவரே! இதற்கு மேல் ஆகத்தக்க பாடத்தை நீர் சொல்லுவீராக என்று சொல்லும் ஞானத்தையுடையவராகி எதுவும் அருமையென்றுமல் எளிதில் கற்றனர். (எ-று.) (௫)

௬. கருதிநான்முறைமணம்புரிந்துதோன்றரும்
பொருண்மைமாபாடியம்புணரிசூழ்தரும்
இருநிலத்திவனேநேரிலரென்றேத்தல்சால்
ஒருகுரவனையடைந்தோதலுற்றனன்.

(இ-ள்.) வேதசாஸ்திர முறைப்படி கலியாணம் செய்துகொண்டு தோன்றுவதற்கரிய பொருளையுடைய மஹாபாஷ்யத்தைச் சமுத்திரஞ்சூழ்ந்த பெரிய பூமியில் இவருக்குச் சமானமானவர்களில்லை யென்று துதித்தல் மிகுந்த ஒரு ஆசாரியனையடைந்து கற்கத் தொடங்கினர். (எ-று.) (௬)

பாணினி பகவான் செய்த பாணினீயம் என்னும் இலக்கணத்துக்குப் பதஞ்சலிபகவான் செய்த உரை மஹாபாஷ்ய மெனப்பெறும்.

௭. அன்னவன்படிக்குநாளருக்கன்றொல்குல
மன்னவன்புரோகிதனொருவன்மாநிலத்
துன்னரும்பாடியத்துயர்ந்தயாவருந்
தன்னடிவணங்கவோர்தலைமைபூண்டுளான்.

(இ-ள்.) அவர் கற்றுவருநாளில் பழமையான சூரிய வம்சத்திலுதித்த சோழனுக்குப் புரோகித னொருவன், பெரிய பூமியில் நினைத்தற்கரிய மஹாபாஷ்யத்தில் வல்லவர்களான யாவரும் தன் அடியை வணங்கும்படி ஒரு சிரேஷ்டத்தன்மை யடைந்திருந்தனன். (எ-று.) (௭)

௮. அவனுயர்பாடியத்ததிகாரிகளோர்
எவரையுந்திறைகவர்ந்தினையிலயாமுனன்
உவகைகூர்குரவனுமுதவுவான்கரந்
தவலிலோலைச்சுருட்டாப்போக்கினான்.

(இ-ள்.) அப்புரோகிதனும் உயர்ந்த மஹாபாஷ்யத்தில் வல்லவரானவர்களெவரிடத்திலும் கப்பம் பெற்று, ஒப்பற்ற யமுனைத்துறைவர் விரும்பிய ஆசாரியரும் கப்பம் செலுத்துவதற்காகக் கெடுதலில்லாத ஓலைச்சுருட் கட்டளையை யனுப்பினன். (எ-று.) (௮)

௯. தாவுகொண்டதுமிகத்தளர்ந்துபாடியக்
குரவனுமாக்கையுற்றழுங்கக்கோதிலா
வரமுனியாமுனன்வருந்தனீரெனப்
பரவினன்சுருளினைப்பறித்துக்கீண்டனன்.

(இ-ள்.) மஹாபாஷ்ய ஆசாரியரும் அந்தக் கட்டளையைக் காணுதலும் மிகவும் தளர்ந்து துன்புற்று இரங்க, அப்போது குற்றமற்ற சிறப்புடைய மகநீயரான யாமுநாசாரியர் நீவிர் வருந்த வேண்டாவென்று கூறி ஆசாரியரை வணங்கி அச்சுருளை வாங்கிக் கிழித்துவிட்டனர். (எ-று.) (௯)

௰. ஆதிநாற்பாடகர்கவிகளாயுயர்
போதுமவர்களுளொருவரன்றியாம்
வாதிகளெனுமவர்மதத்தைநீக்கவிம்
மேதினிக்கரியெனும்பொருள்விளங்கவே

(இ-ள்.) வேதபாடகர்களாயும் கவிகளாயும் உயர்வாகச் சொல்லுமவர்களில் யாம் ஒருவரல்லேம்; இப்பூமியில் வாதிகளாயுள்ள யானைகளின் மதத்தை யொழிக்கச் சிங்கமாயுள்ளேம் என்னும் பொருள் விளங்கும்படி (எ-று.) (௰)

௧௧. நுனைவினிற்கிரந்தமொன்றுரைத்துத்தொண்டினை
வினையுரைப்போன்கரத்துதவவெய்தினிற்
றனைவிடுத்தருள்புரோகிதனைச்சார்ந்தவன்
இணைதனுற்றிருபதமிறைஞ்சியீந்தனன்.

(இ-ள்.) விரைவில் கிரந்தமொன் றருளிச்செய்து தொண்டு செய்வதோடு காரியஞ் சொல்லுவோன் கைகளிற் கொடுக்க, அவன் விரைவாகத் தன்னை அனுப்பின ராஜபுரோகிதனைச்சார்ந்து வருந்தி அவனது இரண்டு பாதங்களையும் வணங்கிக் கொடுத்து, (எ-று.) (௧௧)

௧௨. சொற்றனன்சுருள்கிழித்ததுவுந்தொல்புவிக்
கொற்றவன்புரோகிதன்கொதித்துவேந்தன்மாட்
டுற்றவன்வலிநவின்றவன்றனோலையை
மற்றயாமுநன்மிசைவலிதினேவினான்.

(இ-ள்.) கட்டளைச்சுருளைக் கிழித்ததுவும் சொல்லினன். பழமையான பூமிக்கு அரசனது புரோகிதன் கோபித்து அரசனிடத்தடைந்து அவரது வலிமையைச் சொல்லி அரசனது ஓலையை யாமுநாசாரியர் மீது பலாத்காரமாக விட்டனன். (எ-று.) (௧௨)

௧௩. காண்டலுநகைத்தியாமுநனுங்காசினி
ஆண்டவனிருபமுங்கிழிப்பவாங்கது
மீண்டவன்றூதனுநவிலவேந்தனும்
ஈண்டவற்காண்குவாமென்னுமாசையான்

(இ-ள்.) அதைக் காணுதலும் யாமுநாசாரியரும் நகைத்துப் பூமியையாளுமரசனது நிருபத்தையும் கிழித்துவிட, அதனை அவன் தூதனும் மீண்டு போய்ச் சொல்ல, அரசனும் இவ்விடத்தில் அவரைக்காணுவோ மென்னும் விருப்பமுடையவனாகி (எ-று.) (௧௩)

௧௪. கதிர்மணிச்சிவிகையுங்கழையும்பைங்கதிர்
எதிர்மணிக்கலன்களுமினிதினேவலும்
முதிர்குரல்யாமுநமுனியுமும்முர
சதிர்கடையரசர்கோனவையைநண்ணினான்.

(இ-ள்.) பிரகாசமுடைய மணிமயமான பல்லக்கும் கொடியும் பசிய ஒளியை வீசும் ரத்தினங்களிழைத்த ஆபரணங்களும் இனிமையோடு அனுப்புதலும் முதிர்ந்த மிடற்றோசையையுடைய யாமுநாசாரியரும் மூன்று பேரிகைகளும் ஒலிக்கும் தலைவாசலையுடைய ராஜசபையை யடைந்தனர். (எ-று.)

கரு. செழுந்தமணியமணிச்சிகரமேருவின்
அழுந்தவோர்புலிபொறுத்தவளியாண்டருள்
தொழுந்தகைவளவனுஞ்சுருதிநாதனை
எழுந்தருள்கெனவெழுந்திருக்கையீந்தனன்.

(இ-ள்.) அப்போது, செழுமையான பொன்மயமாய் அழகிய சிகரத்தையுடைய மேருவினிடத்துப் பதியும்படி ஒப்பற்ற புலிக்கொடியை நாட்டிப் பூமியை யாண்டருளுந் தொழக்கூடிய பெருமையையுடைய சோழராசனும் வேதமே யுருக்கொடுவந்தது போன்ற யாமுநாசாரியரை எழுந்தருள்வீராக வென்று கூறித் தான் எழுந்திருந்து ஆசனங்கொடுத்தனன். (எ-று.) (கரு)

வேறு.

கசு. உமைபதத்தளிராற்புனிதமாஞ்சார விமயமால்வரைக்கு
நீருவகை, அமைநிகர்திருத்தோட்சனகியானனத்தா மரைக்கரு
ளணியசேதுவுக்கும், சமைசெவிதநுணராமிருசுடருதயாத் தம
கிரிக்கிடையதாந்தலத்துள், எமைநிகர்த்திடவேறொருவனைத்தே
டற் கரிதெனக்கவியிசைத்தெழுதா

(இ-ள்.) உமாதேவியாருடைய பாதங்களாகிய தளிர்களாலே பரிசுத்தமடைந்த சாரலையுடைய பெரிய இமயகிரிக்கும் பெரிய உவப்பையருளும் மூங்கில்போன்ற திருத்தோள்களையுடைய சானகிப் பிராட்டியாருடைய திருமுகமாகிற தாமரையிலுள்ள திருவருள் நெருங்கிய சேதுவுக்கும், சந்திர சூரியர்கள் கர்ணபுஷ்பங்களாயமைந்த உதயகிரிக்கும் அஸ்தமயகிரிக்கும் இடைப்பட்ட பூமியில் எம்மை நிகர்க்கும்படி வேறொருவனைத் தேடுவதற்கு அரிதென்று ஓர் கவியை யருளிச்செய்து எழுதி (எ-று.)

கஎ. மறைமுதன்முனிவோர்வரகவிவிபுதர் மருவவேமனைவி
யோடிருந்த, இறையவைஞாங்கரெழுதுபத்திரமீ திமிழ்த்தியாமு
நமுனியிருந்தான், அறைகழலரசுமெம்புரோகிதனோ டறைதிநீ
வாதமென்றருளா, நிறையமைதலைவிதிருமுக்நோக்கா யாவர்வெல்
பவர்நிகழ்த்தென்றான்.

(இ-ள்.) வேதங்களையுணர்ந்த முதன்மைவாய்ந்த முனிவர்களும், வரகவிகளில் வல்ல அறிஞர்களும், சூழ்ந்திருக்கத் தன் மனைவியுடனிருந்த மன்னன் சபையினிடத்தில் சித்திரமெழுதிய ஆசனத்தின்மீது கர்ச்சனையையுடைய யாமுநாசாரிய ரிருந்தனர். ஒலிக்கும் வீரகண்டையைத்தரித்த அரசனும் எமது புரோகிதனோடு நீ வாது செய்வாயாக வென்று சொல்லி, நிறையமைந்த தனது மனைவியின் அழகிய முகத்தைப்பார்த்து இப்போது யார் வெல்வார்கள் சொல்லுவாயாக வென்றனன். (எ-று.) (கஎ)

கஅ. ஈசனேயெதிர்வந் திகலினும்வெல்வோன் யாமுநமுனிவ
னேயென்றாள், வாசவார்வேந்துமவனிடைந்தனனேல் வஞ்சினம்
யாதெனமயிலும், பூசல்வாய்ஞமலிக்குணவெரித்திடுவ னென்ற
னள்புரோகிதனிடையிற், காசணிமுலையாய்காசினிபாகந் தருவ
லென்றனன்புகழ்ச்சண்டன்.

(இ-ள்.) ஈசனே எதிரிட்டுவந்து பகைத்தாலும் வெல்லுமவர் யாமுந முனிவரே யென்றனள். பொருந்திய அரைக்கச்சையணிந்த அரசனும் அந்த யாமுநாசாரியர் தோற்றாராயின் என்ன சபதம் என்றனன்; மயில்போன்ற தேவியும் குலைக்கும் வாயையுடைய நாய்க்கு உணவைச் சமைத்திடக்கடவேனென்று சொல்லினள். அதற்குப் புகழையுடைய சோழன், புரோகிதன் தோற்றானாயின் வடங்களணிந்த தனங்களையுடையவளே! எனது பூமியில் பாதிபாகந்தருவே னென்றனன். (எ-று.) (கஅ)

வேறு.

ககூ. வளவனுந்தேவிதானுஞ்சபதமிம்மாபேசுறும்
அளவையினயன்வாயிற்புரோகிதனாக்கியாழ்வான்
குளவனல்விழியானக்கபாதன்மேற்கோபித்தாலென்னத்
துளவமாலனையயாமுநற்கெதிர்சுளித்துச்சொல்வான்.

(இ-ள்.) சோழனும் அவனது தேவியும் இப்படி சபதங்கூறுமளவில் சோழனது வாயிற் புரோகிதனான ஆக்கியாழ்வான், நெற்றியில் நெருப்புக் கண்ணையுடைய சிவபிரான் அக்ஷபாதராகிய திருமழிசைப்பிரான்மீது கோபித்ததுபோலத் திருத்துழாய்மாலையணிந்த பெருமானுக்குச் சமானமான யாமுநாசாரியருக்கு எதிராகக் கோபித்துச் சொல்லுவானாயினன். (எ-று.)

உ0. இகலியன்றென்றதாமென்றிசைப்பலாமென்றவெல்லாம்
சகமதித்திடவன்றென்பனிம்முறைதருக்கமாறாய்ப்
புகவிடத்திடைந்துளோர்க்குப்பாதகம்புகல்வாய்ச்சுணம்
பகர்திமுந்துறநீயென்னயாமுநன்பகர்வதானான்.

(இ-ள்.) பகைத்து, நீ அல்ல என்றதை நான் ஆம் என்று சொல்லுவேன்; ஆம் என்றதை யெல்லாம் அல்ல வென்று சொல்வேன்; இம்முறையே மாறுபட்டு வாது பேசுமிடத்துத் தோற்றவர்களுக்குரிய சபதம் பாதகத்தையைச் சமத்தலாகும். ஆகவே முன்னே நீ சொல்லுவாயாக வென, யாமுநாசாரியர் சொல்லத் தொடங்கினர். (எ-று.) (உ0)

உக. உன்னையீன்றருடாய்வந்தையலன்சடலுலகிற்கெல்லாம்
அன்னையேயரசன்றேவியருந்ததியனையகற்பாள்
என்னையுத்தரநீசொல்லெனச்சமழ்ந்திருந்தான்பின்னர்
முன்னைநாட்சுருதியாதிபனுவலான்முழுதும்வென்றான்.

(இ-ள்.) உம்மைப்பெற்ற தாயானவள் மலடி யல்லள்; கடல்சூழ்ந்த உலகத்திலுள்ளவர்களுக் கெல்லாம் அன்னையைப் போன்ற அரசன் மனைவி அருந்ததிபோன்ற கற்பையுடையவள்; (இதற்கு) நீ என்ன பதில் சொல்வீர் என்று கூற, (புரோகிதன் ஒன்றும் பதிலுரையாமல்) நாணியிருந்தனன். அதன் பிறகு முன்னை நூலாகிய வேதமுதலான சாஸ்திரங்களாலும் (யாமுநாசாரியர் ராஜபுரோகிதரை) முழுதும் வென்றனர். (எ-று.) (உக)

உமது தாய் புத்திரவதி, இராஜபத்தினி ஏகபதிவிரதை என்று ஸ்ரீ ஆளவந்தா ரருளிச்செய்ததை ஆக்கியாழ்வான் மறுத்துரைக்க வேண்டுமாயின் தன்றாய்க்குத்தான் குமாரனாயிருத்தலால் அவளை மலடியென்று சொல்லவும் இராஜபத்தினி ஏகபதிவிரதையல்லள் என்று சொல்லவும் வகைகாணாது திகைத்தனரென்க. அரசன் வேண்டுகோளால் ஸ்ரீ ஆளவந்

தார் தாமே இவற்றை மறுத்துரைத்தபோது, "ஒருமரமுந் தோப்பல்ல ஒரு பிள்ளையும் பிள்ளையல்ல" என்று சொல்வதுண்டாதலால் ஆக்கியாழ்வான் தன் தாய்க்கு ஒரே புதல்வராதலால் அவர் தாய் வாழைமலடி என்றுரைத்தனரெனவும், பெண்கள் சந்திரனுக்கும், கந்திருவனுக்கும் அக்கினிக்கும் உரியோராயிருந்ததன்பிறகே ஒரு புருஷனுக்கு மனைவியாவர் என்று சாஸ்திரங்கள் சொல்லுவதால் சாஸ்திர முறைப்படி ராஜபத்தினி ஏக பதிவிரதை யன்றெனவும் எடுத்துக் காட்டினரென்க.

௨௨. தோற்றவர்க்குரியசுண்ணம்பதத்தினிற்றெடுதோலென்றீண்
டாற்றனிபுகன்றாய்வேந்தன்புரோகிதனுதலானும்
ஏற்றமார்குலத்தோயாதலானுமீதிழையேனிச்சூள்
சாற்றவுங்கருதேனென்றான்சகமெலாமதிக்கத்தக்கோன்.

(இ-ள்.) தோல்வியடைந்தவர்களுக்குரிய சபதம் பாதரக்ஷையைச் சுமத்தல் என்று இவ்விடத்தில் வலிமையுடன் நீவிர் சொல்லினீர்; ஆயின் நீர் அரசனது புரோகிதராதலாலும் சிறப்புடைய பிராமண குலத்திற் பிறந்தவராதலாலும் இதனை விதிக்கவுமாட்டேன்; இந்தப் பிரதிக்கினையைச் சொல்லவும் நினைக்கமாட்டேனென்றனர் உலகமெல்லாம் மதிக்கத் தகுந்த யாமுநாசாரியர். (எ-று.) (௨௨.)

௨௩. வென்றயாமுநன்றாள்சென்னிபுரோகிதன்வீழ்ந்துபோற்றி
அன்றவற்கடியனானனெழுந்தனளரசன்றேவி
சென்றனடழீஇத்தாள்வீழ்ந்தின்றெனதுசூள்சிதைவுதாக
தென்றனையாளவந்தாரோவெனுவிசைத்துநின்றாள்.

(இ-ள்) இப்படி வென்றவரான யாமுநாசாரியரது திருவடிகளில் சோழராசனது புரோகிதர் விழுந்து துதித்து அன்று அவருக்கு அடிமையாயினன். அப்போது அரசன் மனைவி எழுந்து சென்று தழுவிக்கொண்டு யாமுநாசாரியரது திருவடிகளில் விழுந்து இப்போது எனது சபதம் கெடாமல் என்னை ஆளவந்தவரோ நீர் என்று சொல்லி நின்றனள். (எ-று.) ()

௨௪. பணிந்தனளரசெற்கித்தபாதிகாட்டிகட்கீந்தேன்
அணிந்தநூன்மார்பத்தண்ணலென்றனளரசன்றானுந்
துணிந்தவன்றன்னைவென்றாய்நீகடற்றுயின்மாலென்னத்
திணிந்ததோள்படியிற்றோயப்பணிந்துயர்சிறப்புமிக்கான்.

(இ-ள்.) பணிந்தவளாகி அரசன் எனக்குக்கொடுத்த பாதிராச்சியத்தை ஸ்வாமிகட்குக் கொடுத்துவிட்டேன் முப்புரிநூலணிந்த திருமார்பையுடைய பெருமையிற் சிறந்தவரே! என்றனள். அரசனும் துணிவடைந்து புரோகிதரானவரை வென்றீரே நீர் கடலில் அறிதுயிலமரும் பெருமானென்று வலிமையையுடைய தோள்கள் பூமியிற் படியும்படி பணிந்து உயர்ந்த சிறப்புக்களை அதிகமாகச் செய்தனன். (எ-று.) (௨௪)

௨௫. அகமகிழ்ந்தரசன்றேவியாளவந்தாரென்றன்பாற்
பகர்மொழிதன்பேராகப்பார்புரந்தனனிப்பான்மை
புகலருந்தகைமைசான்றபுண்டரீகன்றாள்போற்றுந்
தகளில்சீராமன்கேளாக்காண்குவான்றுனேவிவந்தான்.

(இ-ள்.) மனமகிழ்ந்து சோழராசன் மனைவி ஆளவந்தார் என்று அன்போடு சொல்லிய மொழி தமது திருநாமமாகும்படி யாமுநாசாரியர் அப்பூமியைக் கைக்கொண்டு ஆண்டனர். இந்த விதத்தைச், சொல்வதற்கரிய பெருமை நிறைந்த உய்யக்கொண்டாருடைய திருவடிகளைப் போற்றும் குற்றமற்ற மணக்கால்நம்பிகள் கேட்டு அவரைக் காண்பதற்காக விரைவாக வந்தனர். (எ-று.) (௨௫)

௨௬. புவிபுரந்தருளுநீர்மைப்புரந்தரன்பொருவப்பொற்பூந்
தவிசினிலிருந்துவாழும்யாமுநன்றன்பாற்றன்சொல
நவில்பவரொருவர்க்காணுன்வாயில்வாரணத்தானுளும்
அவிர்கதிர்மணிப்பூணணையவையினுமனுகலாற்றான்.

(இ-ள்.) பூமியையாளும் தன்மையாலே தேவேந்திரனுக்குச் சமானமாகப் பொன்மயமான அழகிய ஆசனத்திலிருந்து வாழ்ந்துகொண்டிருக்கும் யாமுநாசாரியரிடத்தில் தமது சொல்லைக் (கொண்டுபோய்ச்) சொல்லுமவரொருவரையுங் காணாதவராயும் வாசற்றடையினாலே மிக்க பிரகாசமுடைய ரத்தினங்களிழைத்த ஆபரணங்களையணிந்த யாமுநாசாரியரை ஒவ்வொரு தினமும் ராஜசபையிலும் போய்க் காணமுடியாதவராயும், (எ-று.) (௨௬)

௨௭. தெருமராவிவ்வினைக்காணும்விரகியாதெனத்தன்சிந்தை
ஒருமையாரோர்ந்தங்கன்னான்மடைப்பளிக்குரியோர்பாங்கர்
அருமையானுறுதிருங்கோவினிமையாலயில்சிற்றுண்டி
பொருந்விலீருரைமினென்னத்தூதுளைப்போதாமென்றார்.

(இ-ள்.) இப்படி கலங்கி, இவரைப்பார்க்கும் உபாயம் என்னவென்று தமது சிந்தையொன்றுடனே யோசித்து அவரது மடைப்பள்ளிக்கு உரியவர்களிடத்தில் கஷ்டப்பட்டுச் சென்று உமது அரசன் இனிமையோடு உட்கொள்ளும் பதார்த்தத்தை ஒப்பற்றவர்களே! சொல்லுவீர்களாக வென்று கேட்க அவர்கள் தூதுளைப்பூ என்று சொன்னார்கள். (எ-று.) (௨௭)

௨௮. இனியதூதுளைப்பூக்கொய்தாண்டோராறுதிங்களீந்தான்.
புனிதயாமுநனுந்தேராதிருத்தலாற்புகழ்சீராமன்
நனிதளர்ந்தொருநாணல்காதொழிதலானுட்டுஞ்சேப்பக்
குனிபிருகுடியிச்செல்லமடையரைக்கொதித்துநோக்கா

(இ-ள்.) அவருக்கு இனிமையான தூதுளைப்பூவைப் பறித்துவந்து அங்கு ஓராண்டு காலங் கொடுத்தனர். அதற்குப் பரிசுத்தரான யாமுநாசாரியர் தம்மை உணராமலிருத்தலால் கீர்த்தியையுடைய மணக்கால்நம்பிகள் மிகவுந் தளர்ந்து ஒருநாள் கொடாமல்விட்டதினாலே யாமுநாசாரியர் கண்கள் சிவக்கும்படி வளைந்த புருவம் மேலே போகும்படி மடைப்பள்ளியிலுள்ளவர்களைக் கோபித்துப் பார்த்து (எ-று.) (௨௮)

௨௯. அடுதுணர்த்தூதுளைப்போதயர்ந்தவாறறைமினென்ன
வடுவிலாய்கேண்மோமுந்தவிணைவனொருவனாளும்
இடுவனின்றயர்ந்தானென்னவவனைநீரெம்முன்னை
விடுமெனவவ்ருமன்னான்றன்னையம்முறையேவிட்டார்.

(இ-ள்.) நித்தமும் சமைக்கும் கொத்தாயிருக்கும் தூதுளைப்பூவை மறந்தவிதம் சொல்லுங்களென்று கூறக் குற்றமற்றவரே! கேட்பீராக; முதுமைப்பருவமுள்ள ஸ்ரீ வைஷ்ணவரொருவர் தினமும் கொண்டுவந்து கொ

டுப்பார்; இன்று மறந்தனர் என்று கூற, அவரை நீங்கள் எமக்குமுன்னே நாளைத்தினம் கொண்டுவந்து விடுங்களென்று சட்டளையிட்டேன். அவர்களும் மறுநாள் (தூதுளைப்பூவைக் கொண்டுவந்த) மணக்கால்நம்பிகளை அப்படியே கொண்டுவந்து விட்டார்கள். (எ-று.) (௯)

௧௦. எதிரெழுந்திறைஞ்சிப்போற்றியிருக்கைசயீந்துகட்டின்பம்
முதிர்கதிர்திதியோபாரோமொழிகெனுமுதுநான்ஞான
மதிநிகழாளவந்தான்வினவனுமணக்காலநம்பி
புதியவைவிரும்பேனென்பாற்பழையநும்பொருளுண்டென்றான்.

(இ-ள்.) அப்போது பழமையான நூல்களிற் சொல்லும் ஞானம் நிறைந்த மதி விளங்கும் ஸ்ரீ ஆளவந்தார் எதிராக எழுந்து வணங்கி வாழ்த்தி ஆசனங்கொடுத்து ஸ்வாமிகளுக்கு வேண்டுவது மிக்க பிரகாசமுடைய பொருளோ? பூமியோ? சொல்லுவீர்களாக வென்று கூறுதலும் மணக்கால் நம்பிகள் புதியவையான இவைகளை நான் விரும்புவேனல்லேன்; என்னிடத்தில் பழமையான உங்களுடைய பொருளுண்டென்றனர். (எ-று.) (௧௦)

௧௧. உனக்கதற்கருள்வானுட்கொண்டடைந்தனனுன்மூதாதை
தனக்குமாறுதவவன்றான் புண்டரீகனுக்குத்தந்தான்
எனக்கவனளித்தானஞ்சாப்பொருளெலாமினிநீகோடி
மனக்கினிதழியாச்செல்வமென்றனன்மணக்காநம்பி.

(இ-ள்.) உமக்கு அதனைக் கொடுப்பதற்காக எண்ணி வந்தேன்; உமது பாட்டனாருக்கு ஆழ்வாரளிக்க, அவர் உய்யக்கொண்டாருக்குக் கொடுத்தனர்; அவர் எனக்குக் கொடுத்தனர்; அந்தக் குறையாப் பொருளையெல்லாம் இனி நீர் கொள்ளுவீராக; அது மனதுக்கு இனியது; அழியாத செல்வம் என்றனர் மணக்கால்நம்பிகள். (எ-று.) (௧௧)

௧௨. யாமுநமுனியும்பேணியன்றுதொட்டேமவாயில்
தோமுனிமுலிக்கின்றுக்கித்தடையெமர்தொன்மைத்தாக
நீமுனநவின்றகேடில்பொருளினைநிகழ்த்தென்றேத
மாமுனிவரனுங்கீதைவைகலீரொன்பான்சொற்றான்.

(இ-ள்.) யாமுநாசாரியரான மாநீலரும் விரும்பி அன்று முதல் குற்றங்களைக் கோபித்த மணக்கால்நம்பிகளுக்குக் காவலுடைய வாசற்றடை இல்லையாகச் செய்து, எங்கள் பெரியோர்களது பழமையானதாக நீவிர் முன்பு அருளிச்செய்த கெடுதலில்லாத பொருளை அருளிச்செய்வீராக வென்று சொல்லப், பெருமை பொருந்திய முனிசிரேஷ்டரான மணக்கால்நம்பிகளும் கீதாசாஸ்திரத்தைப் பதினெட்டுத் தினங்களில் சொல்லியருளினர். (எ-று.)

௧௩. அறைதொறுந்துலங்கிச்சித்தமடிபணிந்தடியேன்காணக்
குறையிலப்பொருளைக்காட்டுகெனப்பொருட்சரமங்கூறி
நிறையணியரங்கத்தன்றுநெடுசெவ்நீலமேனி
இறைவனைக்காட்டிக்காண்டிநும்பொருளிதுவேயென்றான்.

(இ-ள்.) இப்படி அருளிச்செய்யுந்தோறும் சித்தம் அலக்கமடைந்து யாமுநாசாரியர் மணக்கால்நம்பிகளுடைய திருவடிகளை வணங்கி அடியேன் காணும்படியாகக் குறைவில்லாத அப்பொருளைக் காட்டுவீராக வென்று கூற, மணக்கால்நம்பிகள் சரமசுலோகார்த்தத்தை யருளிச்செய்து நிறை

ந்த அலங்காரத்தையுடைய திருவரங்கத்துக்கு யாமுநாசாரியரோடு சென்று நீலநிறமுடைய திருமேனியையுடைய பெருமானைக் காட்டிக்கொடுத்து உங்கள் பொருள் இதுவே என்றனர். (எ-று.) (௧௩)

௧௪. பவப்பிணிமருந்தாய்நாளம்பயக்குமெட்டெழுத்தைப்பாரித்
துவப்பினிலுபதேசித்தான்யாமுநனுலவாக்காட்சி
இவப்பினிற்றுறந்துபூண்டாங்கரியருணிறைந்துநாலத்
தவப்பிணிகடந்தமென்றுவிருந்தனனரங்கக்கோயில்.

(இ-ள்.) பிறவிப்பிணிக்கு மருந்தாகி அர்த்தபஞ்சகஞ்ஞானத்தை யளிக்கும் திருவஷ்டாக்ஷரத்தை விரித்து உவப்போடு உபதேசித்தனர். பிறகு யாமுநாசாரியர் கெடாத ஞான உயர்ச்சியினாலே துறவறத்தைக் கைக்கொண்டு பெருமானது திருவருள் பரிபூரணமாகப் பூமியில் பயனற்ற நோயைக்கடந்தோமென்று திருவரங்கத் திருக்கோயிலில் எழுந்தருளியிருந்தனர். (எ-று.) (௧௪)

௧௫. அலகிலாஞானசித்தியழிவிலான்மாவின்சித்தி
இலகுமாலீசன்சித்தியென்னுமுப்பனுவலேத்தல்
பலவிதத்தரியகீதைசங்கிரகமியன்சோபானமை
நலபுருடார்த்தமாகமப்பிரமாணமுநூலே.

(இ-ள்.) அலகிடப்படாத ஸம்வித்ஸித்தி அழியாத ஆத்மஸித்தி விளங்கும் பெருமை நிறைந்த ஈசுவரஸித்தி ஆகிய மூன்று நூலான ஸித்தித்ரயமும், ஸ்தோத்ரரத்நமும், பலவிதத்தாலும் பொருளருமையுடைய கீதார்த்தஸங்க்ரஹமும், நிலைபெற்று எம்பெருமானைச் சேர்ந்த குணத்தையும் அக்குண நலமுடைய புருஷனையும் நிச்சயித்துரைக்கும் பொருளுடையதான மஹாபுருஷநிர்ணயமும் ஆகமவழியான ஆகமப்ரமாணம் என்னும் பெயருடைய நூலும் (எ-று.) (௧௫)

௧௬. கோதிலுற்பனுவலருளிவிளங்குகாட்டுமுதக்கண்ணான்
நீதியாசங்கன்னமாவையுருடணீரமை
வேதியாவாமநசில்சுமுகன்புண்டரிகன்போரா
ஆதிமால்பதநீத்தாழிபவனிமீதுதித்தாரன்றே.

(இ-ள்.) குற்றமற்ற சதுசுலோகியும் அருளிச்செய்து விளங்கும் காலத்தில் குமுதாக்ஷர், நீதியையுடைய சங்ககர்ணர், அமானவபுருஷர், நன்மைகுன்றாத வாமநர், குற்றமற்ற சுமுகர், புண்டரிகர் ஆகிய இவர்கள் ஒருவராலும் பெறாத காரணபூதனான பெருமானது பரமபதத்தை விட்டுக் கடல்சூழ்ந்த பூமியின்மீது அவதரித்தது. (எ-று.) (௧௬)

௧௭. தெருட்டரும்பெரியநம்பிதிருவரங்கேசன்சிலம்
அருடிருக்கச்சிநம்பியருட்டிருமாலையாண்டான்
திருமலைநம்பிகோட்டியூர்நம்பியெனவந்தேவர்
பொருவரும்பெயராக்கோயிலரங்கமாநகருட்புக்கார்.

(இ-ள்.) ஞானமளிக்கும் பெரியநம்பிகள், திருவரங்கப்பெருமாளரையர், சீலகுணத்தை யருளும் திருக்கச்சிநம்பிகள், திருவுடையுடைய திருமாலையாண்டான், திருமலைநம்பி, திருக்கோட்டியூர்நம்பி என்று அந்த நித்திய சூரிகளுக்கு ஒப்பற்ற திருநாமமாகக் கோயிலான திருவரங்கமாநகரத்தில் பிரவேசித்தனர். (எ-று.) (௧௭)

௩௮. புகலிடங்கடவுளின்றாளென்றியாமுனனைப்போற்ற
இகலிடந்தவனுமாட்கொண்டெட்டெழுத்திசைத்தானன்றோர்
பகலிடங்கரைவென்றோன்றாள்பரவியாமுனன்றன்பாதத்
தகலிடந்தனில்வாழ்மேலோரலகிலாரடிமையானார்.

(இ-ள்.) அடைக்கலஸ்தானம் தெய்வத்தன்மையுள்ள உமது திருவடிகளே யென்று யாமுனாசாரியரைத் துதிக்க, தமக்குப் பகையானவற்றை வென்ற யாமுனாசாரியரும் அவர்களை யடிமைகொண்டு திருவஷ்டாக்ஷரத்தை உபதேசித்தருளினர். அக்காலத்தில், ஒருதினம் கஜேந்திராழ்வானை வருத்திய முதலையை வென்ற பெருமானது திருவடிகளை வணங்கும் யாமுனாசாரியாரது திருவடிகளில் பூமியில் வாழும் கணக்கற்ற மேலோர்கள் அடிமையானார்கள். (எ-று.) (௩௮)

௩௯. அருட்சடகோபன்கூறும்மறைமுதலரிய நூல்கள்
பொருட்படவவர்கட்கோதியுறைபுநாட்புனிதகல்கா
இருட்பவமகற்றுஞ்சொற்சிராமனுண்டெய்தியெந்தாய்
தெருட்டருமொருசொற்கேட்டியெனவிவைதெரிக்கலுற்றான்.

(இ-ள்.) திருபாவடிவமான ஆழ்வார் அருளிச்செய்த தமிழ்வேதம் முதலிய அருமையான நூல்களைப் பொருள்படும்படி அவர்களுக்கு அருளிச்செய்து எழுந்தருளியிருக்கும் நாளில், பரிசுத்தந்தை யளித்து இருள் மயமான பிறவியை நீக்கிய வாக்கையுடையவரான மணக்கால் நம்பிகள் அவ்விடத்துக்கு எழுந்தருளி, ஸ்வாமீ! ஞானமளிக்கும் ஒரு சொல்லைக் கேட்பீராகவென்று இவற்றைத் தெரிவிக்கலாயினர். (எ-று.) (௩௯)

௪௰. உனதுமூதாதையோகமறையுனக்குதவும்வண்ணம்
மனனுறக்குருகேசற்கன்றிசைப்பமற்றவனுமாயோன்
தனதுதாள்கருதியோகத்திருந்தனனவணிசார்ந்து
வினவுகென்றிடமுங்கூறயாமுனன்விரைவிற்சென்றான்.

(இ-ள்.) உமது பாட்டனாரான ஸ்ரீமந்நாதமுனிகள் யோகரகசியத்தை உமக்கு அளிக்கும்படிக்கு மனதிலூன்றும்படி குருகைகாவலப்பனுக்கு அக்காலத்திலருளிச்செய்ய, அவரும் ஆச்சரிய குண, சேஷ்டிதங்களையுடையவனான பெருமானது திருவடிகளைச் சிந்தித்து யோகத்திலிருந்தனர்; அவ்விடத்துக்கு நீவிர் சென்று கேட்பீராக வென்று இடத்தையு மருளிச்செய்ய, யாமுநாசாரியர் அங்கு விரைவாகச் சென்றனர். (எ-று.) (௪௰)

௪௧. எண்ணில்பாகவதர்சூழக்குருகைகாவலன்பாலெய்திக்
கண்ணிறைப்பருகுவான்போனோக்கிமால்கமலபாதம்
நண்ணியோகச்சமாதிசிதைத்திடினவையாமென்று
உண்ணினைந்துரையான்றோணக்குகைப்புறத்துறைந்தானன்றே.

(இ-ள்.) கணக்கற்ற பாகவதர்கள் சூழும்படி குருகைகாவலப்பன் இடத்துக்கு வந்தடைந்து, கண்ணினாலே அவரைப் பருகுவாரைப்போலே சேவித்து, பெருமானது கமலம்போன்ற திருவடிகளை யடைந்த யோக சமாதியைக் கெடுத்தால் தோஷமாகுமென்று திருவுள்ளத்தில் நினைந்து பேசாமல் தூரத்தே குகையில் எழுந்தருளியிருந்தனர். (எ-று.) (௪௧)

௪௨. விழிதிறந்தெழுந்துஞானத்துணர்ந்தியார்விளங்குந்தொல்சீர்
ஒழிவிலாதுயர்ந்தசொட்டைக்குலத்தினனுற்றாரென்ன
அழிவிலாக்குருகைகாதன்வினவவாங்கடியேனென்னாப்
பொழிகணீர்புளகத்தோடும்பணிந்தியாமுநனும்போற்ற

(இ-ள்.) கண்களைத் திறந்தெழுந்து ஞானத்தினாலே புணர்ந்து விளங்கும் பழமையான வைபவம் ஒழியாமல் அபிவிருத்தியடைந்த சொட்டைக் குலத்தி லுதித்த யாவர் இவ்விடத்துக்கு வந்தார்களென்று கெடுதியில்லாத குருகைகாவலப்பன் கேட்டருள, அவ்விடத்தில் யாமுநாசாரியரும் அடியேனென்று கூறிப் பொழியும் கண்ணீரோடும் புளகத்தோடும் பணிந்து துதித்து, (எ-று.) (௪௨)

௪௩. உன்றனியோகநோக்கிமருங்குறாதுரையாடாது
சென்றயற்குகையின்மன்னிச்சேணிடையிருந்தேன்றேரின்
என்றனிவரவுசொல்வோரொருவரையிவணிற்காணேன்
துன்றனித்தவத்தாயெவ்வாறுணர்ந்தனையென்னத்தூயோன்

(இ-ள்.) உமது ஒப்பற்ற யோகசமாதியைச் சேவித்துச் சமீபிக்காமலும் பேசாமலும் சென்று பக்கத்திலுள்ள குகையில் தங்கித் தூரமான இடத்திலிருந்தேன்; அறியுமிடத்து அடியேனது தனிமையான வருகையைச் சொல்லுமவர்கள் ஒருவரையும் இவ்விடத்திற் காணேன்; பொருந்திய ஒப்பற்ற தவத்தையுடையீர்! அடியேனை எவ்வாறு அறிந்தீர்கள் என்று கூறப், பரிசுத்தராகிய குருகைகாவலப்பன் (எ-று.) (௪௩)

௪௪. இருவருமொருவராகியெனதுளத்திருந்தெக்காலும்
பொருவருமின்பந்துய்க்குங்காலையிற்பூவின்செல்வி
திருமுலைத்தடத்தான்மார்பத்தழுத்தினுஞ்சிறிதும்பாரான்
ஒருமுறையன்றிப்பல்காலொழிவிலென்னுளத்தைநீங்கா

(இ-ள்.) பெருமான் எனது உள்ளத்திலிருக்க, நாங்களிருவரு மொருவராகி எப்போதும் ஒப்பற்ற, இன்பமநுபவிக்குங் காலத்தில், தாமரைமலரில் எழுந்தருளியிருக்கும் பெரியபிராட்டியார் தமது திருமுலைத்தடத்தாலே திருமார்பில் அணைத்தாலும் அப்பிராட்டியைச் சிறிதேனும் நோக்காதவன் ஒரு முறையே யன்றிப் பலமுறையும் தன்னை யொழியாத என்னுள்ளத்தைவிட்டு நீங்கி, (எ-று.) (௪௪)

௪௫. நீலமாணின்னைநோக்கவுணர்ந்தனனிகரிலாத
சீலமார்ந்தனையீண்டுற்றதெவனெனச்செவ்வியோனுஞ்
சாலமாயோகநின்பாற்பெறுகுவானென்னத்தக்கோன்
காலமார்நிரியாணத்திற்கட்டுரைத்திடுதுமென்று

(இ-ள்.) நீலநிறத்தையுடைய பெருமான் உம்மைப்பார்க்க அதனாலே நான் அறிந்தேன். ஒப்பில்லாத சீலகுணம் பொருந்திய நீவிர் இவ்விடத்துக்கு வந்தது யாது காரணம்? என்று அருளிச்செய்ய, மனமொழி மெய்களால் செம்மையையுடைய யாமுநாசாரியரும் மிகுதியும் பெருமைபொருந்திய யோகத்தைத் தேவரீரிடத்தில் பெறுவதற்காக என்று கூற, மேலோரான குருகைகாவலப்பன் எமது நிரியாண காலத்தில் சொல்லக்கடவோம் என்றருளிச்செய்து, (எ-று.) (௪௫)

௪௬. தன்னிரியாணவேலைதனைவரைந்தளித்தக்காலம்
முன்னிநீவருகவென்றுவிடுப்பயாமுநனுமொண்சீர்த்
தென்னிலங்கேசன்றந்ததிருவரங்கத்தைச்சேர்ந்து
மன்னியபரமபாகவதரொடும்வதிந்தான்மன்னோ.

(இ-ள்.) தமது நிரியாண சமயத்தை எழுதிக்கொடுத்து அக்காலத்தை யெண்ணி நீவிர் வருவீராகவென்று விடுக்க, யாமுநாசாரியரும் ஒள்ளிய சீரையுடைய தெற்கின்கண்ணுள்ள இலங்கைக்கு நிர்வாஹகரான ஸ்ரீ விபீஷணாழ்வான் கொடுவந்துவைத்த திருவரங்கநகரத்தையடைந்து நிலைபெற்ற பரமபாகவதர்களோடும் எழுந்தருளியிருந்தனர். (எ-று.) (௪௬)

வேறு.

௪௭. ஆதரவினரங்கேசன் றிருவோலக்கத்தொருநா ளாளவந்
தான், ஏதமிலாமுதலிகளெண் ணிலர்சூழவீற்றிருந்தா னிவன்மு
னேயன், கோதகன்றதிருவரங்கப் பெருமான்மூன்சடகோபன்
கூறும்பாட்டுள், ஓதவரும்பொருட்டிருவாய் மொழிக்கருட்பாடி
டவணங்கி யுரையாநிற்போன்

(இ-ள்.) பிரீதியோடு திருவரங்கேசனது திருவோலக்கத்தில் ஒருநாள் ஸ்ரீ ஆளவந்தார் குற்றமற்ற முதலிகள் கணக்கற்ற திருநாமங்கள் சூழ்ந்திருக்க எழுந்தருளியிருந்தனர். இவரது திருவடிகட்கு நேசமுடையவரான குற்றநீங்கிய திருவரங்கப்பெருமாளரையர் முன்பு சடவாயுவைக் கோபித்தவரான ஆழ்வார் அருளிச் செய்த பிரபந்தங்களில் சொல்லுதற்கரிய பொருளையுடைய திருவாய்மொழியைப் பாடுவதற்கு அருளப்பாடிட்டவே வணங்கி இசையுடன் பாடுமவர், (எ-று.) (௪௭)

௪௮. கெடுமிடரென்றொருதிருவாய் மொழியினையாமுநமுனி
வோன் கேடில்சோதி, உடுபதிநேர்திருமுகமண் டலநோக்கியுள
முருக வுரைக்கப்பல்கால், அடுமிடர்தீர்ந்துயர்ந்தோனு மதன்
பொருடேர்ந்தரங்கேச னருளிதென்று, நெடுமதில்சூழ்திருவனந்
த புரப்பதுமநாபனையுன் னினைந்துசெல்வான்

(இ-ள்.) "கெடுமிடராயவெல்லாம்" என்று ஒரு திருவாய்மொழியை யாமுநாசாரியரது கெடாத பிரகாசமுடைய சந்திரனை நிகர்த்த திருமுக மண்டலத்தை நோக்கி உளமுருகும்படி பலமுறையும் அருளிச்செய்ய, வருத்தும் துன்பந்தீர்ந்துயர்ந்த யாமுநாசாரியரும் அதன் பொருளை யுணர்ந்து, இது திருவரங்கேசன் திருவருளென்றுகொண்டு, நெடிய மதில் சூழ்ந்த திருவநந்தபுரத்தி லெழுந்தருளிய பதுமநாபப் பெருமானைத் திருவுளத்தி லெண்ணிப் பிரயாணமாகுமவர் (எ-று.) (௪௮)

௪௯. மன்னுதிருமடத்தினுக்குத் தனைநிகராகியதெய்வ வாரியா
ண்டான், என்னுமுனிவனையிருத்தா வெண்ணின்முதலிகளோடு
மேகிப்பூவும், பொன்னுமலரடிவருடத் துயில்புரியுந்திருவனந்த
புரத்துளானைப், பன்னுமறைத்தமிழ்கூறிப் பாடிவணங்கினன்பல்
காற் பற்றிலாதான்.

(இ-ள்.) நிலைபெற்ற தமது திருமடத்துக்குத் தம்மையொத்தவரான தெய்வவாரியாண்டானென்னும் மாநசீலரை யிருத்தி, கணக்கற்ற முதலிகளோடும் சென்று, பூமிப்பிராட்டியாரும் பெரியபிராட்டியாரும் திருவடிகளை வருடும்படி அறிதுயிலமரும் திருவநந்தபுரத்தி லெழுந்தருளி யிருக்கும் பதுமநாபப்பெருமானை, பற்றில்லாத யாமுநாசாரியார், உயர்ந்தோர் துதிக்கும் தமிழ்வேதத்தை யநுசந்தித்துப் பலமுறையும் துதித்து வணங்கி, (எ-று.) (௪௯)

௫௦. ஸ்ரீதரன்மாலனந்தசய னத்தாதிபதமலரிற் சிந்தைசேர்த்தி,
நாதமுனிமகன்மகனங் குறைநாளினுயர்குருகை நாதனீந்த, சாத
கத்தையயர்த்துநினைந் தொருநாணோக்குதலுமவன் றனிவைகுந்
தம், போதலுறுநாளந்நா ளாதலும்வெய்துயிர்த்திரங்கிப் புலம்ப
லுற்றான்.

(இ-ள்.) ஸ்ரீதரன் திருமால் ஆகிய அநந்தசயந பதுமநாபனது திருவடித்தாமரைகளில் மனதைச்சேர்த்து ஸ்ரீமந்நாதமுனிகளுக்குத் திருப்பேரனான ஸ்ரீ ஆளவந்தார் அங்கு எழுந்தருளி யிருக்கையில், உயர்ந்த குருகைகாவலப்பன் அளித்த ஜாதகத்தை மறந்திருந்து ஒருநாள் நினைந்து பார்த்தவும், அந்தக் குருகைகாவலப்பன் ஒப்பற்ற வைகுந்தத்துக்கு எழுந்தருளும் தினம் அந்தத்தினமாகவே பெருமூச்செறிந்து மனமிரங்கிப் புலம்பத் தொடங்கினர். (எ-று.) (௫௦)

௫௧. இக்கணஞ்சென்றெந்தையருள் யோகநிலைகேட்கவென்று
லெறுழ்தோராவெண், டிக்களந்தசிறைக்கருடன் யானன்றேமாருதி
யாந் திறலோனன்றே, அக்கமலத்தயனளித்த புட்பகமோநம்வயத்
த தாவதன்றே, தக்கவனைக்காண்டலரி தெனவுழங்காச்சிறுவரை
யுந் தரியானாகி

(இ-ள்.) இந்த க்ஷணமே சென்று எனது பாட்டனார் அருளிய யோகநிலையைக்கேட்க வென்றால், ஒருவராலும் வலிமை தோராத எட்டுத்திசைகளை யளந்த சிறகையுடைய கருடாழ்வான் நானன்றே; ஆஞ்சநேயரான வலியோனன்றே; அந்தத் தாமரைமலரிலிருக்கும் பிரமதேவன் கொடுத்த புட்பகவிமானமோ நமது வசமாவதன்றே; தகுந்தவரான குருகைகாவலப்பனைக் காணுதல் அரிதென்று வருந்திச் சிறிது பொழுதும் தரிக்காதவராகி, (எ-று.) (௫௧)

௫௨. அனந்தபுரந்தனைநீங்கி வருங்காலையவன்பிரிவை யாற்றுத்
துன்பான், மனந்தளர்வுற்றுடல்பூரித் திடச்சிவிகைமீதுதெய்வ
வாரியாண்டான், கனந்தன்முதலினர்பாவத் துயினெடுமாலரங்கந
கர்த்துறந்துசான்றோர், இனந்தனதுமருங்கணுக வருந்தகையாமுந
முனிவற் கெதிரேசென்றான்.

(இ-ள்.) திருவனந்தபுரத்தை விட்டு வரும்போது, யாமுநாசார்யரது பிரிவைச் சகிக்க முடியாத துன்பத்தாலே மனந்தளர்ந்து திருமேனி வீக்கமடையவே சிவிகையின்மீது தெய்வவாரியாண்டான், கனந்தன் முதலானவர்கள் வணங்கும்படி அறிதுயிலமரும் பெருமானது திருவரங்க நகரத்தைவிட்டு, மேலோர்களது கூட்டம் தமது புடைசூழ எழுந்தருளும் பெருமையையுடைய யாமுநாசார்யரது எதிரே சென்றனர். (எ-று.) (௫௨)

௫௩. குரவனைக்கண்டலுந்துயர்தீர்ந் துடல்பூரிப்பொருவிந டைகூடிப்பாதம், பரவிவணங்கலுநோக்கி யாமுநனுமனந்தபுரப் பதுமநாபன், அரவணையிற்றுயில்கோயிற் கோபுரத்தைக்காட்டி வண்ண மன்னனீபோய், முரனையடுமுகிறிருத்தாள் பணிந்து மீள்குதியெனவம் முனிவன்றானும்

(இ-ள்.) ஆசாரியரைச் சேவித்தலும் அயர்ந்தீர்ந்து திருமேனி வீக்கம் நீங்கி திருவடிகளில் நடைகூடித் துதித்து வணங்குதலும், யாமுநாசாரியரும் அவரைக் கடாக்ஷித்துத் திருவநந்தபுரத்துப் பதுமநாபப்பெருமான் சேஷசயநத்தில் அறிதுயிலமரும் திருக்கோயிற்கோபுரத்தைக் காட்டி, நன்மையுடைய பெருமையிற் சிறந்தோரே! நீர் போய், முராசுரனை வென்ற மேகம் போன்ற பெருமானது திருவடிகளைப்பணிந்து மீண்டுவருவீராக வென்று அருளிச்செய்ய, அம்மகாநலேரான தெய்வவாரியாண்டானும் (எ-று.) (௫௩)

௫௪. வந்ததெதிர்திருவனந்த புரமெனக்கென்றாளவந்தான் மலர்த்தாள்காட்டி, அந்தமுடியிற்சூட்டிப் பணிந்தேத்தயாமுநனுமன்பின்மிக்கார், இந்நிலத்திவனையொக்கர் யாவரெனவியவாநின்றே கியோகம், சந்ததமுந்தளராது குருகைகாவலன்புரிந்த தலத்தைச்சார்ந்தான்.

(இ-ள்.) எனக்குத் திருவநந்தபுரம் எதிரேவந்ததென்று ஆளவந்தாரது திருவடிகளைக்காட்டி அழகிய முடியிற் சூட்டிக்கொண்டு பணிந்து துதிக்க, யாமுநாசாரியரும் ஆசாரியபக்தியில் மிகுந்தவர்கள் இந்தப் பூமியில் இவரை யொத்தவர்கள் யாரென்று ஆச்சரியத்துடன் அருளிச்செய்து சென்று, குருகைகாவலப்பன் எப்போதுந் தளராமல் யோகஞ்செய்திருந்த இடத்தை யடைந்தனர். (எ-று.) (௫௪)

௫௫. அலகிலாஞானமுத லடிமறவாயாமுநனண் டணுகுமுன்னே, உலகில்யாரினுமுயர்ந்த குருகைகாவலன்றிருநா டுற்றனென்ன, இலகிவாள்விடுவெயிலி னிழுதேய்ப்பவுருகியினைந் தினைந்துமாழ்கி, விலகிவாள்விரிமணிப்பெட் டகக்கோயிலணியரங்க மேவினனல்.

(இ-ள்.) கணக்கற்ற ஞானகுணங்களுள முதல்வனது திருவடிகளை மறவாத யாமுநாசார்யர் அவ்விடத்துக்கு வந்து சேருமுன்னே, உலகத்தில் யாரினும் உயர்ந்த குருகைகாவலப்பன் பரமபதத்தையடைந்தன ரென்று (அங்குள்ளார்) சொல்ல, விளங்கி ஒளிவிடும் வெயிலிலிட்ட நெய்யைப் போல உருகி இரங்கியிரங்கி வருந்தி, விட்டுவிட்டு ஒளிவிரியும் மணிப்பெட்டகமான கோயிலையுடைய அழகிய திருவரங்கத்தை யடைந்தனர். (எ-று.)

௫௬. கனகமதின்மணிக்கோயிற் றிருவநந்தன்மிசைத்துயிலுங் கமலக்கண்ணன், தனதுதிருவடிமுதலா முடிகாறுநோக்கிமிகத் தழைக்கக்காதல், மனதுருகவிழியிணைநீர் பொழிதரமெய்புளகரும்பவணங்கிமாலே, எனதுபவப்பிணிமருந்தே யெவ்வுலகுமெவ்வுயிரு மீன்றளெந்தாய்.

(இ-ள்.) பொன்மயமான திருமதில்கள் சூழ்ந்த அழகிய திருக்கோயில் திருவநந்தாழ்வான்மீது அறிதுயிலமரும் செந்தாமரைமலர் போலுந் திருக்கண்களையுடைய பெருமானது திருவடிமுதலாகத் திருமுடிவரையில் சேவித்து, பக்தி மிகவுந்தழைக்கவும் திருவுள்ள முருகவும் இரண்டு திருக்கண் மலர்களில் நீர் பொழியவும் திருமேனியில் புளகமுண்டாகவும் வணங்கி, பெருமானே! எனது பிறவிப்பிணிக்கு மருந்தே! எவ்வுலகங்களையும் எவ்வுயிரையும் சிருஷ்டித்த ஆளும் எனது காரணபூதனே! (எ-று.) (௫௬)

௫௭. பிரமாணம்பிரமேயம் பிரமாதாவெனப்பிரிந்தும் பிரிவின்றியும், வரமாயைபுரிமுதலே பொருவரியதிருமலைமேல் வாழுந்தேகாவே, சிரநான்குளாரியற்று மகத்துதித்தாயத்திகிரித் தேவர்தேவே, பரமாணுவாய்வரையா யாவரியாவையுமாகிப் பரம்பான்றாய்

(இ-ள்.) பிரமாணம் பிரமேயம் பிரமாதா என வேறுபட்டும் வேறுபாடில்லாமலும் வரும்படி மாயை செய்யும் முதல்வனே! ஒப்பில்லாத திருமலையின்மீது வாழும் எமது தலைவனே! நான்கு சிரங்களையுடைய பிரமதேவன் செய்த யாகத்தில் ஆவிர்ப்பவித்தவனாய் ஸ்ரீ ஹஸ்திகிரியில் வாழும் தேவராசனே! பரமாணுவாயும் மேருமலையாயும் யாவரும் யாவையும் மாகிம் பரவி நிற்குமவனே! (எ-று.) (௫௭)

௫௮. என்றுமணித்திருக்கோயி றிருமலைநான்முகன்வேள்வி யிறைத்தவேழக், குன்றுமுதற்பதிபலுவல் வடமொழியிற்பலவித்தாற் கூறிப்போற்றி, நன்றுதரும்பொய்கைமுத லினர்பாடற்றமிழ்ச்சுருதி நவிலுஞானம், ஒன்றுமுளத்தினனுகி யவற்றினுக்குரைநவின்றா னுணர்வுமிக்கான்.

(இ-ள்.) என்று அருளிச்செய்து மணிமயமான திருவரங்கம், திருமலை, பிரமதேவன் யாகஞ்செய்த ஹஸ்திகிரி முதலிய திருப்பதிகளை வடமொழிச் செய்யுட்களைப் பலவிதத்தாலும் அருளிச்செய்து துதித்து, நன்மையை யளிக்கும் பொய்கையாழ்வார் முதலானவர்கள் அருளிச்செய்த தமிழ்வேதத்தில் பிரதிபாதிக்கும் ஞானத்தில் நிலைபெற்ற திருவுள்ளத்தையுடையவராகி, அவைகளுக்கும் ஞானத்தில் மிக்கோரான ஸ்ரீ ஆளவந்தார் உரையருளிச்செய்தனர். (எ-று.) (௫௮)

௫௯. தானவின்றநூலவுயர் சிராமன்புண்டரிகன் றன்மூதாதை, ஆனமுனிவரனிவர்கட் கழகளித்தமிழ்ப்பனுவ லாய்வெல்லாம், மேனலந்தந்தருள்பெரிய நம்பிமுதன்முதலிகட்கு விரித்துக்கூறி, ஞானமுதலவற்றினுயர் பொருண்மைவிசிட்டாத்துவித நலந்திற்சொற்றான்.

(இ-ள்.) தாமருளிச்செய்த நூல்களும், உயர்வையுடைய மணக்கால்நம்பி உய்யக்கொண்டார் தமது மூதாதையாரான ஸ்ரீமந்நாதமுனிகள் இவர்களுக்கு அழகளித்த தமிழ்ப் பிரபந்தங்களும் ஆகிய எல்லாவற்றையும், உயர்ந்த நலத்தைத் தந்தருளும் பெரியநம்பிகள் முதலிய முதலிகளுக்கு விஸ்தரித்து அருளிச்செய்து, ஞானத்தில் முதன்மைபெற்றவரான ஸ்ரீ ஆளவந்தார் அவற்றின் உயர்ந்த பொருள்களை விசிஷ்டாத்துவைத சித்தாந்தப்படி யருளிச்செய்தனர். (எ-று.) (௫௯)

௯0. கோவிற்றிருமலைபெருமாள் கோவின்முதற்பதிகளுக்குக் கோதிலாத்தன், ஆவிநிகர்பெரியநம்பி முதலாயமுதலிகளை யதிகளாக்கி, ஓவிலான்மதமெவையுந் தாணியெனத்தரணியிற்றுறெருவனுகிப், பூவிலயன்படைத்தசெழும் புவியனைத்துஞ்சயயூபம் பொருந்தநட்டான்.

(இ-ள்.) கோயில் திருமலை பெருமாள்கோவில் முதலிய திருப்பதிகளுக்குக் குற்றமில்லாத தமது உயிர்க்குச் சமானமான பெரியநம்பி முதலான முதலிகளைத் தலைவர்களாக்கி, ஒரு பொருளினிடத்தும் விட்டொழிதலில்லாத எம்பெருமானது சமயத்துள்ள எல்லா அர்த்த விசேஷங்களும் மலைபோலே நிலைபெறும்படி சூரியனைப்போலே தாமொருவராய் விளங்கி, தாமரைமலரிலிருக்கும் பிரமதேவன் சிருஷ்டித்த செழுமையான பூமியெல்லாம் தமது ஜயஸ்தம்பம் நிலைபெறும்படி நாட்டினர். (எ-று.)

௯௧. இம்மரபிற்றிருநெடுமால் சமயநிலைநிறுத்துலக மிறைஞ்சவேத்தச், செம்மலியாமுநமுனிவ னணியரங்கத்திருந்தனன்முன் றிருத்திஞாலம், மம்மர்கடிந்தரிசமயம் பொய்கைமுதலினர்வளர்த்தார் வளர்த்தேநாமும், அம்மரபினவரருளா லினியாவருரியவரென் றகத்துட்கொள்ளா

(இ-ள்.) இவ்விதமாகத் திருநெடுமாலின் சமயத்தை நிலைநிறுத்தி உலகத்திலுள்ளோர் வணங்கி வாழ்த்தும்படி பெருமையிற் சிறந்தோரான யாமுநாசார்யர், முன்பு பொய்கையாழ்வார் முதலானவர்கள் பூமியிலுள்ளோரைத் திருத்தி மயக்கம் நீக்கி அரிசமயத்தை வளர்த்தார்கள்; நாமும் விர்த்திசெய்தோம்; அம்முறையே அவர்களது திருவருளாலே இனியாவர் (அரிசமயத்தை வளர்ப்பதற்கு) உரியவரென்று திருவுள்ளத்திற் சிந்தித்துக்கொண்டு திருவரங்கத்தில் எழுந்தருளியிருந்தனர். (எ-று.) (௯௧)

வேறு.

௯௨. இந்தமாநிலமெலாம்பரவவேறிணையிலா
தந்தயாமுநனிருந்தருளமேலறைகுவாம்
முந்தமாதரிசனந்தனதுபேர்முதன்மையிற்
றந்தமாமுனியிராமாநுசன்சரிதமே.

(இ-ள்.) இந்தப்பெரிய பூமியிலுள்ளவர்களெல்லாம் வணங்கும்படி வேறு உபமானமில்லாமல் அந்த யாமுநாசாரியரிருந்தருள, பெருமானது சித்தாந்தம் தமது திருநாமமுதன்மையினாலே முற்படும்படி தந்தவரான பெருமைபொருந்திய இராமாநுச முனிவரது திவ்ய வைபவத்தை மேலே சொல்லுவாம். (எ-று.) (௯௨)

மணக்கால்நம்பிகள் கலியுகம் ௯௯௨-வதான விரோதிகிருது வருஷம் மாசிமாதம் சுக்லபக்ஷம் சதுர்த்தி மகநக்ஷத்திரம் சோமவாரங்கூடிய தினத்தில் அவதரித்து ௧0௫-வருஷம் இவ்வுலகிலெழுந்தருளியிருந்தனர்.

யாமுநச்சருக்கம் முற்றிற்று.

ஸ்ரீ

௧௪-வது இராமாநுசச்சருக்கம்.

௧. வடவேங்கடமால்வரைத்தென்பால் வளஞ்சேர்தொண்டைத்திருநாட்டிற், றடமாமதில்சூழத்திகிரி தனக்குக்குணபாலெவ்வுளெனும், அடன்மாறுயிலுந்திருப்பதியாந் தகற்குத்தென்பாலருமறைக்கோர், இடமாய்ப்புடவியெனுமடந்தை வதனம்போலுமெழினகரம்.

(இ-ள்.) வடக்கின் கண்ணுள்ள திருவேங்கடமென்னும் பெருமை பொருந்திய மலைக்குத் தெற்கிலிருக்கும் வளம்பொருந்திய அழகிய தொண்டைநாட்டிலே, விசாலமாகிய பெரிய மதில்கள் சூழ்ந்த ஸ்ரீ ஹஸ்திகிரிக்குக் கிழக்கிலே, திருவெவ்வுளூரென்னும் ஸ்ரீ வீரராகவப்பெருமான் அறிதுயிலமரும் திருப்பதிக்குத் தெற்கிலே, அரிய உபயவேதங்களுக்கும் ஒப்பற்ற இடமாகிப் பூமிதேவியாரென்னும் மடந்தையின் திருமுகத்தைப்போன்றிருக்கும் அழகிய நகரம், (எ-று.) (௧)

௨. கருமாகளிறுபரியிரதங்களுல்வீதிகளுங்கதிரவனைப்
பொருமாமணியின்றிரளிமைக்கும்பொற்கோபுரமும்புரிசைகளுந்
திருமாலுறையுமுதற்பதிபோற்பூசாரப்பேர்சிறந்தெகினப்
பெருமான்றனக்குங்கணிப்பரியவளங்கூர்தகைமைப்பெரும்பூதூர்.

(இ-ள்.) கருமையும் பெருமையுமுடைய யானையும் குதிரையும் தேரும் நெருங்கும் வீதிகளும், சூரியனை யொக்கும் பெரிய ரத்தினக்கூட்டங்கள் விளங்கும் பொன்மயமான கோபுரங்களும், மதில்களும், பூமியிற் சாரமாந்தன்மை யுடையதென்னும் பெயரும் சிறந்து பெருமான் எழுந்தருளியிருக்கும் முதன்மைபெற்ற பரமபதம்போல அன்னவாகனத்தையுடைய பிரமதேவனுக்கும் கணிப்பதற்கரிய வளமிகுந்த பெருமையுடைய ஸ்ரீ பெரும்பூதூராகும். (எ-று.) (௨)

௩. ஆறுயிரந்தணர்க்கிடனமதிலாசுரிகேசவனுரும்
மாறுள்வழுத்துமுனிதேவிமலர்த்தாடளிர்க்கைமலர்க்கூந்தற்
றேறுமருங்குல்வாங்கமைத்தோட்டேம்பாற்கிளவிமேம்படுசீர்த்
தாறுர்கமுகமிடற்றிலவச்செவ்வாய்க்காந்திமதிதன்பால்

(இ-ள்) ஆறுயிரந் திருநாமங்களான அந்தணர்களுக்கு இடமானதான அந்த ஸ்ரீ பெரும்பூதூரில், ஆசூரி கேசவாசாரியராகிய பெருமானது திருவடிகளைத் துதிக்கும் மநசீலரது தேவியாராய், மலர்போன்ற பாதங்களும், தளிர்போன்ற கைகளும், மலர்கள் சூடிய கூந்தலும், தெரிவதற்கரிதான இடையும், விளக்கும் மூங்கில்போன்ற தோள்களும், இனிய பால்போன்ற சொல்லும், உயர்வான குணங்களும், குலையுடைய கமுகுபோன்ற கண்டமும், இலவம்பூப்போன்ற சிவந்த வாயுமுடைய காந்திமதியம்மையாரிடத்தில், (எ-று.) (௩)

௪. சுவலிற்பதினுலகுமொரு மலர்போற்பரித்துக்கொன்மறைநூல், நவலற்கருமாயிரமுகத்தான் மேனுனுவன்றுநோற்றோர்தங், கவலிற்பிறவிக்கடற்புணையாங் கரியோன்றவிசாக்கவின்

படைத்தும், தவளிற்றவிர்சிரிலக்குவனும் பலதேவனுமாய்த்தகைச் சான்றோன்.

(இ-ள்.) நமது தோளின்மீது பதினாலுலகங்களையும் ஒரு புஷ்பத்தைப் போலத் தாங்கியும், சொல்லுதற்கரிய ஆயிரமுகங்களாலும் முற்காலத்தில் பழமையான வேதசாஸ்திரங்களை சொல்லியருளியும், தம்மிடத்தில் பக்தி செய்தவர்களுடைய வருத்தமுடைய பிறவிக்கடலுக்குத் தெப்பமாகிய பெருமானது ஆசனமாக அழகுபெற்றும், குறைதலின்றி விளங்கும் சீரையுடைய இளையபெருமாளும் நம்பிமூத்தபிரானுமாகியும் பெருமை நிறைந்தவர். (எ-று.) (௪)

௫. கடைநாள்விழியீராயிரத்துங் காலுங்கதச்செந்கனலானும், மிடைநாவிதக்கும்பகுவாயில் விரியுங்கருந்திவிடத்தானும், உடைநாவொடுபத்தலகவண்ட மொழித்துத்தனித்தாமெழுந்தாழிப், படைநாரணன்றன்கலையாக லாற்சேடப்பேர்படைத்துயர்ந்தோன்.

(இ-ள்.) ஊழிகாலத்தில் ஈராயிரம் கண்களினின்றும் உண்டாகும் கோபமுடைய சிவந்த அக்கினியாலும், ஒன்றோடொன்று நெருங்கிய நாக்குகள் மேவிட்டு வரும் பெரிய வாயினிடத்து உண்டாகும் கருமையுடைய அக்கினிபோன்ற விஷத்தாலும், பதினாலுலகங்களையுடைய அண்டத்தை யழித்துத் தனியாகத்தான் சேவித்திருந்து, திருவாழியாகிற படையையுடைய ஸ்ரீமந்நாராயணனது அமிசமாதலாலே சேஷனென்னும் திருநாமம் பெற்று உயர்ந்தவர். (எ-று.) (௫)

௬. அயலாஞ்சமயக்களைகளையா வருண்மாலசமயப்பயிர்வளர்க்க, முயலாமகவாயவதரிப்பான் முன்னுங்காலைமுகிணைகையும், இயலாங்கவன்போல்விளர்ந்துமூலை யிணைக்கண்களுமேவிழிவிடத்தின், செயலாமெலிந்தாருலகமெலாம் பரிப்போற்றுகுந்திற னெளிதே.

(இ-ள்.) அந்நியமான சமயங்களாகிற களைகளைக் களைந்து, அருளையுடைய பெருமானது சமயமாகிய பயிரை வளர்க்க முயன்று, ஒரு குழவியாகித் திருவவதாரஞ்செய்யச் சிந்திக்கும்போது, முல்லையரும்பு போன்ற தந்தங்களையுடைய காந்திமதியம்மையாரும் தமது சாயல் அவ்வாதிசேடரைப் போல வெளுத்து, இரண்டு தனங்களின் கண்களும் கண்களும் அவரது விஷத்தின் செயலாகக் கறுத்து மெலிந்தனர். உலகமெல்லாம் தாங்குமவரை (கர்ப்பத்தில்) தாங்கும் தன்மை யெளிதாகுமோ? (எ-று.) (௬)

௭. தருமந்தளிர்ப்பப்பரசமயந் தலைசாய்ந்தொதுங்கத்தமன் மகத்தோர், கருமஞ்செழிப்பப்பாகவதர் கணத்தேயருள்ளெங்களி கூரப், பெருமங்கலச்சித்திரைத்திங்கள் பிறழுந்திருவாதிரைநாளில், உருமஞ்சனையோன்றுயில்கடல்சூ ழுலகோர்வாழவுதித்தன ருல்

(இ-ள்.) தருமம் தளிர்க்கவும், பிறசமயங்கள் தலைசாய்ந்து ஒதுங்கவும், அக்கினியாற் செய்யப்படும் யாகத்தையுடையவர்களான அந்தணர்களது கருமங்கள் செழிப்படையவும், பாகவதக் கூட்டத்தார்களது உள்ளம் களி

கூரவும், பெரிய மங்களத்தையுடைய சித்திரை மாசத்தில் விளங்கும் திருவாதிரை நக்ஷத்திரத்தில், தனது திருமேனி மேகத்துக்குச் சமானமான பெருமான் அறிதுயில்மருவும் கடல்சூழ்ந்த உலகத்திலுள்ளவர்கள் வாழும்படி, அவதரித்தனர். (எ-று.) (௭)

௮. நாமஞ்சவுளமுபநயன நவிலுமுன்முறையேமுடித்ததற்பின், ஏமந்தருநான்மறையோதி யெயில்சூழ்கச்சியாதவனும், தோம்வந்தணுகாவெதிக்குரவன் அனைத்தாமெடுத்துவேதாந்தம், வாமன் சன்னன்சாந்திபன்பாற் படித்தாங்கென்மையடுத்தனனால்.

(இ-ள்.) நாமகரணம் சௌளம் உபநயனம் இவைகளைச் சொல்லும் சாஸ்திரமுறைப்படியே முடித்து, அதன் பின் இன்பந்தரும் நான்கு வேதங்களையுமோதி, மதில்சூழ்ந்த திருக்கச்சியிலிருக்கும் யாதவப்பிரகாசராகிய குற்றம் வந்து சேராத யதியாகிய ஆசாரியரது இரண்டு பாதங்களை வணங்கி, வேதாந்த சாஸ்திரத்தை, அழகுடையவனான கண்ணனெம்பெருமான் சாந்தீபனிடத்து அப்பியசித்ததுபோல், எளிதாக அப்பியசித்தனர். (எ-று.)

இராமாநுசர் வாசிக்குங்காலை, அவரது சிறியதாயார் திருக்குமாரரான கோவிந்தபட்டரும் கூடவிருந்து வாசித்தனர். சிலபொழுது யாதவப்பிரகாசர், வேதவாக்கியங்களுக்கு அத்வைதபரமாகப் பொருள்கூற, இராமாநுசர் அதனைமறுத்து விசிஷ்டாத்வைதபரமாகப் பொருள் கூறிவருவர். இதனாலே யாதவப்பிரகாசர், இராமாநுசரைக் கொல்ல எண்ணி அது செய்யிற் றீங்குநேருமென்று, கொன்றவர்க்கும் கொல்லப்பட்டார்க்கும் நற்கதியருளுவதான காசியின்கண்ணுள்ள கங்கைக்கரையில் மணிகர்ணிகாகட்டத்திற் செய்வதுவே தக்கதெனச் சில மாணாக்கருடன் யோசித்துத் துணிவுகொண்டு, கங்காயாத்திரை செய்தனர். ஒருநாள் மாலைப்பொழுதில் விந்தியாடவியிற் செல்லுகையில் இதுகாறும சந்தியாமேவந்த இராமாநுசரும் கோவிந்தபட்டரும் சந்தித்துப் பேசநேர்ந்தபோது, யாதவப்பிரகாசர் செய்யவரும் சூழ்ச்சியைக் கோவிந்தபட்டர், இராமாநுசருக்குக் கூறினர். கேட்ட இராமாநுசர், அவர்களைவிட்டுத் தனிவழியோடத்து இராப்பொழுது வந்தும் "ஆவாரார்துணை" யென்று வழிதிகைத்தலமருகையில், பேரருளாளப்பெருமானும் பெருந்தேவித்தாயாரும், வேடனும் வேடிச்சியுமாக வந்து, இராமாநுசரைச் சந்தித்து இன்சொல் பகர்ந்தனர். இராமாநுசர் களிகூர்ந்து, அவ்விரவு அவர்களுடன் ஓர் அரசமரத்தடியிற் றங்கியிருந்தனர். மறுநாள் காலைப்பொழுதிற் றுயிலுணர்ந்து தமக்குத் துணையாக வந்திருந்தவர்களைக் காணாது சிறிதுதூரம் நடந்து, சோலையுமூருந் தோன்றக்கண்டு, அங்கு நின்றவர்களை நோக்கி, இஃதெவ்வூரென்று கேட்க, அவர்கள் காஞ்சீபுரமென்றுரைத்ததும், தம்மைமறந்த பெருவியப்பினராய்த் தமக்குத் துணையாக வந்தோர் பேரருளாளனும் பெருந்தேவித்தாயாருமெனத் துணிந்து, அவர்கள் திருவருளிருந்தபடியை நினைந்து நினைந்து பலவாறு துதித்து, முன்னிரவில் வேடிச்சியுருவங்கொண்டுவந்த தாயார், நடுயாமத்தில் தண்ணீர் கேட்டபோது தாம் அளிப்பதற்கியலாதிருந்த குறைதீரச் சாலைக்கிணற்றுத் தீர்த்தத்தைத் திருமஞ்சனாதிகளுக் குபயோகமாகச் சமர்ப்பித்துவந்தனர்.

யாதவப்பிரகாசர் இராமாநுசரைத் தேடிக்காணாது, கோவிந்தபட்டர் முதலிய மாணாக்கருடன் கங்கைக்குச்சென்று தீர்த்தமாடுகையில் தமது மந்திரசக்தியால் கோவிந்தபட்டர் கையில் ஒரிலிங்கம் வந்துசேரு

ம்படி செய்து தாமுந் தமது மாணாக்கரும், உள்ளங்கை கொணர்ந்த நயி ஞரென்று அவரைப் புகழ்ந்தனர். பின்னர், இவர்கள் மீண்டுவருகையில் நயினார் அந்த லிங்கத்தைத் தக்கதோரிடத்தில் ஸ்தாபித்துவிட்டு வருகி றேனென்று கூறி விடைபெற்றுச்சென்று, தமது ஜன்மபூமியான மழலை மங்கலமடைந்து அங்கு அவ்விலிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்து வைத்த னர். அதன்பின்னர் காளத்திநாதன் தமது சொப்பனத்தில் வந்து சொ ன்னபடி காளத்திக்கு வந்து அங்குள்ள பலராலும் ஆதரிக்கப்பெற்று ஆலயத்துச் சகலாதிகாரமும் வகித்திருந்தனர். யாதவப்பிரகாசர் காஞ்சி புரத்துக்கு வந்து இராமாநுசரைக் கண்டு நடந்த விர்த்தாந்தங்களைக் கேள் வியுற்று முன்போலவே வேதபாடம் நடத்திவந்தனர்.

௯. படிக்குங்காலத்தத்துவிதம் பகர்யாதவனுமுளந்திகைப்ப,
வடிக்கும்வேதப்பொருடுவித மரபானுவன்றுமறுப்பதெல்லாம்,
முடிக்குந்துளவப்புயலரங்கத் துறையாமுநப்பேர்முனிகேளா,
கொடிக்கோபுரமாமதின்மாடக் குழாஞ்சூழ்கச்சிக்குறுகினரால்.

(இ-ள்.) அப்பியசிக்குங்காலத்தில் அத்துவைதத்தைச் சொல்லும் யா தவப்பிரகாசரும் உள்ளம் திகைக்கும்படி வடித்துரைக்கும் வேதார்த்தங் களைத் துவிதமுறைப்படி அருளிச்செய்து மறுப்பதையெல்லாம், முடிக்கும் திருத்துழாய் மாலையையுடைய மேகம்போன்ற பெருமானது திருவரங்கத்தி லெழுந்தருளியிருக்கும் யாமுனாசாரியரென்னுந் திருநாமமுடைய மகரிஷி கேள்விப்பட்டு, கொடிகளையுடைய கோபுரங்களும் பெரிய மதில்களையுடை ய மாடங்களின் கூட்டங்களும் சூழ்ந்த திருக்கச்சியை யடைந்தனர். (எ-று.) (௯)

வடித்துரைத்தலாவது பல நியாயங்களைக்கொண்டு தெளிவுபெற வுரைத்தலாம்.

௧௦. காண்டல்விரும்பிவருமவனைக் கச்சிநம்பிகருத்துவகை,
தூண்டவெதிர்கொண்டடிவணங்கித் துதித்தானறைப்பூந்துள
வணியும், நீண்டதிருமாலத்திகிரி வலஞ்செய்திறைஞ்சிநிறைசீ
லம், பூண்டமுனியுந்திருக்கழற்பாங் கொருமண்டபத்துட்புகுந்
திருந்தான்.

(இ-ள்.) காணுதல் விரும்பி வருமவரான ஸ்ரீ ஆளவந்தாரைத் திருக்கச் சிநம்பிகள் திருவுள்ளத்தில் சந்தோஷம் தூண்ட எதிர்கொண்டு சென்று அவரது திருவடிகளை வணங்கித் துதித்தனர். தேனையுடைய அழகிய திருத் துழாய் மாலையையணியும் நீண்டவனான பெருமானெழுந்தருளி யிருக்கும் அஸ்திகிரியை வலஞ்செய்து வணங்கி, நிறைந்த அறிவு ஒழுக்கங்கள் பூண்ட ஸ்ரீ ஆளவந்தாரும், திருவடிக்குப் பாங்காக ஒரு மண்டபத்திற் பிரவேசித் தெழுந்தருளி யிருந்தனர். (எ-று.) (௧௦)

௧௧. இருக்குங்காலையாதவப்பே ரெதிமாணாக்கரினஞ்சூழ, அரு
க்கன்பொருவும்படைமாலைப் பணிவான்வரக்கண்டாளவந்தான்,
பெருக்குந்திருவுட்கச்சிநம்பி யிராமாநுசனார்பேசுகென, உருக்
கும்பொன்போன்றொளிர்மேனி யுயர்ந்தோனவனென்றிவனுரை
த்தான்.

(இ-ள்.) இப்படி யிருக்கும்போது, யாதவப்பிரகாசரென்னும் பெயரை யுடைய எதியானவர், தமது மாணாக்கர் கூட்டங்கள் சூழும்படி, சூரியனை யொத்திருக்கும் சக்கரப்படையையுடைய தேவராசப்பெருமானைப் பணி வதற்காக வரக்கண்டு, ஸ்ரீ ஆளவந்தார், திருக்கச்சிநம்பிகளே! அதிகரித் திருக்கும் கூட்டத்தில் இராமாநுசர் யார் சொல்லுவீராக வென்ன, உருக் கும் பொன்னைப்போலப் பிரகாசிக்கும் திருமேனியோடு உயர்ந்தவராயிருக் கும் அவரே என்று திருக்கச்சிநம்பிகள் அருளிச்செய்தனர். (எ-று.) (௧௧)

௧௨. கண்டுள்ளமகிழாவருளாளன்கழற்றாமரைக்குக்கவினார்ந்த
வண்டுதனதுவிழியாக்கிவணங்கிவழுத்திவரமெனக்கோன்
றுண்டுன்பாலென்மாணுக்கனிராமாநுசனுவுதவுகெனப்
பண்டுபோலநம்பெருமான்றுயில்கூரரங்கப்பதிபுகுந்தான்.

(இ-ள்.) ஸ்ரீ ஆளவந்தார் கண்டு திருவுள்ளமகிழ்ந்து, பேரருளாளப் பெருமானது திருவடிகளாகிற தாமரைகளுக்குத் தமது திருக்கண்களை அழகுடைய வண்டுகளாகச்செய்து வணங்கித் தோத்திரஞ்செய்து, தேவரீ ரிடத்தில் அடியேனுக்கு வேண்டிய வரமொன்றுண்டு; அதாவது இராமா நுசரை எனது சீடனாகத்தருக வென்று அருளிச்செய்து முன்புபோல நம் பெருமான் அறிதுயிலமரும் திருவரங்கத்திருப்பதியை யடைந்தனர். (எ-று.)

௧௩. அக்காலையிற்சோழன்சுதனை முனியொன்றணுகவதுநீக்
கத், தக்காரெவரென ...ய்ந்தளவி னிறையாதவப்போர்த்தவமுனி
வன், மிக்காரென ... ற்றனர்வேந்துங் கொணர்கென்னமுன்
வேதியனும், புக்காங்கேகிப்போகெனப்பேய் நகைத்துக்கரங்கள்
புடைத்தாரு.

(இ-ள்.) அக்காலத்தில் சோழராசனது குமாரனை முனியொன்று பிடி த்துக்கொள்ள, அதை நீக்குவதற்குத் தகுந்தவர்கள் யாரென்று விசாரித்த போது, (சிலர்) அறிவு நிறைந்த யாதவப்பிரகாசரென்னும் பேரையுடைய தவமுனிவர் (இதனை நீக்கக்கூடிய தந்திரமந்திரங்களில்) உயர்ந்தவர் என்று சொன்னார்கள். அரசனும் (அவரைக்) கொண்டுவாருங்களென்று சொல்ல, (அவ்வாறே) வேதியரான யாதவப்பிரகாசரும் (அப்பேயின்) முன்பே போய் அதைப் பார்த்துப் போவாயாகவென்று சொல்ல, (அந்தப்) பேய் சிரித்துக் கைகள்தட்டிப் பெருங்கோபங் கொண்டு, (எ-று.) (௧௩)

௧௪. என்னைத்துரக்குந்தகைமுனிவ னீயேயகல்வேனெளியே
னே, மின்னைப்பொருவுஞ்சடையோனு மெனைப்போகென்றகல
க்குவனே, முன்னைச்சனனத்துனையினைய னெனநீயுணராயம்முறை
யை; தன்னைக்கேட்டியானறிவ லெனச்சான்றோன்முன்னிவைசா
ற்றும்.

(இ-ள்.) என்னைப்போக்கும் பெருமையையுடைய முனிவன் நீதானோ? போகவேண்டியவனான நான் எளியனாவேனோ? மின்னையொத்திருக்கும் சடையையுடைய சிவபிரானும் என்னைப் போவென்று நீக்குவாரோ? நீ உன்னை முற்பிறப்பில் இப்படிப்பட்டவனென்று அறியாய்; அந்த விதத்தை க்கேட்பாயாக; (அதை) நானறிவேன் என்று அறிவுநிறைந்த யாதவப் பிரகாசர் முன்னே இவற்றைச் சொல்லத் தொடங்கிற்று, (எ-று.) (௧௪)

௧௫. போதார்பொழில்சூழ்மதுராந்த கத்தண்டகத்தின்புறம் புற்றிற், கோதாவடவேங்கடத்திருமால் கொடிஞ்சித்தடந்தேர்க் கொடித்திருநாள், ஓதார்கவிப்பார்வயிணவர்போ தூறுவோர்தடத் துண்டொழித்தமிச்சம், நீதானயின்றத்தடநீர்தோய்ந் திம்மா ணுருவநெறிபடைத்தாய்.

(இ-ள்.) நீ, புஷ்பங்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த மதுராந்தகத்தில் குளிர்ச்சியையுடைய எரியின் புறத்துள்ள புற்றில் உடும்பாயிருந்து, வடக்கின் கண்ணுள்ள திருவேங்கடத்திலெழுந்தருளி யிருக்கும் பெருமானது சிகரத்தையுடையதாய் விசாலமாய்க் கொடிகள் பூண்டதான தேர்த்திருவிழாவுக்குப் போகும்வாராய் யாவருஞ் சொல்லும் கடல்சூழ்ந்த பூமியிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் அந்த எரியினிடத்தில் அமுதசெய்து ஒழித்த சேஷத்தை அந்த எரிநீரில் தோய்ந்து உண்டபடியினாலே, இந்தக் கல்வியில் வல்லவனுக்குத் தலைவனாகக் கூடிய பெருமைபொருந்திய சரீரத்தையும் அநுஷ்டானத்தையும் பெற்றாய். (எ-று.) (௧௫)

௧௬. அகத்திற்றுயர்கூரொனதுதொன்மை யதுசேண்மறைபோன் யானையரும், மகத்திற்பொருண்மந்திரக்கருமம் வழுவுற்றிடவவ்வுடலொழித்தே, இகத்திற்கடியாவுழல்கின்றே னிராமாநுசன்வந்தெனைநோக்கிச், சகத்திற்புன்மையகற்றினன்போ கெனிற்போவலெனவவன்சார்ந்தான்.

(இ-ள்.) மனத்தில் துக்கமடையும் எனது முன்பிறப்பைக் கேட்பாயாக, அதாவது பிராமணனான நான் செய்த யாகத்தில் யாகத்துக்குரிய பொருள் மந்திரம் கருமம் இவைகள் தவறிப்போகவே, அந்தச் சரீரமொழித்து இப்போது பேயாக உழலுகின்றேன்; இராமாநுசர் வந்து என்னைப்பார்த்து இப்பூமியில் உனது தோஷத்தை நீக்கிவிட்டேன் போவாயாக வென்றால், நான் போவேனென்ன, இராமாநுசரு மவ்வாறே அங்கெழுந்தருளினர். (எ-று.) (௧௬)

௧௭. இதுநீயாற்றுகெனச்சார்ந்த விராமாநுசன்றுளிறைவணங்கப், பொதுநீர்மையறுமலைக்கையப்பே கெனத்தாளிறைஞ்சிப் புகழ்ந்தடியேன், முதுநீள்பனையைமுறித்தேகு கின்றேனென்றம் முறையேக, அதுநீள்புவியாளரசனுங்கண் டிராமாநுசனையடிவழுத்தி

(இ-ள்.) இதை நீவிர் செய்யவேண்டுமென்று வந்த இராமாநுசர் திருவடிகளை அரசன் வணங்க, பொதுவான சௌலப்பியமுடைய இராமாநுசரும், பேயைப் போவாயாக வென்றுகூற, (அது அவரது) திருவடிகளை வணங்கிப்புகழ்ந்து, அடியேன் பழையதாய் உயர்ந்திருக்கும் அரசமரத்தை முறித்துக்கொண்டு போகின்றேன் என்று சொல்லி, அம்முறையே போக, அதனைப் பூமியையாளும் அரசனும் பார்த்து இராமாநுசர் திருவடிகளைத் துதித்து, (எ-று.) (௧௭)

௧௮. என்னைக்கரியதிபொழிந்தா னிராமாநுசனுமியாதவப்போர், அன்னைக்குருக்கணையுதவா வடிதாழ்ந்தனன்மற்றுங்கொரு

நாள், தன்னைக்குருஞ்சீரியாதவனு நவில்வேதாந்தநற்பொருளைக், கண்ணைக்கரியபரிபவமாய்க் கலைவேதியற்குக்கட்டுரைத்தான்.

(இ-ள்.) வணங்குவதற்கரிய பொன்னைக் கொடுத்தனன். இராமாநுசரும் அதனை யாதவப்பிரகாசரென்னும் பெயரையுடைய பெருமையுடையோருக்குக் குருதக்ஷிணையாகக் கொடுத்து அவர் பாதங்களை வணங்கினர். வேறொருநாள் பெறுவதற்கரிய சீரையுடைய யாதவப்பிரகாசரும் தாம் சொல்லும் வேதாந்தத்தின் நல்ல அர்த்தத்தைக் கண்ணனெம்பெருமானுக்குப் பெரிய பரிபவமாகும்படி சாஸ்திரஞானமுடைய வேதியரான இராமாநுசருக்குச் சொல்லினர். (எ-று.) (௧௮)

இகழ்ந்த வேதார்த்தவாக்யமாவது "தஸ்யயதாகப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ" என்பதாம். இதற்கு யாதவப்பிரகாசர் கூறிய பொருள், "பரமபுருஷன் குரங்கின் பின்புறம்போலச் சிவந்த கண்களுடையவன்" என்பதாம். இராமாநுசர் பகர்ந்த பொருள், "நீரைக்கவரும் சூரியனலர்த்தப்பட்ட தாமரையைப்போலக் கண்களுடையவன் புருஷோத்தமன்" என்பதாம்.

௧௯. தவிலத்தினையாதவற்காட்டுந் தடக்கேசரிராமாநுசன்றவறே, பயிலப்புகலும்பொருள்செவிக்குப் படநாராசம்போற்பதையாத், துயிலத்திருமாறனைக்கருதி விழிநீருகுப்பத்துளிகாய்ந்த, அயிலிற்படயாதவன்முதுகி லவனுந்துணுக்குற்றழுங்கா

(இ-ள்.) யாதவப்பிரகாசருக்கு எண்ணெய் தேய்க்கும் விசாலமான தோள்களையுடைய இராமாநுசரது செவிகளில் தோஷமுண்டாகும்படி சொல்லும் பொருளானது நாராசம்போற் படவே, அவர் பதைபதைத்து, அரிதுயிலமர்ந்த அந்தத் திருமாலைச் சிந்தித்துத் திருக்கண்களில் முத்துதிர்க்க, அந்தத் துளி காய்ந்த வேலைப்போல் யாதவப்பிரகாசர் முதுகில்விழ, அவரும் அச்சப்பட்டு மனமழுங்கி, (எ-று.) (௧௯)

௨0. எனைப்பின்சேறல்பழுதாநீ யினியத்திகிரியெம்பெருமான், தனைப்பின்சேறிவணில்லா தகல்கென்றிசைப்பத்தனாதவனும், மனைக்கண் ... வலருமாருள்ளருத்துகென, அனைத்துந்தெரிந்தோர்கச்சிநம்பி யடிதாழ்ந்தருளோர்பணியென்றான்.

(இ-ள்.) நீ இனியென்னைப் பின்பற்றிச்செல்லாதே; குற்றமுண்டாகும்; அத்திகிரியிலெழுந்தருளிய எம்பெருமானைப் பின்பற்றிச்செல்லுவாயாக; இங்கு நில்லாமல் போவாயாக; என்று சொல்ல, இராமாநுசரும் நீங்கி, தமது திருமாளிகையையடைந்து அவ்விஷயத்தைத் தமது திருத்தாயாருக்கருளிச்செய்ய, அவ்வம்மையாரும் பெருமானது திருவடிகளை வழுத்துவாயாக வென்று நியமிக்க, ஸர்வஜ்ஞரான இராமாநுசர் திருக்கச்சிநம்பிகளது திருவடிகளை வணங்கி ஓர் கைங்கரியம் நியமிப்பீராக வென்றனர். (எ-று.) (௨0)

௨௧. திருமஞ்சனந்தந்துதவுகென விராமாநுசனத்திறம்புரியத், தருமந்தனைநேர்யாமுனனத் தகைகேட்டுவகைதழைத்தருளால், அருமந்திரநூற்பெரியநம்பி தனைக்கூய்நீசென்றருட்காஞ்சி, வருமன்பிராமாநுசனைநம்பாற் கொணர்கென்றிசைப்பமற்றவனும்

(இ-ள்.) திருக்கச்சிநம்பிகள் நாடோறும் எம்பெருமானுக்குத் திருமஞ்சநதீர்த்தம் ஸமர்ப்பித்துக்கொண்டு வரும்படி நியமிக்க, இராமாநுசர் அவ்விதமே செய்தருள, தருமத்தைப் போன்ற யாமுநாசாரியர், அவ்விதத்தைக் கேள்வியுற்றுச் சந்தோஷ மதிசரித்து, அருளோடு கூடினவராய் அரிய மந்திரத்தையும் சாஸ்திரத்தையு முணர்ந்த பெரிய நம்பிகளையழைத்து, நீவிர்சென்று காஞ்சிபுரத்திலிருக்கும் அன்போடுகூடிய இராமாநுசரை நம்மிடத்திற் கொண்டுவருவீராக வென்று அருளிச்செய்ய, அவரும், (எ-று.)

௨௨. எவ்வாறவனைக்கொணர்வதென முனியாமுநனுமியாரொருவன், செவ்வாரிசத்தோன்சிவன்மகவான் முதலாந்தேவர்திரள் சிறிதும், ஔவாத்தனதுதகவோதத் திவலைக்கணமாவுடையோனென், றவ்வாரணங்கூறரிதுதியை யவன்கேட்டிடச்சொற்றழையென்றான்.

(இ-ள்.) அவரைக் கொண்டுவருவது எப்படி யென்று விண்ணப்பிக்க, யாமுநாசாரியரும் "யாவனொருவன் சிவந்த தாமரைப்பூவிலிருக்கும் பிரமன் சிவன் இந்திரன் முதலான தேவக்கூட்டங்கள் தனக்குச் சிறிது மொப்பாகாமல் (இவர்களைத்) தனது வைபவமாகிய சாகரத்தில் அணிக்கூட்டங்களாக வுடையவன்" என்று அந்த வேதம் பிரதிபாதிக்கும் பெருமானது ஸ்தோத்திரத்தை அவர் கேட்கும்படி சொல்லி அழைத்துவாரும் என்றருளிச்செய்தனர். (எ-று.) (௨௨)

வேறு.

௨௩. என்றுபுகறவமணியை யேதமிலான்பெரியநம்பி யிதயந்தேக்கிச், சென்றுதிருக்கச்சிபுகாச் சீலவிராமாநுசன்றன் செவியிற்சார, நின்றுபுகன்றிடவுவக்கித் துதியுரைத்தார்யாவரென வெடியோன்கேட்ப, நன்றுதெரியாமுநன்சொற் றுனையரங்கத்தழைத்தனனீ நடக்கவென்றான்.

(இ-ள்.) என்று அருளிச்செய்த ஸ்தோத்திரரத்தினத்தைக் குற்றமில்லாதவரான பெரிய நம்பிகள் திருவுள்ளத்திற்கொண்டு, பிரயாணகதியில் திருக்கச்சியை யடைந்து, சீலத்தையுடைய இராமாநுசரது திருச்செவியிற்படும்படி நின்று அதனை அருளிச்செய்ய, பெருமையோரான இராமாநுசர் உமக்கு இந்த ஸ்தோத்திரத்தை யருளிச்செய்தார் யாவரென்று கேட்டருள, நன்மையையுணர்ந்த யாமுநாசாரியர் அருளிச்செய்து உம்மைத்திருவரங்கத்துக்கு அழைத்தனர்; நீவிர் நடப்பீராக வென்றனர். (எ-று.)

௨௪. ஆதரத்தோடவன்பின்னர் நடந்தரங்கநண்ணுமுன்னே யாளவந்தான், சிதறக்காட்டியஞான முத்திரைக்கைவிடாதுமுத்தி சேரக்காண, நீதரத்தானம்மதத்திற் குனக்களித்தேமெனல்போன் முத்திரைக்கைநீங்கக், காதரத்தைநினைந்ததுவே யுபதேசமாய்த் தனது கருத்துட்கொண்டான்.

(இ-ள்.) பிரீதியோடு, பெரிய நம்பிகள் பின்னே நடந்து சென்று, திருவரங்கத்தைச் சேருமுன்னே, எம்பெருமானைக் காட்டிய ஞானமுத்திரையையுடைய திருக்கையை விடாமல் திருநாட்டுக்கெழுந்தருள, அவ்விருப்பைச் சேவித்து, நீவிரோ நமது மதத்தைப் பிரவர்த்தனஞ் செய்யத்தாமுடையீர்;

அதனை உமக்குக் கொடுத்தோமென்பதுபோல முத்திரைத் திருக்கை நீங்கிவிடவே, அவர் விருப்பத்தை யெண்ணி அதனையே உபதேசமாகத் திருவுள்ளத்திற் கொண்டனர். (எ-று.)

இராமாநுசர், ஸ்ரீ ஆளவந்தாரது விமலசரம விக்கிரகத்தைப் பாதாதிகேசாந்தமாகச் சேவித்தபோது அவரது திருக்கையில் மூன்று விரல்கள் மடங்கியிருக்கக்கண்டு அங்குள்ளாரை நோக்கி, இவர்க்குத் திருவுள்ளத்தி லேதேனுங் குறையுண்டோ? என்று கேட்க, அவர்கள் முறைபு வ்யாக்யாநஸமயத்தில், (௧) வ்யாஸபராசரரிடத்தில் உபகாரஸ்மிருதியும், (௨) நம்மாழ்வாரிடத்தில் பிரேமாதிசயமும், (௩) ப்ரஹ்மஸூத்ரத்துக்கு விசிஷ்டாத்வைதபரமான வ்யாக்யாநஞ் செய்யவுமாக மூன்று வாஞ்சை தமக்குண்டென்று பலகாலுமருளிச்செய்வ ரென்றுரைத்தனர். இராமாநுசர், இச்சரீரம் திடமாய் இவர் இருமையும் அடியேனிடத்துப் பரிபூர்ணமாய்ப் பகவான் அடியேனெண்ணியபடி முடித்துத் தந்தால் இம்மூன்று குறையையுந் தீர்க்கக்கடவேனென்று ஒவ்வொன்று யுரைத்தவுடனே அவரும் மடங்கியிருந்த ஆளவந்தாரது திருவிரல்கள் முறையே நிமிர்ந்து திருக்கண் மலர்களும் மூடினவாம். இந் காரணமாகவே இராமாநுசர், கூரத்தாழ்வானது திருக்குமாரரிருவருக்கும் வ்யாஸபட்டர் பராசரபட்டர் எனத் திருநாமஞ்சாத்தி முதற்குறையையும், பிள்ளான் என்பார்க்குத் திருக்குருகைப்பிரான் பிள்ளான் எனத் திருநாமஞ்சாத்தி அவரைக்கொண்டு திருவாய்மொழிக்கு பகவத்விஷயம் என்னும் ஆறாயிரப்படி வ்யாக்யாநஞ் செய்வித்தும் சிறிய கோவிந்தபட்டர் திருக்குமாரருக்குப் பராங்குசநம்பி யெனத் திருநாமமிட்டும் இரண்டாங் குறையையும், ப்ரஹ்மஸூத்ரத்துக்கு வ்யாக்யாநமாக ஸ்ரீபாஷ்ய மருளிச்செய்து மூன்றாங் குறையையும் நீக்கினர். இதனால் ஸ்ரீ ஆளவந்தார் நியமத்தின்படி, இராமாநுஜர், ஸ்ரீபாஷ்ய பகவத்விஷயங்களால் கீர்வாணவேதம் திராவிடவேதம் என்னும் உபயவேதங்களுக்கும் பிரவர்த்தகராயினரென்பது விளங்குதல் காண்க. (௨௪)

௨௫. இறைஞ்சினன்மாறெறிசமய மிலதைபடர்ந்திமிர்ந்துதிசை யெட்டும்போர்த்து, நிறைந்திடவோர்கொழுகொம்பாய் நின்றுலகைவாழ்வித்தாய் நிகரிலாதாய், அறைந்திடற்கரியபுகழ் முண்லையெனப்போற்றி யரங்கையாற்றான், உறைந்திலனன்றொருபகலு முலகேழிலொருவர்தனக் குவமையில்லான்.

(இ-ள்.) ஏழுலகங்களினும் ஒருவரும் தமக்கு ஒப்பில்லாதவரான இராமாநுசர் வணங்கி, பெருமானது சமயமாகிய கொடியானது படர்ந்து ஓங்கி எட்டுத்திக்கையும் போர்த்து நிறையும்படி ஒரு கொழுகொம்பாகிநின்று உலகத்தை வாழச்செய்தீர்! ஒப்பில்லாதீர்! சொல்லுவதற்கரிய கீர்த்தியையுடைய பெருமையிற் சிறந்தீர்! என்று துதித்துத் துக்கத்தை யாற்றமாட்டாதவராகி அந்தத் திருவரங்கத்தில் ஒருதினமும் தங்காமல், (எ-று.) (௨௫)

௨௬. குர்வுமெனக்குபதேச மளிக்குமுன்னேநீக்கினைநீ கொடியையென்று, அரவணையிற்றுயிலரங்கே சனைப்பணியா தெயிற்காஞ்சி யடைந்துமேலோர், பரவுதிருக்கச்சிநம்பி தனைபணுகாப்பதமலர்கள் பணிந்துபோற்றி, உரவகத்தாயெனையாட்கொண் டருள்கவெனவாங்கவனு முகந்துநோக்கா

(இ-ள்.) ஆசாரியன் எனக்கு உபதேசமளிக்கு முன்னே அவரை நீக்கு நின்றும் நீக்கிப் பரமபதத்திற்குக் கொண்டுபோய் விட்டனையாகை யால் நீ கொடியவன் என்று அரவணையின்மீது அறிதுயிலமர்ந்த திருவரங்க நகரப்பனைச் சேவிக்காமல் மதில்சூழ்ந்த காஞ்சிபுரத்தை யடைந்து, மேலானோர் வணங்கும் திருக்கச்சிநம்பியை யடைந்து அவர் திருவடிகளை வணங்கித் துதித்து, பெருமானே! என்னை யடிமைகொள்ள வேண்டு மென்று விண்ணப்பிக்க அவரும் சந்தோஷித்துக் கடாக்ஷித்து, (எ-று.) ()

உஎ. உலகுயிர்க்குநாதனைக்கண் டுடையயோகியரையிழி புயர் பென்றோர்ந்து, குலநினைப்பதன்றவரெக் குலத்தினுந்தோன்றலி னெனநீ குறித்துக்கோதில், நலபரமவைதிகத்தின் முறைகருதி யிதுபுரிய நயந்தாயேனும், அலருலகநடையிறப்ப வயர்தொழிலி தொழிகவென வறைந்தானம்பி.

(இ-ள்.) உலகத்துக்கும் உயிர்க்கும் நாயகனான பெருமானை யுள்ளபடி யறிந்திருக்கும் மகாசீலர்களை இழிவென்றும் உயர்வென்றும் விசாரித்து அவர்களது குலம் ஆராயக்கூடியதன்று; அவர்கள் எக்குலத்திலும் தோன் றுதலால் என்று நீர் துணிந்து, குற்றமற்ற நன்மையையுடைய பரமவைதி கத்தின் முறைமையை யெண்ணி (என்னை ஆசிரயிப்பதாகிய) இதனைச்செய்ய விரும்பினீரேயாயினும், பரவிய உலகமரியாதை கெடும்படி செய்யும் இந்தத் தொழிலை ஒழிவீராகவென்று திருக்கச்சிநம்பிக ளருளிச்செய்தனர். (எ-று.)

உஅ. என்னவுயர்கச்சிநம்பி விலக்கலுமாங்கவனிருதா ளிறைஞ் சியேத்திப், பின்னருமாதரவினிரா மாநுசனுந்துளவணிதேப் பெ ருமான்பாலென், முன்னகவின்றருளாளன் மொழிந்தருளுமொழி கேட்டம் முறைசொற்றேனும், நின்னருள்வைத்தெனையாட்கொ ண் டருள்கவெனவதுபுரிவா னேர்ந்தோனுநி

(இ-ள்.) இவ்விதமாக உயர்ந்த திருக்கச்சிநம்பிகள் விலக்குதலும், அங் கு அவரது இரண்டு திருவடிகளை வணங்கித் துதித்து, மீண்டும் பிரீதியோ டு இராமாநுசரும், திருத்துழாய்மாலை யணிந்த தேவப்பெருமானிடத்தில் என் எண்ணத்தை யருளிச்செய்து அவ்வருளாளன் அருளிச்செய்யும் மறு மொழியைக்கேட்டு அவ்விதத்தை அடியேனுக்கு அருளிச்செய்தாவது உம து திருவருள்கொடுத்து என்னையாட்கொண்டருள்வீராக வென்று அருளிச் செய்ய, அதைச்செய்ய உடன்பட்டவராகி, (எ-று.) (உஅ)

உகூ. நம்பியுந்தேப்பெருமானை யேகாந்தத்தடிவணங்கி நளினக் கானம், பம்பியநீன்மலைபோலும் படிவவிராமாநுசன்கூர் பரிவை நோக்கி, வம்பியல்கிடத்தினைத்தன் னுருவினாக்கும்வேட்டுவனின் மாட்சியாக்கி, அம்பிபவக்கடற்காகுங் குரவரியாரருளுகென வடிகடானும்

(இ-ள்.) திருக்கச்சிநம்பிகளும் தேவப்பெருமானை ஏகாந்தத்தில் திரு வடிகள் வணங்கி, தாமரைக்காடு பூத்த நீலமலைபோலும் திருமேனியையு டைய பெருமானே! இராமாநுசரது மிக்க பக்தியைக்கண்டு, புழுவைப் புதுமையுடைய தன்னுருவாகச் செய்யும் குளவியின் மாட்சிமையை ப்போலச் செய்து, பிறவிக்கடலுக்குத் தெப்பமாகும் ஆசாரியர் யாவர்! அருளிச்செய்கவெனத் தேவப்பெருமானும், (எ-று.)

இங்கு இராமாநுசர் பக்தியையுடன் நினைத்திருந்தும் நம்பிகள் ஆசாரிய விஷயத்தையே குறித்தருளிச்செய்தது யாதுக்கெனின், தம்மிடம் ஆசாரிய விஷயமொன்றைப்பற்றியே விண்ணப்பித்ததைப் பெருமானிடம் விண் ணப்பித்தபடியாம். (உகூ)

கூ0. ஆரணமுமுபநிடதந் தந்தமுந்தத்துவப்பொருளு மாயனுந் தேருங், காரணமுமருமறையு நமதருளாலவனறிவன் கருத்தேயா மூறு, சீரணவுந்துவிதமத மவனறியாதிலையெனினுந் தெரிசருநு கான்மர், பூரணரும்பெரியநம்பி குரவனெனவும்முறையே புகன் றுனம்பி.

(இ-ள்.) வேதமும் வேதாந்தங்களின் முடிவும் உபப்பிரும்மண விசா ரணையாலுண்டாகும் உண்மைப்பொருளும் பிரமதேவனும் அறியும் காரண பூதமான வஸ்துவும் அருமையான ரஹஸ்யங்களும் நம்முடைய அருளினா லே அவர் அறிவர். நாமே பரத்துவம்; சீரையுடைய மதம் பேதமே; இன் னும் அவரறியாதது இல்லையாயினும் தெரிவிக்குமிடத்தில் பெருமைபொருந் திய பூர்ணாசாரியரான பெரியநம்பிகள் ஆசாரியர் என்று பெருமான் அரு ளிச்செய்ய, அவ்விதமாகவே திருக்கச்சிநம்பிகள் இராமாநுசருக்கு அருளிச் செய்தனர். (எ-று.)

பேரருளாளப்பெருமா னருளிச்செய்த ஆறுவார்த்தைகள்

(க) பரத்வம்நாமே. (ஜகத்துக்குப் பரம்காரணமென்று வேதாந் களாற் சொல்லப்படும் பரப்ரஹ்மம் நாமே.)

(உ) தர்சநம் பேதமே. (ஸித்தாந்தத்திற் சொல்லப்படும் சித் அசித் ஈச்வரன் என்னும் தத்துவங்கள் மூன்றும் ஸ்வரூப ஸ்வபாவங்களால் பேத ப்பட்டிருப்பவைகளே யன்றி ஒன்றன்று.)

(௩) உபாயம் ப்ரபத்தியே. (ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஏற்ற உபாயம் ப்ரபத்தியே. ப்ரபத்தி என்பது நூல்களிற் சொல்லப்படும் கர்மம், ஞா னம், பக்தி என்று பலவகைப்பட்ட உபாயங்களைவிட்டு ஈச்வரனொருவனை யே ரக்ஷகனெனப்பற்றி எல்லாம் அவனிட்ட வழக்கென்று துணிந்திரு த்தலாம்.)

(௪) அந்திமஸ்மிருதி வேண்டா. (சரீரமுடிவில் ஈச்வரனை ஸ்மரிக்கவே ண்டுவதில்லை. எனவே முன் கூறியபடி தனையே யடைந்த சேத னனை கைவிடாது சிந்தித்துக் காப்பனென்றபடி.)

(௫) சரீராவஸாநத்திலே மோக்ஷம். (ஈச்வரனைப்பற்றின அச்சேதந னுக்குச் சரீரத்தின் முடிவில் மோக்ஷமுண்டாம்.)

(௬) பெரியநம்பிகளை ஆசிரயிப்பது (பெரியநம்பிகளை ஆசாரியராகக் கொள்க) என்பனவாம். (கூ0)

கூக. கேட்டவிராமாநுசனுங் கிளர்மதுராந்தகநகரங் கெழுமிக் கேழ்கூர், வாட்டடங்கட்டேவியொடுந் தடாகநாயகன்கோயில் வந்தனவரும், தாட்டடந்தாமரைப்பெரிய நம்பியைக்கண்டெனக் குனடி. தருவாயென்ன, வேட்டடைந்தேனெனவனுங் கச்சியிற் கூறுதுமெனத்தான் வீழ்ந்துபோற்று

(இ-ள்.) இதைக்கேட்ட இராமாநுசரும் பெருமையாலுயர்ந்த மதுராந்தகத்தில், ஏரிகாத்த பெருமான் திருக்கோயிலுக்கு அழகுமிகுந்த வாளைப்போன்ற விசாலமான கண்களையுடைய தமது தேவியாருடன் வந்து எழுந்தருளியிருக்கும் காளமும் பெருமையுமுடைய தாமரைமாலையணிந்த பெரிய நம்பிகளைச் சேவித்து, அடியேனுக்குத் தேவரீருடைய திருவடிகளைத் தந்தருளவீராகவென்று விரும்பி யாசிரயித்தேன் என்று அருளிச்செய்ய, பெரிய நம்பிகளும் திருக்கச்சிக்குச் சென்று அங்கு உபதேசிக்கிறோமென்றருளிச் செய்ய, அவர் திருவடிகளை இராமாநுசர் நமஸ்கரித்துத் தோத்திரஞ் செய்து (எ-று.) (௧௧)

௧௨. தெருட்டருபாழ்நறையே யாக்கைநிலையாமைகண்டு தெளிந்தாமின்போன், மருட்டருமெய்நிலையன்றே யிக்கணமேயுபதேச மளிப்பாயெனை, அருட்டருமாபூரணனு மகிழ்ந்தியாமுநமுனிதாள் கருதியாதிப், பொருட்டருமந்திரந்துவயங் குரவர்பரம்பரைமுறையே புகலாப்பின்னும்

(இ-ள்.) ஞானோபதேசஞ் செய்யும் யாமுநாசாரியரால் சரீரம் நிலையில்லாமையைக் கண்டு தெளிந்தோமே; பின்னைப் போன்று மருட்டுக்கும் சரீரம் நிலையுள்ளதல்லவே; இந்த க்ஷணமே உபதேச மளித்தருளவேண்டுமென்று கூற, அருள் கொடுக்கும் பெருமைபொருந்திய பெரிய நம்பிகளும் மகிழ்ச்சியடைந்து, யாமுநாசாரியரது திருவடிகளைச் சிந்தித்து, முதன்மையான அர்த்தபஞ்சக பிரதிபாத்தியமான திருமந்திரம் துவயமும் குருபரம்பரா பூர்வகமாக அருளிச்செய்து, பின்னும், (எ-று.) (௧௨)

௧௩. வனத்தகலு மிராமனினை புவியினுக்காய்ப் பரதனிடை வைத்தான்பாதம், எனத்தகையாமுநமுனியு மினக்காகத்தன துசரணென்பால்வைத்தான், உனக்கவன்றந்துளபொருளுங் கச்சியிற்காட்டுவமெனத்தன் னுடன்கொண்டேகி, கனத்தகைமையருளாளன் றனைக்காட்டிப்பொருளிவனீ காண்டியென்றான்.

(இ-ள்.) வனத்துக்குச் செல்லும் இராமபிரான் தன் பிரிவால் வருந்தும் பூமியிலுள்ளோருக்காகப் பரதாழ்வானிடத்தில் தமது [illegible] வைத்தனர். அதுபோல, பெருமையையுடைய யாமுநாசா[illegible] காகத் தமது திருவடிகளை என்னிடத்தில் வைத்தனர். உமக்கு அ[illegible] தருளின பொருளை நாம் கச்சிநகரத்திற் காட்டக்கடவோமென்று அவரை தம்முடனே கொண்டெழுந்தருளி மிக்க பெருமையையுடைய பேரருளாளப் பெருமானைக் காட்டி (யாமுநாசார்யர் என்னிடம் கொடுத்துவைத்த) பொருள் இப்பெருமானே; நீவிர் கண்டுகொள்வீராக வென்றனர். (எ-று.)

௧௪. இந்நீர்மைதெரிந்துறைநாட் டடத்திளிடையிருவர்மனைவியருமேகி, நன்னீரைக்கன்னல்கொடு முகக்குங்கால்முக்குதலுநனிமாறுகிச், சொன்னீர்மைத்தகைக்குருதே வியைத்தனதுதேவிகவில் சேர்வுகேளா, அந்நீர்மைக்குளநடுங்கி யரிசரியென்றவடனைப்பார்த் தழன்றுசொல்வான்.

(இ-ள்.) இவ்விதத்தைத் தெரிந்து அவருடன் வாசம் பண்ணிக்கொண்டு வருநாளில், குளத்துக்கு இருவரது தேவிகளும் சென்று நல்ல தீர்த்தத்தைக் கையிலுள்ள தோண்டிகொண்டு மொள்ளும்போது ஒன்றோடொன்று தாக்குதலும் ஒருவரோடொருவர் மிகவிரோதமாகி, சொல்லப்படும் நற்குணமும் பெருமையுமுடைய ஆசாரியரது தேவிகளைத் தமது தேவிகள் சொன்ன குற்றத்தைக் கேள்விப்பட்டு அந்தத் தன்மைக்குத் திருவுள்ளம் நடுக்கமடைந்து ஹரிஹரீ என்றருளிச்செய்து தேவிகளைப் பார்த்துக் கோபித்துச் சொல்லுவாராயினர். (எ-று.) (௧௪)

௧௫. அறந்தவத்திநரகமெனக் கமைத்தனைநீமிகக்கொடியாயந்தோவந்தோ, சிறந்தகுரவன்றேவி யுடனெதிர்ந்தாயுனையினியான் றீண்டல்பாவம், பிறந்தகஞ்செல்கெனத்துரவா வென்மருகன்முசரிப் பெயரோனல்லால், துறந்தனன்மற்றனைவரையு மெனச்சபதஞ்செய்தன்று முற்றத் துறந்தானுாயோன்.

(இ-ள்.) தருமங் கெடும்படி அக்கினிமயமான நரகத்தை யெனக்காமைத்தாய்; நீ மிகவும் கொடியவள்; அந்தோ! அந்தோ! சிறந்தவரான ஆசாரியர் தேவியுடன் எதிர்த்தாய்; உன்னை இனி நான் தீண்டுதல் பாவமாகும்; ஆகையால் நீ பிறந்த அகத்துக்குச் செல்லுவாயாக வென்று அனுப்பிவிட்டு, எனது மருமகனை முதலியாண்டானல்லாமல் மற்றெவரையும் துறந்தேனென்று சபதங்கூறி, தூயவரான இராமாநுசர் முற்றத் துறந்தனர். (எ-று.)

இதுவேயன்றிப் பசித்துவந்த பாகவதரொருவர்க்கு அன்னமிடுகவென்று நியமிக்க, அன்னமிருந்தும் இல்லையென்ற தொன்றும், திருக்கச்சிநம்பிகளைப் பரமபாவநரென றெண்ணாது தாழ்வாயெண்ணின தொன்றுமாக இரண்டு குற்றங்கள் இதற்கு முன்னரே தேவிகளிடத் துண்டென்றும், இக்கூடியது மூன்றுங்குற்ற மென்றும் சொல்லப்படும்.

இங்கு முதலியாண்டானன்றி மற்றெவரையு மென்றது தேகபந்துக்களை.

௧௬. கடனிறப்பொருளாளன் றுவராகத்துவராடை கவினச்சாத்தி, மடமமைத்துச்சிகையுடன்முந் நாவிலங்கமுக்கோலு மலர்க்கைதாங்கித், திடமனத்தோடிருக்குங்காற் சுப்பிரதிட்டுவுஞ்சருவ செந்திதானும், புடவியுற்றுத்தாசரதி புகழ்கூரவற்சனெனப் புகல்போரானோ

(இ-ள்.) கடலின்நிறமுடைய பேரருளாளப் பெருமானை ஆசாரியனுகக் கொண்டு காஷாயவஸ்திரத்தை விளங்கும்படி யணிந்து, மடமொன்று நிர்மித்து, சிகையுடன் முப்புரிநூலானது விளங்கும்படி முக்கோலும் மலர்போன்ற திருக்கையில் ஏந்தி வைராக்கியசித்தராய் எழுந்தருளியிருக்கும்போது, சுப்ரதிஷ்டு என்பவரும் சருவசெந்தியென்பவரும் பூமியிலவதரித்து முதலியாண்டான் புகழையுடைய கூரத்தாழ்வான் எனது சொல்லப்படும் திருநாமங்களை யுடையாரானவர்கள் (எ-று.)

௧௭. வந்துபணிந்தெமையடிக ளளித்தருள[illegible] வலானும், முந்துகருணையினவர்கட் குபதேசித்[illegible] முறைமைபூண்டார், இந்துதெரிந்தங்காள்யா [illegible] யவனையின்றேனு, நந்துதலுவேடயிராமாநு[illegible]போற்றுவதிப் [illegible] னன்றேமென்றான்.

118256

(இ-ள்.) வந்து சேவித்து, ஸ்வாமீ! எங்களை ரக்ஷித்தருள வேண்டுமென்ன, வேதார்த்தங்களில் வல்லவரான இராமாநுசரும் முற்படிம் கருணையினாலே அவர்களுக்கு உபதேசஞ் செய்ய, அவர்கள் அர்த்தபஞ்சகஞ் ஞானிகளாய் இராமாநுசருக்குத் தக்கபடி அடிமைபூண்டார்கள், அக்காலத்தில் யாதவப்பிரகாசரைப் பார்த்து அவரையீன்ற தாய், நீ விருத்தியாகுந் தவவேஷத்தை இராமாநுசரைப் போலத் தரித்தால் நல்லதாகு மென்றனள். (எ-று.) (௧௭)

௧௮. சிகையொடுமுந்நூலுமினித் தரித்தறவமென்றவையே செய்வாயென்னணிற், றகைமைபெறப்பூவலஞ்செய் திடவேண்டுமஃதின்றேற் றனுத்தூய்தன்றால், நகையுலகத்துளதாகு மெனப்புகலாத்துயில்காலை நனுகார்மேற்புள், உகையருளாளப்பெருமானவன்கனவிற்கருணையினா லுற்றுச்சொல்வான்

(இ-ள்.) சிகையுடன் முப்புரிநூலையும் இனிமேல் தரிப்பது தவமாகுமென்று அவற்றையே செய்ய வெண்ணினால், பெருமை பெறும்படி பூமிப்பிரதக்ஷிணஞ் செய்யவேண்டும்; அது இல்லாவிடில் சரீரம் பரிசுத்தமாகமாட்டாது; உலகத்தில் நகைப்பும் உண்டாகும் என்று சொல்லித் துயிலும்போது, சத்துருக்கள் மீது திருவடியாகிய புள்ளைச் செலுத்தும் பேருளாளப்பெருமான் அவர் கனவில் கருணையினாலே தோன்றி அருளிச்செய்வானாயினன்: (எ-று.) (௧௮)

௧௯. அவ்விவலம்வருதலிரா மாநுசனைவலம்வருத லகிலம்போற்றுந், தவமுமவன்றவமேமற் றவன்மதமேமதமெமக்கு மதுவேசால்பாம், கவலையுறேலிம்முறைநீ புரிகவெனவிழித்தவனுங் கச்சிநம்பிக், குவகையுடனுரைத்திதனை மாயனைக்கேளெனவவனு மு. ரைப்பமாலும்

(இ-ள்.) இராமாநுசரை வலம்வருதலே பூமிப்பிரதக்ஷிணஞ் செய்வதாகும்; அவரது தவமே உலகமெல்லாம் போற்றும் தவமாகும்; அவரது மதமே எமக்கு மதமாகும்; அதுவே மாட்சிமையுடையதாகும்; கவலையுடையவேண்டா. இவ்விதத்தை நீ செய்வாயாக வென்று கூற, அவரும் விழித்து, திருக்கச்சிநம்பிகளிடத்துச் சந்தோஷத்துடன் சொல்லி இதைப்பற்றிப் பெருமானைக் கேட்டருள்வீராக வென்று கூற, திருக்கச்சிநம்பிகளும் பெருமானிடம் விண்ணப்பஞ்செய்யப் பெருமானும், (எ-று.) (௧௯)

௨௦. யாங்கனவிற்புகன்றபரி சிழைக்கிலெமக்ககமகிழ்வெனிசைப்பாயென்னப், பூங்கமலத்தயனிகர் யாதவற்குநம்பியிது புகலக்கேளா, ஆங்கவனுமுட்கொடிரா மாநுசனைவலஞ்சூழா வடிதாழ்ந்தைய, நீங்கலவெனக்குனருள் பெறல்வேண்டுமெனவுரைப்பச் செவ்வியோனும்

(இ-ள்.) நாம் கனவில் சொல்லியபடியே செய்யின் எமக்கு மனமகிழ்வாகும் என்று சொல்லுவீராக வென்றருளிச்செய்ய, தாமரைமலரிருக்கும் பிரமதேவனுக்குச் சமானமான யாதவப்பிரகாசருக்குத் திருக்கச்சிநம்பிகள் இதை அருளிச்செய்யக் கேட்டு, யாதவப்பிரகாசரும் அதை மனத்திற்கொண்டு இராமாநுசரைப் பிரதக்ஷிணம்வந்து திருவடிகளை வணங்கி, ஸ்வாமீ! நீங்கு நீங்கும்படி எனக்கு உமது அருள் பெறுதல்வேண்டுமென்றுகூற, மனமொழி மெய்களாற் செம்மைவாய்ந்த இராமாநுசரும், (எ-று.)

௨௧. குரவனையுண்ணினைந்துசிகை முந்நூன்முக்கோல்கொடுத்துக் கோதில்ஞானம், பரவுமுபதேசமுடன் கோவிந்ததாசப்பேர் பரிவிற்சாத்தி, உரகவணைத்துயின்மாயன் சமயமுறையுணர்தருநூலுள்ளயாவுங், காதலநெல்லியிற்புகலாத் திருமாலைப்பரவியுளங் களிக்குங்காலை

(இ-ள்.) ஆசாரியனைத் தியானித்துக்கொண்டு சிகையும் முப்புரிநூலும் முக்கோலும் கொடுத்தருளி, குற்றமற்ற ஞானம் விருத்தியாகும் உபதேசத்துடன் கோவிந்த தாசனென்னும் திருநாமத்தைப் பிரீதியாடு சாத்தி, ஆதிசேஷசயநத்தில் அறிதுயிலமரும் பெருமானது தரிசனத்தின் முறைமைகளையுணரும் அரிய நூல்களையுள்ளவற்றை யெல்லாம் கையிலிருந்துள்ள நெல்லிக்கனியைப்போல அருளிச்செய்து பெருமானைத் துதித்துக்கொண்டு உள்ளங்களித்து எழுந்தருளியிருக்கும் போது (எ-று.) (௨௧)

௨௨. மதிலரங்கத்திருவரங்கப் பெருமானையரங்கத்தோர் மகிழ்ந்துநோக்கிப், பதிகளின்மிக்குயர்காஞ்சிநகர்க்கேகிவரதனைத்தாள் பழிச்சிக்கீத, விதிமுறையினகமகிழ்வித் தினியவிராமாநுசனை வினவிவேண்டிக், கதிதருநம்பதிகொணர்தி யெனவவனும்விடைகொடுமால் கச்சிசார்ந்தான்.

(இ-ள்.) திருவரங்கப் பெருமாளரையரை மதில்சூழ்ந்த திருவரங்கத்தில் நித்தியவாசஞ் செய்யுமவர்கள் மகிழ்ச்சிகொண்டு நோக்கி, திருப்பதிகளில் மிகவுயர்ந்த காஞ்சீபுரத்துக்குப்போய் வரதராசப் பெருமானைத் திருவடிதொழுது சங்கீதசாஸ்திர விதிமுறையினாலே திருவுள்ளமகிழச்செய்து இனியவரான இராமாநுசரைக்கேட்டு வேண்டி, பரமபதந்தரும் நமது திருவரங்கத் திருப்பதிக்குக் கொண்டுவருவீராக வென்று அருளிச்செய்ய, அவரும் விடைகொண்டு உயர்ந்த கச்சிமாநகரத்தைச் சார்ந்தனர். (எ-று.) (௨௨)

௨௩. சந்நிதியிற்கின்னரனிற் பாடலுமாலவனையரு டழைப்ப நோக்கி, என்னபொருள்கேட்பினும்யா மீகுவங்கேளெனவவனு மெந்தாயீசன், தென்னரங்கத்துறையவிரா மாநுசனைத்தருதியெனத் திருமால்நேரான், அன்னவனல்லாதனகே ளெனச்சரதனி பொய்த்தா லழகாமன்றே.

(இ-ள்.) (அப்படி வந்தவர்) பெருமான் சந்நிதியில் கந்திருவனைப் போலப்பாடுதலும் வரதராசப் பெருமான் திருவரங்கப் பெருமாளரையரை அருள் தழைக்கும்படி கடாக்ஷித்து என்ன பொருளைக் கேட்டாலும் நாம் கொடுக்கிறோம் கேட்பீராகவென்ன, அவரும் எனது ஸ்வாமியே! நியாமகனே! தெற்கின் கண்ணுள்ள திருவரங்கத்தில் நித்தியவாசஞ் செய்யும்படி இராமாநுசரைக் கிருபைசெய்தருளவேண்டும் என்ன, பெருமான் உடன்படாதவராகி இராமாநுசரல்லாத வேறெவற்றையேனும் கேட்பீராக வென்ன, ஸத்யவாநான நீ பொய்த்துப்போவையாயின் அழகாகுமன்றோ? (எ-று.) (௨௩)

௨௪. எனவரங்கப்பெருமான்சொற் றடிபணியவருளாள னிங்கேதமென்றுன், மனமகிழ்ந்தாங்கவனுமிரா மாநுசனைமால்பணித்தான்

வருகிரெயென்னத், தினகரனுத்தரதிசையி னின்றுதென்பாலடைந்த தெனச் சென்றனனனும், பணியிசைத்துயின்மாய னரங்கநகர் வடதிசையின் பக்கனுசார்ந்தான்.

(இ-ள்.) என்று திருவரங்கப்பெருமானரையர் சொல்லித் திருவடி வணங்கப், பேரருளாளப் பெருமான் (நீர் கேட்டபடி இராமாநுசனை) கொடுத்தோமென்றனன். பிறகு அவரும் திருவுள்ளமகிழ்ந்து இராமாநுசரைப் பெருமான் அருளப்பாடிட்டனர் வருவீராகவென்ன, சூரியன் வடதிசையி னின்று தெற்குத்திசைக்கு நடந்து சென்றது போலச்சென்று, இராமாநுசரும், ஆதிசேஷசயநத்தின்மீது துயிலமரும் பெருமானது திருவரங்கநகரத்தின் வடதிசையின் பக்கம் சேர்ந்தனர். (எ-று.) (௪௪)

௪௫. அயனையருளரங்கேசன் சேனைநாதனை நோக்கி யனைவரோடும், இயன்மறைநூறெரிந்தவிரா மாநுசனைக்கொணருதிநீ யெதிர்போயென்னச், சயன்விசயன்சனந்தனந்தன் மிடற்கருடன்றே வர்முதற் றலத்தோரோடும், புயலரங்கனருளப்பா டெனவெதிர் கொள்ளாமுகமன் புகன்றுன்மாதோ.

(இ-ள்.) பிரமதேவனைப்பெற்ற திருவரங்கநாதன் சேனைமுதலியாரைக் கடாக்ஷித்து, அனைத்துக் கொத்திலுள்ளாரோடும் தமிழ்நூலும் வேதசாஸ்திரங்களும் தெரிந்தவரான இராமாநுசரை நீவிர் எதிர்கொண்டுபோய்க் கொணர்வீராக வென்றருளிச்செய்ய, அவர் ஜயர், விஜயர், சுநந்தர், நந்தர், வலிமையுள்ள திருவடி தேவர்முதலிய அந்த ஸ்தலத்திலுள்ளவர்களோடும் மேகம்போன்ற திருவரங்கப்பெருமானது அருளப்பாடென்று எதிர்கொண்டு உபசாரஞ் சொல்லினர். (எ-று.) (௪௫)

௪௬. அரங்கவிமானத்தினைக்கண் டவனியில்வீழ்ந்திறைஞ்சிமுதிர்ந்கனியாம்பொன்னி, தரங்கமலிபுனற்படிந்து நியமமுடித்தணிநகரந் தன்னுட்சார்ந்து, துரங்கமணித்தேர்களிறு துதைவீதிபலகடந்து தூய்மைசான்ற, வரந்தருதாமோதரன்வாழ் மணிமுடிப்பொற்கோபுரத்தின் வாயில்வந்தான்.

(இ-ள்.) திருவரங்கத்திலுள்ள பிரணவாகார விமாநத்தைச் சேவித்து, பூமியில் விழுந்து வணங்கி, பெருமானுக்கு அலங்காரமாக விளங்கும் திருக்காவேரிநதியின் அலைகள் மிகுந்த நீரிற்படிந்து நியமங்களை முடித்து அழகிய நகரத்திற் பிரவேசித்து, குதிரை அழகிய தேர்கள் யானைகள் நெருங்கிய வீதிகள் பலவற்றையுங்கடந்து பரிசுத்தம் நிறைந்த வரத்தைக் கொடுக்கும் தாமோதரப் பெருமான் நித்தியவாசஞ்செய்யும் அழகிய சிகரத்தையுடைய பொன்மயமான கோபுரவாசலில்வந்து, (எ-று.) (௪௬)

வேறு.

௪௭. அங்கமெட்டவனியிற்படியவன்புளம்
பொங்கநீர்பொழிதரப்புளகமெய்தர
சங்கணிதிகிரிவாள்சார்ங்கந்தண்டேழிற
பங்கயவடிவுளங்கொடுபோற்றினன்.

(இ-ள்.) தமது எட்டங்கங்களும் பூமியிற்படியவும், பக்தி திருவுள்ளத்தி லதிகரிக்கவும், திருக்கண்கள் ஆநந்த நீர் பொழியவும், திருமேனி புளகந்தரவும், சங்கு அழகிய சக்கரம் நாந்தகம் சார்ங்கம் கதாயுதம் இவைகள் கூடிய அழகிய தாமரைகள் பூத்ததுபோன்ற திருமேனியைத் திருவுள்ளத்திற்கொண்டு வணங்கினர். (எ-று.) (௪௭)

* அங்கமெட்டாவன: கரங்களிரண்டு, பாதங்களிரண்டு, மார்பு ஒன்று, நெற்றி யொன்று, புயங்களிரண்டு. இவைகள் பூமியிற்படிய வணங்குவது ஸாஷ்டாங்க நமஸ்கார மெனப்படும்.

௪௮. மணிமுடிக்கோபுரவாயில்புகுருவான்
அணிமணியிழைத்தவேழரணந்தாண்டிப்
பிணியகற்றிடுபலிபீடந்தன்னொடு
பணிப்பகைக்கம்பமும்பணிந்துபோற்றினன்.

(இ-ள்.) அழகிய முடியையுடைய கோபுரவாசலிற் பிரவேசித்து, ஒளியையுடைய அழகிய மணிகளிழைத்த ஏழுதிருமதில்களைக் கடந்து, பிறவிப்பிணியை நீக்கும் பலி பீடத்தோடு கருடஸ்தம்பத்தையும் வணங்கித் துதித்தனர். (எ-று.) பணிபகை-கருடன். (௪௮)

௪௯. மாண்பணிப்பெட்டகம்வலஞ்செயாமணிப்
பூண்பயில்சயவிசயரையும்போற்றியே
சேண்பதுமத்தனுமாநுந்தேவருங்
காண்பருபொருளையுங்கண்ணிற்கண்டனன்.

(இ-ள்.) பெருமைபொருந்திய பணிப்பெட்டகமான சந்நிதியை வலஞ்செய்து, மணிகளிழைத்த ஆபரணங்களணிந்த ஜயவிஜயர்களையுந் துதித்து, உயர்ந்த பிரமனும் சிவனும் தேவர்களும் காண்பதற்கரிய பொருளான திருவரங்கத் தெம்பெருமானையும் தமது திருக்கண்களாற் சேவித்தனர். (எ-று.) பணிப்பெட்டகம்-திருவனந்தாழ்வானாகிய பெட்டி. (௪௯)

௫௦. பதயுகக்கமலமும்பசும்பொன்னாடையும்
முதலவேதனைத்தருமுளரிநாபியுந்
சததளக்கரங்களும்புயமுந்தாமமும்
அதரவித்துருமமாவமர்ந்தவாகமும்

(இ-ள்.) இரண்டு திருவடிகளாகிய தாமரைகளும், பசுமையான பீதகவாடையும், முதன்மையுடைய பிரமதேவனைப்பெற்ற தாமரைத் திருநாபியும், நூறு இதழ்களையுடைய தாமரைமலர்போன்ற திருக்கரங்களும், திருப்புயங்களும், திருமாலையும், திருவதரமாகிற பவளமும், பெரிய பிராட்டியார் நித்தியவாசஞ் செய்யும் திருமார்பும். (எ-று.) (௫௦)

௫௧. செடிவிதிமகரகுண்டலமுஞ்செங்கதிர்
முடியுநாசியுமதிமுகமுமொரறும்
நெடுநுதலவர்தரக்கருத்துநோக்கலாற்
படியிசைபடிந்திலன்பரவன்மேவினன்.

(இ-ள்.) ஒளிவிடும் மகரகுண்டலங்களும், சிவந்த பிரகாசமுண்டாகிய திருவபிஷேகமும், நாசியும், சந்திரன்போன்ற திருமுகமும், புன்முறுவலும், பிருகியும் தமது திருக்கண்களை அபகரிக்க, அவைகளுடன் திருவுள்ளமும் கூடியதினாலே பூமியின்மீது தரிக்காதவராகித் துதிக்கத் தொடங்கினர். (எ-று.) (௫௧)

௫௨. அளவிலாவண்டமுமமயின்னொராலிலை
இளமகவாய்த்துயின்றனையன்றென்பரால்
உளதலமெவனெனவுணர்கிலேனுயர்
துளவமாலிகையினுய்துலங்கச்சொற்றியால்.

(இ-ள்.) அக்காலத்தில் அளவுபடாத அண்டங்களையும் உண்டு, ஒரு ஆலிலையில் சிறு குழவியாகித் துயின்றாய் என்பார்கள். இப்படிப்பட்ட நீ இருக்குமிடம் எவ்விடமென்று அறிகிலேன். உயர்ந்த திருத்துழாய்மாலையையுடைய பெருமானே! இதனை விளங்கும்படி அருளிச்செய்வாயாக. (எ-று.)

௫௩. ஆதிநீயொருவனேயெனவாரணம்
ஓதிமற்றெவையுநீயெனவுமோதுமால்
பேதியாவுருவமோபிறவும்பெற்றியோ
நீதியாயுணர்கிலேனிகழ்ந்தவேங்கடமால்.

(இ-ள்.) ஆதிமூலப்பொருள் நீ யொருவனேயென்று வேதமும் பிரதிபாதித்து மற்றெவையும் நீயென்றும் பிரதிபாதிக்கும்; இப்படியிருப்பதால் இவைகள் உன்னோடு பேதமாகப்படாத உருவங்கள்தானோ? அல்லது உன்னோடு பேதமாக வேறுனவற்றையும் பெற்றிருக்கிறாயோ? நீதியானவனே! நான் இதனை அறியமாட்டுகிலேன்; எனக்கு நீ யருளிச்செய்ய வேண்டும். (எ-று.) (௫௩)

௫௪. மூலமேயென்றுவாய்மொழியவந்ததுன்
கோலமேயெனமறைகூறல்வாய்மையோ
ஞாலமேற்சமயநூலனவின்றவாய்மையின்
சீலமேயோவிதுதெளியக்கூறுவாய்.

(இ-ள்.) கஜேந்திராழ்வான் மூலமேயென்று வாயாற்சொல்ல, அப்போது வந்து தோன்றியது உனது திருக்கோலமே யென்று வேதம் சொல்லுவது உண்மையோ? அஃதன்றி, பூமியின்மீது பல சமயங்களிலுள்ள நூல்களும் சொன்ன உண்மையின் சீலந்தானோ? இவற்றைத் தெளியும்படி அருளிச்செய்வாயாக. (எ-று.) (௫௪)

௫௫. உண்டவெண்ணெயின்பொருட்டசோதையுன்னைநாண்
கொண்டடித்தஞமழக்கோலவாயினுள்
அண்டமுஞ்சராசரமனைத்துமாங்கவள்
கண்டனளென்பதென்கருத்திற்கையமே.

(இ-ள்.) நீ உண்டருளின வெண்ணெயின் பொருட்டாக யசோதைப்பிராட்டி உன்னைக் கயிறுகொண்டு அடிக்குமாத்திரத்தில் நீ அழ, அப்போது, உனது அழகிய வாயில் அண்டமும் அதிலுள்ள சராசரங்களனைத்தும் அப்பிராட்டி கண்டனளென்பது அடியேனது கருத்துக்கு ஐயமாகவேயுள்ளது. (எ-று.) (௫௫)

௫௬. இலகுறியசரோருகத்துதித்தவெண்கணன்
தலகுசராசரந்தருந்தகைமையெண்ணலேன்
பொலகுசெய்தாட்சரோருகம்பொடித்ததோர்துகள்
உலகுநிலைபவலியாய்விதித்ததோதுவாய்.

(இ-ள்.) செப்பூழாகிய தாமரையில் உற்பத்தியான எட்டுக்கண்களையுடைய பிரமதேவனையும் அண்டத்தையும் அதிலுள்ள சராசரங்களையும் நீ உண்டாக்கும் விதத்தை இவ்விதமென்று எண்ணுகிலேன்; அழகு செய்யும் உனது திருவடித்தாமரையி னின்றுதிர்ந்த ஒரு துகளானது திரண்டு கல்லை அகலிகையாய்ச் செய்ததை அருளிச்செய்வாயாக. (எ-று.) (௫௬)

௫௭. வழுத்திவிம்முறையிராமாநுசப்பெயர்
முழுத்தவன்மெய்புளகரும்பமுற்றுறப்
பழுத்தபேரன்பினுற்பணித்தகாலையெட்
டெழுத்தினிலுறைந்தருளிறையுங்கூறுவான்.

(இ-ள்.) இவ்விதமாகத் துதித்து இராமாநுசரென்னுந் திருநாமமுள்ள நிறைதவமுடையவர் புளகம் திருமேனி முழுதுமுண்டாக முதிர்ந்த பேரன்பினாலே பணித்தபோது, அஷ்டாக்ஷரப்பிரதிபாத்தியனான பெருமானும் அருளிச்செய்வாராயினன்: (எ-று.) (௫௭)

௫௮. இப்பதிமுதலநூற்றெட்டியாமுறை
மெய்ப்பதிமுதன்மையுஞ்சமயமேன்மையுஞ்
செப்பருஞ்செல்வமாயிரண்டின்சீர்மையும்
ஒப்பருந்தகைமைசாலுனக்குத்தந்தனம்.

(இ-ள்.) இந்தத்திருவரங்கம் முதலாக நாம் நித்தியவாசஞ்செய்யும் மெய்ம்மையான நூற்றெட்டுத் திருப்பதிகளின் முதன்மையும் சமயத்தின் மேன்மையும் சொல்லுவதற்கரிய உபயவிபூதி ஐசுவரியத்தின் நன்மையும் ஒப்பற்ற பெருமைநிறைந்த உமக்குக் கொடுத்தோம். (எ-று.) (௫௮)

உபயவிபூதி-லீலாவிபூதி, நித்யவிபூதி.

௫௯. எனத்திருவருள்புரிந்திரவிகான்முனை
தனக்குமேர்முதலிகள்தலத்துமற்றுளோர்
மனத்தினிலுவகைகூர்ந்திறைஞ்சிவாழ்த்தநற்
தினத்திலாசிரியருமுதன்மைசெய்தனன்.

(இ-ள்.) என்று திருவருள்புரிந்து, பெருமான் விஷயத்தில் பரிவுடைய இவ்வாறு மகாராசருக்கு ஒப்பான முதலிகளும் அந்தத்தலத்திலுள்ள மற்றுள்ளவர்களும் மனத்தில் சந்தோஷமிகுந்து வணங்கிவாழ்த்தா நிற்க, நல்ல தினத்தில், இராமாநுசர், யாவருக்கும் ஆசாரியராகும் முதன்மையைச் செய்தருளினன். (எ-று.) (௫௯)

௬0. தருமிராமாநுசன்முனுந்தன்மது
உருமலர்ப்பொழிலரங்கேசற்சோதையால்
திருமருசனைவிமானியற்றிவேதமிக்
கொருமலர்ச்சரணினைத்துதித்துவையுதான்

(இ-ள்.) ஆசாரியரர்க்குத் தகுந்த இராமாநுசரும், குளிர்ந்த தேன் சிந்தும் புஷ்பங்களையுடைய சோலைகள் சூழ்ந்த திருவரங்கநாதனுக்கு ஆநந்தத்தினாலே அதிகமான அர்ச்சனைகளையும் உற்சவங்களையும் செய்து, வேதத்தின்மீது கூடிய தாமரை மலர்போன்ற அப்பெருமானது திருவடிகளைத் துதித்து எழுந்தருளி யிருக்கும்போது, (எ-று.) (௬0)

௬௧. தவப்பரிபூரணன்சரணம்போற்றிநீ
உவப்பினுண்டனைபொருளெலாவையும்
பவப்பிணிமருந்தனையநாதியாலென
நிவப்பருமபொருளெலாநிகழ்த்தினம்பியும்.

(இ-ள்.) தவத்தையுடைய பூர்ணாசாரியரான பெரிய நம்பிகளது திருவடிகளைத் துதித்து, தேவரீர் அடியேனை உவப்பினாலே ஆண்டருளினீர்; ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்தன்ன அர்த்தங்கள் யாவற்றையும், பிறவிநோய்க்கு மருந்து போன்றவரே! அருளிச்செய்வீராக வென்ன, விருத்தியாகும் அரிய பொருள்களை யெல்லாம் இராமாநுசருக்கு அருளிச்செய்து, பின்னர் அப்பெரிய நம்பிகளும் (எ-று.) (௬௧)

௬௨. நாமுனர்ந்தருள்பொருணவிலக்கேட்டனை
யாமுனன்மறைப்பொருளின்னுங்கேட்குவான்
காமுறிற்கோட்டியூர்நம்பிகற்றுளோர்
தோமுனிதிருமலைநம்பிகோதிலான்.

(இ-ள்.) நாம் அறிந்த அர்த்தங்களைச் சொல்லக் கேட்டீர்; யாமுநாசாரியரது ரஹஸ்யார்த்தங்களை இன்னும் கேட்பதற்கு விரும்பினீராயின் கற்றவர்களில் தலைமைபெற்ற மகாசேஷரான திருக்கோட்டியூர் நம்பிகள், குற்றமில்லாதவரான திருமலைநம்பிகள், (எ-று.) (௬௨)

௬௩. வரங்களாலுயர்திருமாலையாண்டவன்
அரங்கநாயகனவனடிமையாயுளார்
இரங்கனீயிவர்வயிலெய்திக்கேளென
உரங்கலாவறிவினானுரைத்தபின்னரும்

(இ-ள்.) வரங்களாலுயர்ந்தவரான திருமாலையாண்டான், திருவரங்கப் பெருமாளரையர் ஆகிய இவர்கள் ஸ்ரீ ஆளவந்தாருக்கு அடிமையாயுள்ளவராவர்; இவர்களிடத்துக்கு இரக்கத்துடன் நீவிர் சென்று கேட்பீராகவென்று வலிமையான சாஸ்திரஞானத்தையுடைய பெரியநம்பிகள் அருளிச்செய்து, பின்னரும் (எ-று.) (௬௩)

௬௪. தன்புதல்வனையவன்சரணம்போற்றென
அன்புடனவன்றன்மாணாக்கனாகினான்
பின்புமுன்னிலக்குவப்பெயர்கொளவள்ளலுங்
கொன்புனைதருதிருக்கோட்டியூர்புகா

(இ-ள்.) தமது திருக்குமாரரை இராமாநுசரது திருவடிகளை யாசிரியராகவென்று அன்போடு அவரது சிஷ்யராக்கினார். அதன்பிறகு யாவருமென்னும் இராமாநுசரெனவும் திருநாமமுடைய உதாரியும் பெருமையுண்ட திருக்கோட்டியூரிற் பிரவேசித்து (எ-று.) (௬௪)

௬௫. கோட்டியூர்நம்பிபாற்குலவுமாமணி
வாட்டிருமாளிகைவாயிலண்ணியே
தாட்டிருமலர்பணிந்தேத்தித்தாழ்விலா
நாட்டியமறைநவின்றென்னையாள்கென்றான்.

(இ-ள்.) திருக்கோட்டியூர் நம்பிகளது பொருந்திய பெருமையும் மணியொளியுமுடைய திருமாளிகை வாசலையடைந்து, அவரது திருவடித் தாமரைகளை வணங்கித் துதித்து, தாழ்வில்லாமல் தேடிய ரஹஸ்யார்த்தங்களை அருளிச்செய்து என்னை அடிமை கொள்வீராக வென்றனர். (எ-று.) ()

வேறு.

௬௬. யின்வமற்றவனும்பதினெழுதினத்தி னளவைசொற்றிலன்மறைமேலோன், மனமிகத்தளர்ந்தயினைவிடுத்தகலா மருவிமற்றவன்றன்மாணுக்கர்க், கெனதிடுக்கணோக்கிடவுயர்நம்பிக் கிசையினென்றனுமவரெய்தி, உனதருட்கிராமாநுசனுரியவனுண் டனிக்குதியடிகளென்றுரைத்தார்.

(இ-ள்.) இப்படிகேட்க, திருக்கோட்டியூர் நம்பிகளும் பதினேழு தினம் வரையில் ரஹஸ்யார்த்தங்களை அருளிச்செய்திலர். வேதமுணர்ந்த மேலோரான இராமாநுசர், திருவுள்ளம் மிகவுந் தளர்ந்தும், நம்பிகளைச் சிறிதும் விட்டு நீங்காதவராயிருந்து, அவரது மாணாக்கர்களை நோக்கி எனது வருத்தத்தை நீக்கும்படிக்கு உயர்ந்த நம்பிகளுக்குச் சொல்லுவீராகவென்று சொல்லுதலும், அவர்கள் சென்று, ஸ்வாமிகாள்! உமது திருவருளுக்கு இராமாநுசர் உரியவராவர்; அவரை அடிமைகொண்டு ரக்ஷித்தருள்வீராக வென்று கூறினர். (எ-று.) (௬௬)

௬௭. நுவன்றவப்புகல்கேட்டருள்பெருகுதலும் புகன்றமாணாக்கரைநோக்கி, அவன்றனைத்தண்டம்பவித்திரமல்லா லகற்றியின்ட்டுறுத்திரென்றருளக், கவன்றமெய்த்தவனுங்கமூழைபுகவாவருதியென்றழைத்தலுக்களிகூர்ந், திவன்றனித்தாசரதியொடுங்கூரத் தவனொடும்பணிந்தனனெய்தி.

(இ-ள்.) இப்படி சொன்ன அந்தச் சொல்லைக்கேட்டு அருள் பெருகுதலும், சொல்லிய மாணாக்கர்களை நோக்கி, இராமாநுசனைத் தமது தண்டம் பவித்திரமல்லாமல் மற்றவைகளை விட்டு இவ்விடத்துக்கு அழைப்பீர்களாக வென்றருளிச்செய்ய, அவர்கள் வருந்தியவரான மெய்த்தவத்தையுடைய இராமாநுசருக்கு அவ்விதத்தைச் சொல்லி வருகின்று அழைத்தலும், இராமாநுசர் சந்தோஷமதிகரித்து ஒப்பற்றவரான முதலியாண்டானோடும் கூரத்தாழ்வானோடும் எழுந்தருளிச் சேவித்தனர். (எ-று.)

௬௮. பவித்திரத்தண்டமேவணவென்றிசைப்பப் பணிந்திராமாநுசன்மலர்கை, குவித்திவர்திருவோருருள்பொருளென்னக் கோட்டியூர்நம்பியுமிவரைப், புவிக்கணியனையாய்பருத்தரையென்த்தா சரதியைத்தண்டமாய்ப்புகலா, சவித்தனைவற்சலனாகூரனை யேபவித்திரமென்றனன்றவத்தோன்.

(இ-ள்.) (திருக்கோட்டியூர் நம்பிகள், நாம் சொன்னபடி) பவித்திரமும் தண்டமும் எங்கே என்று கேட்க, இராமாநுசர் பணிந்து மலர்போன்ற கைகளைக் குவித்து இவர்களிருவரும் தேவரீர் அருளிச்செய்த தண்டபவித்திரங்க ளென்று கூற, திருக்கோட்டியூர் நம்பிகளும் பூமிக்கு ஆபரணம் போன்றவரே! இவ்விருவருள் தண்டம் யார்? பவித்திரம் யார்? பகுத்துரைப்பீரென்று அருளிச்செய்ய, தவத்தையுடைய இராமாநுசர், முதலியாண்டானைத் தண்டமாக வருளிச்செய்து, அழகிய பெருமையையுடைய ஸ்ரீவத்ஸாங்கரான கூரத்தாழ்வானைப் பவித்திரமென் றருளிச்செய்தனர். (எ-அ.) (௬௮)

௬௯. இருவருநீயுமுணர்திமற்றெவர்க்குமிசைத்திடேலெனவருதிருத்தி, ஒருவருந்தெரிதற்கரிதியாமுகனன் அுரைத்தமெய்ப்பொருளிதென அுரைத்தான், பொருவருமிராமாநுசனுமப்பொருளைப் புயதிருக்கோட்டியூர்வீதியில், வெருவருமறவிககஞ்சனமிடுனவருங் கேண்மெனவெளிப்படவிரித்தான.

(இ-ள்.) திருக்கோட்டியூர் நம்பிகள், இவ்விருவரும் நீவிரும் உணர்வீர்களாக; மற்றெவர்க்கும் சொல்லவேண்டா வென்று அருதிருத்தி, ஒருவரும் அறிவதற்கரிதாக அக்காலத்தில் யாமுநாசாரியர் அருளிச்செய்த மெய்ப்பொருளிதுவாகுமென்று அருளிச்செய்தனர். ஒப்பற்ற இராமாநுசரும், அந்தப் பொருளைப் பெருமானது திருக்கோட்டியூர் மஹோற்சவத்தில், (திருக்கோயிற் றிருமதிலின்மீதேறி யிருந்து) பயப்படும்படியாக வரும் யமனுக்கு இனி யாரும் அஞ்சாதேயுங்கள் கேட்பீர்களாகவென்று வெளிப்படும்படி விரித்துரைத்தனர். (எ-அ.)

இங்கு நம்பிகள் அருளிச்செய்தது திருமந்திரார்த்தம். (௬௯)

௭௰. குரவர்சொற்றதனைக்கடந்துபுரிந்த கொடுமையாற்கூறருங்கொடிய, நரகமுற்றிடுவையெனத்திருக்கோட்டி நம்பிசொற்றதுமறைகவிலும், பரகதிகுலகோரனைவரும்பட ரயானிதுபகர்ந்த பாதகத்தால், அரவணைக்கடவுளையெங்குரவ வருநரகடைவி னுமழகே.

(இ-ள்.) ஆசாரியர் உபதேசித்ததை மறுத்து இப்படிச்செய்த கொடுமையாலே சொல்வதற்கரிய கொடியதான நரகமடைவீர் என்று திருக்கோட்டியூர் நம்பிகள் அருளிச்செய்ததும், (இராமாநுசர்) திருவரங்கநாதனைப் போன்ற எனது ஆசாரியரே! (தேவரீர் திருவடிகளை முன்னிட்டு அடியேன் சொன்னதனால்) வேதப்பிரதிபாத்தியமாகும் பரகதிக்கு உலகத்திலுள்ளோர் அனைவரும் செல்ல, இதைச்சொன்ன பாதகத்தினாலே நான் நரகத்தை யடைந்தாலும் எனக்கு அழகேயாகும். (எ-அ.) (௭௰)

௭௧. என்புகலிராமாநுசன்றனைமகிழ்ச்சிமெய்தலாற்றரங்கனாற்றமுனி, உனக்கிணையெவரேயுலகெலாங்கதிபெற் றுய்யவந்தவன் கொலிவென்று, வணக்கடற்புவிமிம்மதமுனபெயரால் வழங்குகவெனவரமருளித், தனக்குநேர்புதல்வன்றனையுமாகுகத் தக்கொடுத்தன்னபெருந்தகையோன்.

(இ-ள்.) என்றருளிச்செய்த இராமாநுசரைப் பெருந்தன்மையையுடைய திருக்கோட்டியூர் நம்பிகள் சந்தோஷமதிகரித்ததினாலே திருக்கைகளாலே தழுவி உமக்குச் சமானமானவர்கள் யாவர்? உலகத்திலுள்ளவர்களெல்லாம் மோக்ஷமடைந்து உஜ்ஜீவிக்கும்படி வந்தவரோ நீவிர்? என்றருளிச்செய்து, கடலையுடைய சமுத்திரஞ்சூழ்ந்த பூமியில் இந்த மதமும் உமது திருநாமத்தால் வழங்கக்கடவது என்றருளிச்செய்து, தமக்குண்டான திருக்குமாரரையும் இராமாநுசருக்குச் சிஷ்யராகக் கொடுத்தருளினார். (எ-அ.)

௭௨. பின்னருமிராமாநுசமுனிவதனை நோக்கியேபெருநகாதலிருவும், இன்னமும்பரமபொருள்சிலவுனக்கின் றிசைக்குவாமென்னினிசைக்கு, முன்னமேயனைத்திருவடிநிழலினிடையேபெருந்திராமாநுசமுனியும், அன்னதாதரமிக்கதனையுங்கேட்டற் கவிமயலுற்றிருந்தனனெருங்கி

(இ-ள்.) பின்னரும் நம்பிகள் இராமாநுசமுனிவரது திருமுகமண்டலத்தைக் கடாக்ஷித்து விருத்தியாகும் விருப்பத்தினாலே இன்னும் பரமமான பொருள்கள் சிலவற்றை உமக்கு இங்குச் சொல்ல எண்ணினோம்; அதைச் சொல்வதற்கு முன்னே நீவிர் திருப்தராயினீர் என்றருளிச்செய்ய, இராமாநுசமுனிவரும் அவ்வார்த்தையில் அபிநிவேசம் அதிகரித்து அதனையும் கேட்பதற்கு வருந்தி விருப்பமுற் றிருந்து, (ஒ-அ.) (௭௨)

௭௩. மாற்றமாதுரையானிருப்பநம்பியுதின் மனத்ததேதிசையெனவணங்கி, மேற்றகைமுனிநீவின்றருள்பொருளில் மேலுமொன்றுள்ளதாவினவின், ஊற்றமிலுளத்தருவன்கொவிடுன்பொருளுற்றதின்றுனத்தின், நேற்றகீவிகளைப்பொனவில்விரகொன்றமிலர்திருந்தனனென்றான்.

(இ-ள்.) மறுமொழி புகாயாமலிருக்க, நம்பிகளும் உமது மனத்தின் உள்ளது யாது சொல்லுவீராக வென்ன, இராமாநுசர் வணங்கி, மேம்பட்ட பெருமையையுடைய மகாத்மாவே! நீவிர் அருளிச்செய்த அர்த்தத்துக்கு மேற்பட்டதொன்று இருக்கிறதென்று கேட்பேனாயின் கேட்ட அர்த்தத்தில் ஊற்றமில்லாத உள்ளத்தவனாவேன்; தெளிவற்ற போவேனாயின் என் உள்ளத்தில் அவ்வுரைத்த பொருள் படிந்ததின்றாகும்; ஆகவே இன்று பெருமையையுடைய தேவரீரே அருளிச்செய்வீரென்று நான் சொல்லும் விதமொன்றையும் அறியாமலிருந்தனனென்றனர். (எ-அ.) (௭௩)

௭௪. கேட்டநம்பியுநீவருந்தலின்றேநீ பின்னுமோர்பகலிவண்ணெழுந்தருள்கூட்டநீத்தெம்பால்வருகெனவிடைகொண் டேகினன்கோட்டியூர்நம்பித், தாட்டாமரையிருபதுகமலங்களைத்தனித்தனத்தார்த்தனன்பரவமெய்த்தனுளும், வாட்டமில்பரமபொருளினின்றவர்க்கும் வழங்கனிடென்றனுமவணங்கா

(இ-ள்.) இதைக்கேட்ட திருக்கோட்டியூர் நம்பிகளும், நீவிர் வருந்த வேண்டா; இன்று விடைகொண்டு இன்னுமொருதினம் இவ்விடத்துக்கு உமமோடு சேர்ந்த கூட்டத்தை நீக்கி ஏகமிடத்துக்கு வருவீராக வென்று அருளிச்செய்ய, (அப்படியே இராமாநுசர்) விடைகொண்டு சென்றனர்; மற்றொருதினம் தனித்து, திருக்கோட்டியூர் நம்பிகளது தளிர்போன்ற திருவடித்தாமரைகளை யடைந்து வணங்க, உண்மையான தவத்தையுடைய நம்பி

கரும் வரம்பில்லாத பரமமான பொருளை அருளிச்செய்து, இதை வெளி க்கும் யாரிடமும் சொல்லவேண்டாவென்று அருளிச்செய்ததும், இராமாநுசர் நம்பிகளை வணங்கி. (எ-று.)

இன்று அருளிச்செய்தது சரமசுலோகார்த்தம். (எ௪)

எ௫. கூரனுக்கிசையாநிருபனடியேபேணி வெறென்னவுக்கூரவிப் பொருளைத், திருவரிக்கையீர்வொளியுமோர்பருக எவலவகொ ணடுனரவெனத்தெரிக்குங் காரணனரங்கத்திலக்குவமுனிவ னன் னவுந்நச்சிறுமதன், ஆதருவெனநிகரதனைப்பணிந்தடியேற் கப் பொருளருளவேண்டுமென்றனன்.

(இ-ள்.) அடியேன் கூரத்தாழ்வானுக்குச் சொல்லாமலிரேன் என்று கூற, அக்கூரத்தாழ்வான் இப்பொருளை அறிந்துகொள்ளும் தன்மையுடைய வரேயாயினும் ஒரு வருஷம் சிசுருஷைகொண்டு சொல்வீராகவென்று அரு ளிச்செய்ய, இதைத் தெரிந்துகொண்டு, பெருமான் எழுந்தருளியிருக்கும் திருவரங்கத்துக்கு இராமாநுசமுனிவர் எழுந்தருளலும், கூரத்தாழ்வா னும் அவர், நிறைந்த இருக்கையுடைய யதிராசரைப்பணிந்து அடி யேனுக்கு அந்தப்பொருளை அருளிச்செய்வீராகவென்று விண்ணப்பித்தனர். (எ-று.) (எ௫)

எசு. இலக்குவமுனியுங்கோட்டியூர்நம்பி யிசைத்தவாறிசைப்ப வேயிலங்கும், பொலக்குவடனதோள்வற்சனு மின்மைப் பொருள் வழுவென்னுமப்பொருட்டாற், தலக்களுற்றெறியாண்டயர்பணி விடையினதிகமோரிகசமுணாகற்று, நலத்தவமெனநாள்விலதே ர்ந்ததுவே புரியவப்பொருளவனளித்தான்.

(இ-ள்.) இராமாநுசரும் திருக்கோட்டியூர் நம்பிகள் அருளிச்செய்த படியருளிச்செய்யவே, விளங்கும் அழகிய மலைபோன்ற தோள்களையு டைய கூரத்தாழ்வானும், நித்தியமான எம்பெருமானது ஸ்வரூபமென்னும் அந்த அர்த்தத்தை யறிந்து, ஒருவருஷம் வருந்திச் செய்யும் சிசுருஷையி னும் ஒருமாசம் உபவாசமிருக்கும் தவம் சிறந்ததாகும் என்று சாஸ்திரங் கள் சொல்வதை யுணர்ந்து, கூரத்தாழ்வான் அவ்வாறே ஒருமாசம் உபவா சமிருக்க, இராமாநுசர் அவ்வர்த்தத்தை யுபதேசித்தனர். (எ-று.) (எசு)

எஎ. முதலியாண்டானுமப்பொருள்விரும்ப இலக்குவமுனியு முன்மொழிந்தோன், பதமலரடைந்தேகேளெனவனுங் கோட்டி யூர்நம்பிதாள்பணிய, இதமுறத்திங்கண்முவிரண்டேத்தச் சிறிது நோக்காமையினெனையன், றுதவருங்குணத்தானென்னவோரன்னக் கல் பணிதலுங்கருணையுமேகா.

(இ-ள்.) முதலியாண்டானும் அந்தப்பொருளை விரும்ப, இராமாநுச முனிவரும் முன்பு எனக்கருளிச்செய்த திருக்கோட்டியூர் நம்பிகளது திரு வடிகளை யடைந்து கேட்பீராக வென்றுரைக்க, முதலியாண்டானும் திருக் கோட்டியூர் நம்பிகளது திருவடிகளைப் பணிந்து இதமாகும்படி ஆறுமாச மிருந்து அநுவர்த்திக்க, நம்பிகள் சிறிதும் கடாக்ஷிக்காமையினாலே, என் னையாளும் அன்னுடைத்தகிய ஆசாரியனது குணங்களையுடையீர் என்று ஒரு ஸ்தானம் வணங்குதலும், ஆசாரியரும் கடாக்ஷித்து (எ-று.) (எஎ)

எஅ. தரும்புகழ்வித்தைதனங்குலனெனுமிம் மும்மதங்கடந்த லேசமமாம, திருத்துமதந்தமந்தான்மனத்தைவென்றிடுத லாதலா லிவற்றைநீக்கில், வருந்தலைவருதியெனத்திருவரங்க மருவிமா றுலன்பதம்வணங்கி, இருந்துதேவகியானம்பிபாற்பரமப் பொரு ளோவாய்த்தெவரினுமுயர்ந்தான்.

(இ-ள்.) புகழைத்தரும் வித்தை தனம் குலம் என்னும் இந்த முக்குறு ம்பையும் கடப்பதே சமமாகும்; இருத்தமுடைய அந்தத் தமமென்பது மனத்தை யடக்குவதாகும். ஆதலால் இவற்றை நீ நிவர்த்திப்பையாயின் வருத்தமாதி வருவாயாக வென்ன, முதலியாண்டான் திருவரங்கத்துக் கெழுந்தருளி மாறுலரான இராமாநுசர் திருவடிகளை வணங்கி யிருந்து, பின்னர் திருக்கோட்டியூர் நம்பிகள் திருக்குமாரத்தியான தேவகியார் புரு ஷகாரத்தால் நம்பிகளிடத்தில் விசேஷித்ததான சரமசுலோகார்த்தத் தைப் பெற்று யாரினுமுயர்ந்தனர். (எ-று.)

இவ்வாறன்றி, குருபரம்பரா பிரபாவம் முதலியவைகளில் திருக்கோட் டியூர் நம்பிகள் முதலியாண்டானை நோக்கி, உமது முக்குறும்பு கெடுமா யின் இராமாநுசரே உபதேசிப்பரென அவ்வாறே முதலியாண்டான் இராமாநுசரைச் சார்ந்து உபதேசம் பெற்றனரென்பது காணவருகிறது.

இதுவுமன்றி எச-வது செய்யுளின்படி திருக்கோட்டியூர் நம்பிகள் சரமசுலோகார்த்த மருளிச்செய்வதன் பொருட்டு இராமாநுசரை வீட்டிற் கு வருகவென நியமிக்க, அவ்வாறே இராமாநுசர் சென்று நம்பி திருமாளி கைப் புறத்தே "உந்துமதகளிற்றன்" என்னும் திருப்பாவைச் செய்யு ளில், "செந்தாமரைக்கையால் சீரார்வளையொலிப்ப வந்துதிறவாய் மகிழ்ந் தேலோ ரெம்பாவாய்" என்று அநுஸந்திக்குங் காலையில் நம்பிகள் திருக் குமாரத்தி, தேவகிப்பிராட்டி என்பார், திருக்கதவைத் திறந்ததும் இராமா நுசர் அவளை நப்பின்னைப்பிராட்டி யென்றெண்ணித் தண்டன் ஸமர்ப்பித் தனர். அதைக் கேள்வியுற்ற நம்பிகள், "உந்துமதகளிற்றன் அநுஸந்தான மோ" என்றருளிச்செய்து, இராமாநுசருக்குச் சரமசுலோகார்த்த மரு ளிச்செய்தன ராதலால், தேவகிப்பிராட்டியார் புருஷகாரமாக உபதேசிக் கப் பெற்றவர் இராமாநுசரே யென இராமாநுஜ திவ்யஸூரி சரிதையி னால் தெரியவருதலுங் காண்க. (எஅ)

எகு. எவரினுமுயர்ஸ்ரீ லக்குவமுனியும் யாமுனனிருசரணிறைஞ் சித், தவநனிவிளங்குமாலையாண்டான்பாற் றமிழ்மறைப்பொரு ளெலாந்தெரிந்து, கவலைதீர்ந்துயர்சீரங்கநாதன்பாற் கானமார் கடற்கரைகாறு, அவனிபோற்றிடவேதாந்தமாறுக்கார்க் கறைந் துகோயிலினிதமர்ந்தான்.

(இ-ள்.) யாவரினும் உயர்ந்த வைபவத்தையுடைய இராமாநுசரும் ஸ்ரீ ஆளவந்தாரது இரண்டு திருவடிகளை வணங்கி, மிகுந்த தவம் விளங் கும் திருமாலையாண்டானிடத்தில் தமிழ் வேதத்தின் பொருள்களை யெல்லா மறிந்து, துன்பந் தீர்ந்துயர்ந்த சிறப்புடைய திருவரங்கப் பெருமானாய விடத்தில் சந்திரமாகிய கடலின் கரையைக்கண்டு, பூமியிலுள்ளோர் போ ற்றும்படி மாறுக்கார்களுக்கு வேதாந்தார்த்தங்கள் அருளிச்செய்துகொண் டு திருவரங்கத்தில் இன்பத்துடன் எழுந்தருளி யிருந்தனர். (எ-று.) (எகு)

அ0. உறைதருங்கர்லேயுத்தரதிசைநின் றொருவருமிணையிலா
வொருதண், டிறைகொளுஞ்செங்கைச்சங்கரனெனும்பே ரெதியர
ங்கத்தில்வந்திருசீர், மறைதெரியிராமாநுசனேயென்னுடனீ வாதி
யென்றலுமவன்வருகென், றறைபுகன்றிருவோர்மதத்துமாறுதி யர
றிரண்டைந்துநாளகலார்.

(இ-ள்.) இப்படி எழுந்தருளியிருக்கும்போது, வடக்குத்திசையிலிருந்து ஒருவரும் ஒப்பில்லாதாராய் ஒற்றைத்தண்டத்தைக்கொண்ட சிவந்த கையையுடைய சங்கரனென்னும் பெயரையுடைய ஒரு யதியானவர் திருவரங்கத்துக்கு வந்து, சிறப்பையுடைய உபய வேதங்களையுமுணர்ந்த இராமாநுசனை என்னுடனே நீ வாதிப்பாயாக வென்று கேட்டலும், அவர் வருவாயாக வென்று வாதிக்கு அழைத்து, இருவரும் மதத்தில் மாறுபட்டுப் பதினேழுநாள் வரையில் நீங்காதவராகி, (எ-று.) (அ0)

அக. திருக்கிளர்நெடுந்தாளழகியநரசிங் கப்பெயர்ச்சீதரன்றிரு
முன், தருக்கமேபுரியவெலற்கருந்தகைத்தாச சங்கரன்மேம்படத்
தளரா, மருக்கமழ்துளவநரகரித்திருத்தாள் வழுத்தலாற்கனவின்,
மற்றவனுஞ், சுருக்கமாமறையொன்றளித்தலுமதனுற் சங்கரன்வலி
யெலாந்தொலேந்தான்.

(இ-ள்.) அழகுமிக்கிருக்கிற பெரிய திருவடிகளையுடைய அழகிய நரசிங்கனென்னுந் திருநாமமுடைய பெருமான் திருமுன்பே தருக்கஞ்செய்ய, அப்போது வெல்லுதற்கரிய தன்மையையுடையவராகச் சங்கரர் அதிகரித்துப் போகவே, இராமாநுசர் தளர்ந்து வாசனைகமழும் திருத்துழாய்மாலையையணிந்த நரசிங்கப்பெருமானது திருவடிகளைத் துதித்ததனாலே, அவரது கனவில் நரசிங்கப்பெருமானும் சுருக்கமாயிருக்கும் மறைவாக்கியமொன்றை யளித்ததும், இராமாநுசர் அதனாலே சங்கரரது வலிமையையெல்லாம் கெடுத்தனர். (எ-று.) (அக)

அஉ. சங்கரன்றிகைத்தன்றிலக்குவமுனிதாட் டாமரைச்சிர
சின்மேற்றரித்துச், செங்கண்மாலனையாயென்னையாள்கெனமுந்
நூலுடன்சிகையுமுக்கோலும், மங்கலமறைநூன்முறைமையிற்றரி
ப்பித் தெட்டெழுத்திசைத்துளமகிழ்வால், அங்கவற்கருளாளப்
பெருமாளெம் பெருமனென்றளித்தனனும.

(இ-ள்.) அப்போது சங்கரர் திகைத்து இராமாநுசமுனிவரது திருவடித்தாமரைகளைத் தமது சிரசின்மீது தரித்துக்கொண்டு, சிவந்த கண்களையுடைய பெருமானுக்குச் சமானமானவரே! என்னை யடிமைகொள்வீராக வென்றுகூற, இராமாநுசர், முப்புரிநூலுடன் சிகையையும் மூன்று தண்டத்தையும் மங்களகரமாகிய வேதசாஸ்திர முறைமைப்படி அணியச்செய்து, அஷ்டாக்ஷரோபதேசஞ்செய்து, திருவுள்ளமகிழ்ச்சியினாலே அச்சங்கரருக்கு அருளாளப்பெருமா னெம்பெருமானாரென்று திருநாமமளித்தனர். (எ-று.) (அஉ)

அங. மூலமந்திரத்துட்பொருணவின்றவனுக் கடியரின்முதன்
மைபுமுதவிச், சாலவேமகிழ்வுற்றிருக்குஞான்றனந்தாழ் வானு
மெச்சானுமெய்த்தவத்தின், சீலமார்தொண்டனூர்நம்பிமருதூர
நம்பியுங்குடக்கெனுந்திசைநின், றாலமார்கடவுளுதித்தருளரங்கத்
திலக்குவமுனிபதத்தடைந்தார்.

(இ-ள்.) இப்படி மூலமந்திரத்தின் உட்பொருளையருளிச்செய்து அவருக்கு அடியவர்களில் முதன்மையுமளித்து மிகவும் மகிழ்ச்சியடைந்து எழுந்தருளியிருக்குங் காலத்தில், அனந்தாழ்வானும் எச்சானும் மெய்த்தவத்தினொழுக்கமுடைய தொண்டனூர் நம்பியும் மருதூர் நம்பியும், மேற்றிசையினின்று ஆலமரத்தடியிலமர்ந்த சிவபிரான் அறிந்தருளும் திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் இராமாநுசமுனிவரது திருவடிகளை யடைந்தார்கள். (எ-று.) (அங)

அச. அவர்களையருளாளப்பெருமாளெம் பெருமனுக்கடியரா
யளித்தான், அவர்களுமினவன்றாள்பணிந்தவர்வழுத்த வெருவியவ்
வுயர்தவத்தோனும், பவமறுத்தெறுஞ்சீரிலக்குவமுனிதா ளகன்
மெனவருமப்பரிசே, இவர்வுடனிருநாள்பதுவமாலரங்கத் திடை
யிராமாநுசனிருந்தான்.

(இ-ள்.) வந்த அவர்களை அருளாளப்பெருமா னெம்பெருமானாருக்கு அடிமையாகும்படி யளித்தனர். அவர்கள் சந்தோஷத்துடன் அவர் திருவடிகளைப்பணிந்து துதிக்க, அந்த உயர்ந்த தவத்தையுடைய அருளாளப்பெருமா னெம்பெருமானாரும் (நமக்கும் ஆசாரியத்துவம் வருமாயின் ஸ்வாதந்திரியம் தலையெடுக்குமேயென்று) பயந்து, பிறவித்துன்பத்தைக் கெடுக்கும் சீரையுடைய இராமாநுசமுனிவரது திருவடிகளிடம் செல்லுங்கள் என்று கூறியருள, அவர்களும் அவ்விதமாகவே ஆசைப்பெருக்கத்தோடு இரண்டு திருவடிகளைத் துதிக்க, பெருமையையுடைய திருவரங்கத்தில் இராமாநுசரு மெழுந்தருளியிருந்தனர். (எ-று.) (அச)

அரு. இருப்பவனொருநாண்முதலிகடமைப்பார்த் தெம்பிரான்
றிருமலைக்கேகித், தருப்பயிறிருநந்தனவனம்புரிவோ ரவரென
வெழுந்தனந்தாழ்வான், விருப்பமொடவன்றாள்பணிந்தனன்பரவி
விடைகொளாவேங்கடமெனும்பேர்ப், பொருப்படைந்திராமா
நுசமுனிப்பெயரான் மலர்வனமழகுறப்புரிந்தான்.

(இ-ள்.) இப்படியிருக்குமவர் ஒருநாள் "சிந்துபூமகிழுந் திருவேங்கடத் தந்தயில்புகழ்க் காரெழி லண்ணலே" என்னும் அருளிச்செயலுக்கு வியாக்யான முறைத்தருளும்போது, அவ்வெம்பெருமானுக்குப் புஷ்பத்தில் அதிக பிரீதி யென்றருளிச்செய்து முதலிகளைக் கடாக்ஷித்து, எம்பெருமானெழுந்தருளிய திருமலைக்குப்போய் விருக்ஷங்கள் பொருந்திய திருநந்தனவனம் ஏற்படுத்தி, புஷ்பகைங்கர்யம் பண்ணுவோர் யாவருள்ளாரென்று கேட்டருள; அநந்தாழ்வா னெழுந்து விருப்பத்துடன் இராமாநுசரது திருவடிகளைப்பணிந்து துதித்து விடைகொண்டு, திருவேங்கடமென்னும் திருநாமமுடைய திருமலையையடைந்து, இராமாநுசமுனிவரது திருநாமத்தாலே மலர்களையுடைய நந்தனவனத்தை அழகுபெறும்படி யுண்டாக்கினர். (எ-று.) (அரு)

அசு. எத்தருந்தகைசாலிலக்குவமுனியும் பலபகலிறந்தபின்னி
பமுன், காத்தருளரங்கேசனைப்பணிந்தவன்பால் விடைகொளா
முதலிகளருகல, நித்தலிநகர்நினைந்திகடந்திவாழ் பதிபலதணந்த
னனிநிப், புத்தருணனிமிகுந்தமால்கருடப் பொருப்புடைத்
திருப்பதிபுகுந்தான்.

(இ-ள்.) சொல்லுவதற்கரிய பெருமையிருந்த இராமாநுசமுனிவரும், பலநாட்கள் சென்றபிறகு முன்பு கஜேந்திராழ்வானை ரக்ஷித்தருளிய திருவரங்கநாதனைப்பணிந்து அப்பெருமானிடத்து விடைபெற்றுக்கொண்டு, முதலிகள் தம்மைச்சூழும்படி திருவரங்க நகரத்தைவிட்டு, நீண்ட திருக்காவேரிநதியைக்கடந்து, பெருமான் நித்தியவாசஞ்செய்யும் அநேகந் திருப்பதிகளைச் சேவித்துக்கொண்டு நீங்கி, தாமரைபூத்த உந்தியையுடைய பெருமானெழுந்தருளிய கருடாசலமுடைய திருவேங்கடமென்னுந் திருப்பதியை யடைந்தனர். (எ-று.)

இராமாநுசர் திருவேங்கடயாத்திரை செய்கையில் இடையில் வழிகாட்டிய எற்றமிறைப்பா னொருவனைத் தெண்டனிட்டனரென குருபரம்பரையும் இராமாநுஜ திவ்யஸூரி சரிதையும் புகழ்கின்றன. (அசு)

அஎ. முன்பரகாலன்றிருமலைக்கிவரா முறைமையானுமம்
முறையே, அன்பமருளத்தானுமைதனுமன்றாழ் வான்முதலினை
வருமனுகிப், பொன்பயில்கிரிமீமிவர்கிலர்யெனிவிப் புவியுளோர்
யாவரும்போதார், என்பதுசொலமாணுக்கருந்தானுந் திருமலைக்
கேறுவானினைந்தான்.

(இ-ள்.) முற்காலத்தில் திருமங்கையாழ்வார் திருமலையில் ஏறுத முறைமையிலேயே, தாமும் அவ்விதமாகவே (திருமலையேறுமல்) பக்தியமைந்த திருவுள்ளத்துடன் எழுந்தருளியிருந்ததலும், அநந்தாழ்வான் முதலிய அனைவரும் வந்து, பொன்பொருந்திய இம்மலையில் நீவிர் ஏறியருளாவிடில் இப்பூமியிலுள்ளவர்கள் எவரும் வந்து எதிர்சென்று பெருமானைச் சேவிக்க மாட்டார்கள் என்பதைச் சொல்ல, இராமாநுசர், மாணாக்கர்களுந் தாமுமாகத் திருமலையில் ஏறுவதாக இசைந்தனர். (எ-று.) (அஎ)

அஅ. தெளிபுனல்படிந்துதவளமண்டரித்துச் சிதைவிலாச்சேட
வெற்படியின், புளியினைவணங்கியெங்கணுமேற்பதத்திற் கிவரதலா
ப்புந்தியிற்கொடுதான், களிமலர்மதுவார்ந்துண்முருரல்விளரிகைக்
கிளைமுதலிசைநலத்தின், அளிமுரல்வளங்கூர்திருமலைக்கிவர்வோ
ன் பரிவட்டப்பாறையையடைந்தான்.

(இ-ள்.) தெளிந்த தீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்து வெண்மையான திருமண்ணைத்தரித்து கெடுதலில்லாத சேஷகிரியான திருமலையின் அடிவாரத்தில் திருப்புளியை வணங்கி, எம்பெருமானது மேலான பரமபதத்திற்கு ஏறுவதாகத் திருவுள்ளத்திற் கொண்டு, வாசனையுண்டாய் குளிர்ந்த மலரிலுள்ள தேனைமுகந்து உழை குரல் விளரி கைக்கிளை முதலிய இசைகளின் நலத்தின்படி வண்டுகள் ஒலிக்கும் வளமிருந்த திருமலையிலேறியருளு மிராமாநுசர், பரிவட்டப்பாறையைச் சேர்ந்தனர். (எ-று.) (அஅ)

அகூ. மாயவன்றானுந்திருமலைநம்பி தன்னெதிர்செலச்சொனமறை
யின், தூயனுந்துளவமாலிகைக்கொண் டெதிர்வரக்கண்டடி
தொழுதே, நேயமாருலகின்குரவனிசிறியோர் போல்வரனீதியோ
வெனலும், ஆயவனென்னிற்சிறியரின்றெனலு மதிசயித்தவனொடு
நடந்தான்.

((இ-ள்.) பெருமானும் திருமலைநம்பியை நோக்கி இராமாநுசரை எதிர்கொண்டு செல்லுவீராக வென்றருளப்பாடிட, வேதம்போலத் தூய்மையையுடைய நம்பியும் திருத்துழாய் மாலையைத் திருக்கையிற் கொண்டு எதிரே வரக்கண்டு, அவரது திருவடிகளைத்தொழுது, நேசத்தையுடைய பூமியிலுள்ளோர்க்கு ஆசாரியரான தேவரீர் சிறியவர்களைப்போல் வருதல் நீதியாகுமோவென்று இராமாநுசர் சொல்லுதலும், நம்பியும் (இவ்விடத்தில்) என்னிலும் சிறியவர்கள் இல்லையென்று சொன்னவளவில், இராமாநுசர் அதிசயித்து அவரோடு நடந்தனர். (எ-று.) (அகூ)

வேறு.

கூ0. இத்திருப்பதிவாழெந்தையடியவர்பெருமையெல்லாம்
முத்திருத்தியவேயன்னநகைத்திருமங்குமார்பத்
தத்திருத்துளவத்தொங்கலரியலாரறியாரென்றுப்
பத்திரப்பழுவஞ்சூழ்கல்வேலியின்பக்கஞ்சார்ந்தான்.

(இ-ள்.) இந்தத் திருப்பதியில் நித்தியவாசஞ்செய்யும் எம்பெருமானது அடியார்களுடைய பெருமையையெல்லாம், முத்துக்களை வரிசையாக வைத்ததுபோன்ற தந்தபந்தியையுடைய அலர்மேல்மங்கைப் பிராட்டியார் "அகலகில்லே" னென்றிருக்கும் திருமார்பினிடத்துப் பெருமைபொருந்திய திருத்துழாய்மாலையையுடைய பெருமானல்லாத பிறர் அறியாரென்றுகொண்டு, இலைகளையுடைய காடு சூழ்ந்த கல்வேலியின் பக்கத்தைச் சேர்ந்தனர். (எ-று.) (கூ0)

கூக. துளங்குகல்வேலிகாறுஞ்சேறலுந்துளவத்தொங்கல்
இலங்குதோளீசன்சேனைநாதனையெதிரேயேவ
நலங்கிளர்முனியுஞ்சேனைநாதனைப்பணிந்தன்பின்
வலஞ்செயாவுயர்வைகுண்டக்கோபுரவாயில்வந்தான்.

(இ-ள்.) விளங்கும் கல்வேலிவரையில் செல்லுதலும், துளவமாலை பிரகாசிக்கும் திருத்தோள்களையுடைய திருவேங்கடத் தெம்பெருமான், சேனைமுதலியாரை எதிராக வரவிடுத்தருள, நன்மையிருந்த இராமாநுசமுனிவரும் அந்தச் சேனைமுதலியாரைப் பணிந்து பக்தியோடு வலஞ்செய்து உயர்ந்த வைகுண்டக் கோபுரவாசலை யடைந்தனர். (எ-று.) (கூக)

கூஉ. நிகரில்கோனேரிநீருட்படிந்துதன்னியமமுற்றி
அகழ்திருவீதிநான்கும்வலம்வராவலர்ப்பூஞ்சோலை
புகர்மணிமடங்களம்பொன்மாளிகைபுண்டரீகம்
மிகமலர்சுனைகள்பூமண்டபமலர்விரிபூம்பொங்கர்

(இ-ள்.) ஒப்பற்ற ஸ்வாமிபுஷ்கரிணி தீர்த்தத்திற் படிந்து நமது நியமங்களை முடித்து விசாலமான திருவீதிகள் நான்கையும் வலம்வந்து, மலர்களையுடைய அழகிய சோலைகள், நிறமுடைய மணிமயமான மடங்கள், அழகிய பொன்மயமான மாளிகைகள், தாமரைமலர்கள் மிகமலர்ந்த சுனைகள், பூமண்டபங்கள், மலர்கள் புஷ்பிக்கும் அழகிய மரங்கள் ஆகிய இன்னவைகளை யெல்லாம் (எ-று.) (கூஉ)

கூங. கண்டுகோனேரிவாழுங்குருகினங்கறங்கல்காவில்
வண்டுகள்முரலுங்கீதசசுவைசெவிமடுத்தமாந்தி

விண்டுவாழ்புவிவைகுண்டமிதுவெனும்கவானந்தங்
கொண்டுளங்களித்துச்செம்பொற்கோபுரவாயிற்சேர்ந்தான்.

(இ-ள்.) சேவித்துக்கொண்டு கோனேரியில் வாழும் நீர்ப்பறவைகளின் ஓசையையும் சோலைகளில் வண்டுகள் சத்திக்கும் கீதச்சுவையையும் திருச்செவிசார்த்தி, சருவவியாபகனை பெருமான் நித்தியவாசஞ்செய்யும் பூலோகவைகுண்ட மிதுவாகுமென்று மிகவும் ஆநந்தங்கொண்டு திருவுள்ளங்களித்து, சிவந்த பொன்மயமான கோபுரவாசலைச் சேர்ந்தனர். (எ-று.) (கூங)

கூச. மருப்புமண்கொண்டஞானப்பிரான்றிருமலர்த்தாளான்ற
விருப்புடன்வணங்கிப்போற்றிநிழறிரும்பாதமேன்மைத்
திருப்புளிகருடகம்பந்தனையிருசெங்கைகூப்பிப்
பொருப்புறழ்பொருவிறிண்டோள்புவிதொடப்பணிந்துபோற்று

(இ-ள்.) தமது கோரைப்பல்லாலே பூமியைக்கொண்ட ஞானப்பிரானது தாமரைமலர்போன்ற திருவடிகளை நிறைந்த விருப்பத்துடன் வணங்கித்துதித்து, தனது நிழல் திரும்பாத மேன்மையையுடைய திருப்புளி கருடஸ்தம்பங்களை இரண்டு சிவந்த திருக்கைகளைக்கூப்பி, மலையையொத்த ஒப்பற்ற திண்ணிய திருத்தோள்கள் பூமியைத் தொடும்படி பணிந்து போற்றி (எ-று.) (கூச)

கூரு. தவாதமெய்த்தவத்தானன்பிற்சண்பகாவரணஞ்சூழ்போந்
தவாவறச்சூழ்ந்தானம்பொற்கோபுரவாயிலண்மி
உவாவினிற்கிளர்ந்தவோதத்துவகையானுலைப்பில்சோதிக்
குவான்மணிக்கனகந்தன்னாற்குயிற்றியகோயில்புக்கான்.

(இ-ள்.) கெடாத மெய்த்தவத்தையுடைய இராமாநுசர், அன்போடு சண்பகாவரணத்தைச் சுற்றிவந்து, அவாவறச்சூழ்ந்தான் அழகிய பொன்மயமான கோபுரவாசலையடைந்து, பூரணசந்திரோதய காலத்தில் உயர்ந்தோங்கிய சமுத்திரம்போன்ற சந்தோஷத்துடன் கெடாத பிரகாசமுடைய ரத்தினக்கூட்டத்தாலும் பொன்னாலும் செய்தமைந்த திருக்கோயிலிற் பிரவேசித்தனர். (எ-று.) (கூரு)

கூசு. கமலமான்றலமானந்தநிலயநற்கனகச்சோதி
அமலமார்மணிமாமண்டபாதிகண்டார்வத்தோடும்
விமலமானத்தைநோக்கிவிண்ணுளோர்விழைந்துபோற்றும்
சமரமாநரசிங்கன்றாள்பரவினன்றகைமையிக்கான்.

(இ-ள்.) தாமரைமலரில் வீற்றிருக்கும் பெரியபிராட்டியாருக் கிருப்பிடமாய் நல்ல பொற்சோதியுடன் நிர்மலமான அழகிய பெருமைமிக்க மண்டபம் முதலியனவைகளைச் சேவித்து, விருப்பத்துடன் குற்றமற்ற ஆநந்தநிலய விமாநத்தைத் தரிசித்து, தேவர்கள் விரும்பிப் போற்றும் போரையுடைய பெருமைபொருந்திய நரசிங்கப்பெருமான் திருவடிகளைப் பெருமைமிக்க இராமாநுசர் வணங்கினர். (எ-று.) (கூசு)

வேறு.

கூஎ. துரகாதியங்களுறைவாகனங்க டொழுதாதிசேனைமுதலோன், உரகாரிவாயுசுதனுதியோக ரொருமூவரேனையரொடும்,

கரகாமர்கஞ்சமுகிழாவணங்கி யுலகேழ்கடந்தமிடல்சால், நரகாரி செம்பொனணிகோயில்வந்து நனுகாவிறைஞ்சிநவில்வான்.

(இ-ள்.) குதிரைநம்பி முதலாக அங்கிருக்கும் வாகனங்களைத் தொழுது, முதன்மைபெற்ற சேனைமுதலியார், பெரிய திருவடி, ஆஞ்சநேயர் ஆகிய நியானபரர் மூவர் இன்னுமுள்ள மற்றவர்களையும் திருக்கைகளாகிய அழகிய தாமரையைக் கூப்பி வணங்கி, ஏழுலகங்களையும் கடந்ததான வலிமைமிகுந்த நரகாசுரனை வென்ற திருவேங்கடமுடையானது செம்பொன்மயமான அழகிய திருக்கோயிலுக்கு வந்து சேர்ந்து வணங்கித் துதிக்கலாயினர். (எ-று.) (கூஎ)

கூஅ. உந்தித்தடத்திலொருதாமரைக்க ணொருசேயைமுன்னமுதவா, முந்தித்தழைத்தவுலகேழொடேழு முளதாவிதிப்பமுயல்வாய், வந்தித்துநிற்குமவனாலொர்சேயை வருவித்துமற்றவையெலாஞ், சிந்தித்தழித்தியருளாலளித்தி திறனன்றுநன்றுதிறலோய்.

(இ-ள்.) திருவுந்தியாகிய தடத்தில் பூத்த ஒரு தாமரையில் பிரமனை ஒரு புத்திரனை யாவருக்கும் முற்படச் சிருஷ்டித்து, முற்பட்டுண்டான பதினாலுலகங்களும் நிலைபெறும்படி சராசரங்களை யுண்டாக்க முயலுவாய்; உன்னைத் துதித்து நிற்கும் அப்பிரமனால் சிவனாகிய ஒரு புத்திரனை உண்டாகச்செய்து, முன்னுண்டான சராசரங்களை யெல்லாம் சிந்தனைசெய்து அழிப்பாய்; உன்னுடைய கிருபையினாலே ரக்ஷிப்பாய். இவைகளைச் செய்யும் வல்லமையுடையவனே! இந்தத்திறமை மிகநன்றேயாகும். (எ-று.) (கூஅ)

கூகூ. பாதத்தில்வந்தபுனலானகங்கை படிமீதிழிந்துபவமாம், ஓதத்திலென்றுமமிழாதவண்ண முயர்வீடுநல்குமுனாசால், வேதத்தினந்தமுணராதவுன்ற னிலையார்விளங்கவறிவார், பூதத்திசைந்தவடிவாயகன்று புணராதுநின்றுபுணர்வாய்.

(இ-ள்.) உனது திருவடியில் உண்டான நீர்மயமான கங்கையானது, பூமியின்மீ திறங்கி, பிறவியாகிய சமுத்திரத்தில் ஆன்மாக்கள் எப்போதும் அமிழாதவிதமாக உயர்ந்த மோக்ஷத்தைக் கொடுக்கும். நித்தியமிகுந்த வேதாந்தம் அறியாததான உனது நிலையை விளங்கும்படி யாவர் அறிவார்கள்? பூதங்களாலுண்டான வடிவுகளாய் அவைகளல்லவாய் அவைகளில் கூடாமல் நின்று கூடியிருக்குமவனே! (எ-று.) (கூகூ)

௫00. அடியோரிரண்டுமணிவாமமும்பொ ன்னியாடையின்றனழகும், படியோதுமண்டமதுகோடிதந்துபடர்காமருந்திமலரும், கொடியோர்மருங்குலலர்மென்மடந்தை குலவாகமுங்குறைவிலா, நெடியோயரங்கநகர்வாழ்முகுந்த நிகராநிறைந்தவடிவும்

(இ-ள்.) குறையென்றுமில்லாத நெடியவனே! திருவரங்கநகரத்தில் வாழும் முகுந்தனே! திருவடிகளோரிரண்டும், திருத்தொடைகளும், பொன்னாலான அழகிய ஆடையினழகும், பூமியிலுள்ளோர் சொல்லும் அண்டங்கள் பலவற்றைப் பெற்று அழகு விருத்தியாகும் திருவுந்தியாகிய மலரும், ஒரு கொடியைப்போன்ற இடையையுடைய அலர்மேன்மங்கைத்தாயார் நித்தியவாசஞ்செய்யும் திருமார்பும், ஒளியுடன் நிறைவுற்ற திருமேனியும், (எ-று.) (௫00)

௧௦௧. கண்டேனயர்ந்தகனபாதகங்கள் களைவமெனுங்கவர்வதே, கொண்டேனிறந்துபிறவாததன்மை குலையாவரந்தருகுவாய், தண்டேனலங்கறுளவாவுகந்த மலையேதலங்களெனுநீர், உண்டேயுமிழ்ந்தமுகிலேபவங்க ளொழியாதொழிந்தமுதலே.

(இ-ள்.) சேவித்தேன்; நான் செய்த கனமான பாதகங்களை நீக்குவாயென்னும் ஆசைமிகுதியே கொண்டேன்; இறந்துபிறவாத தன்மைகெடாத வரத்தை யளிப்பவனே! குளிர்ந்த தேனையுடைய மாலையானது திருத்துழாக வுகந்த மலைபோன்றவனே! உலகங்களென்று சொல்லும் நீரையுண்டு மறுபடியும் உமிழ்ந்த மேகம்போன்றவனே! பிறவிகள் சம்பவித்து ஒழியாமல் சுபாவத்திலேயே ஒழிந்த காரணபூதனே! (எ-று.) (௧௦௧)

௧௦௨. என்றுகாதலொடிசையாவழுத்தி யிசையாமறைக்குமிசையா, நின்றுனிருக்குமுயர்சேடவெற்பை நிகராம்நினைகிலெவையும், ஒன்றுபுவிக்கவெணவோகைமிக்க வரவோனொர்பக்கமுறுவோர், தன்றுன்டமிழ்ச்சியுறைவானதிக்கு ஞயர்பாயுதித்ததனைசால்

(இ-ள்.) என்று பிரீதியோடு சொல்லித் துதித்து, ஸ்வாத்தையுடைய வேதத்துக்கும் நினைக்கவும் சொல்லவும் இசையாமல் நின்றவனை பெருமானிருக்கும் உயர்ந்த திருவேங்கடமலையை வேறொன்றுக்கு ஒப்பிக்க நினைப்பின், இப்பூமியில் எவையும் பொருந்தாதென்று சந்தோஷமிகுந்த ஞானவலிமையையுடைய இராமாநுசர், ஒருபக்கத்தே மகநீஸ்வர்கள், தமது திருவடிகளைத் துதித்துக்கொண்டிருக்கும்படி நதிகளி லுயர்வாகத் தோன்றிய பெருமைமிகுந்த, (எ-று.) (௧௦௨)

௧௦௩. ஆகாயகங்கையொடுபாவநாச மிவையன்பிறுடியருநால், ஏகாந்தியன்பரொதியீசராகு மிருவோரைவைத்தினையிலா, மாகாந்தனின்பமுறமாலெதிப மகபூசைமற்றுமெவையும், நாகாழிதங்குபுயஞானயோகி நலமாவியற்றிகைசயான்

(இ-ள்.) ஆகாசகங்கையோடு பாவநாசம் இவைகளில் அன்போடு தீர்த்தமாடி, அரிய நான்கு ஏகாந்தியன்பர்கள் எதித்தலைவராகும் இருவரையும் ஏற்படுத்திவைத்து, ஒப்பில்லாத ஸ்ரீநிவாசன் இன்பமுறும்படி திருமாலை திருவிளக்கெரிக்கை பெரிய திருவாராதநம் மற்று மெவற்றையும், சங்கும் சக்கரமும் நிலைபெற்ற திருத்தோள்களையுடையாராய் ஞானமுடைய யோகியராகிய இராமாநுசர் பிரீதியோடு நன்மையாகச்செய்து வைத்து (எ-று.) (௧௦௩)

௧௦௪. உலகாளுமன்னனனுகாவணங்க லொடுமாசியொன்றுவகையால், பலகாலெவின்றுவளமேகிளர்ந்த பதியாளதொன்றுகவரா, இலகாழிசங்குமுளமாயனன்ப ரினையாமலின்பமுறவே, அலகானதின்றிவளர்சிலனன்பி னருளாவணங்கியரிதாள்

(இ-ள்.) அந்நாட்டையாளும் மன்னன்வந்து வணங்குதலும், அம்மன்னனுக்கு ஆசீர்வாதமொன்றைச் சந்தோஷத்தோடு பலமுறையு மருளிச்செய்து, அவனிடம் வளமிகுந்த ஒரு ஊரைப்பெற்று, அங்கு, விளங்கும் திருவாழி திருச்சங்குகளைத் திருத்தோள்களிலுடையாரான பாகவதர்

கள் சோர்வடையாமல் இன்பமுறும்படி, கணக்கில்லாமல் அபிவிர்த்தியாகும் கலியாணகுணங்களையுடைய இராமாநுசர் பிரீதியோடு அவர்கட்கு அளித்து, பெருமானது திருவடிகளை வணங்கி (எ-று.) (௧௦௪)

௧௦௫. விடைகொண்டுதொண்டுபுரியன்பர்சூழ மிகுசீலநம்பியுடனே, நடைகொண்டுதுங்கமலைநின்றிழிந்து நலமார்புயங்கமிசைகண், படைகொண்டுகஞ்சமடமங்கைவிஞ்சு படிமங்கைபான்மருவவே, தொடைகொண்டமங்குலெனவேகிடந்த துளவோனைவந்துதொழுதான்.

(இ-ள்.) விடைபெற்றுக்கொண்டு, தமக்குத் தொண்டுபுரியும் அன்பர்கள் தம்மைச் சூழும்படி மிகுந்த சீலத்தையுடைய திருமலைநம்பியுடனே பிரயாணமாகி, உயர்ச்சியையுடைய திருமலையில் நின்றிழிந்து, எல்லா நலங்களையுமுடைய திருவநந்தாழ்வான்மீது அறிதுயில்கொண்டு, செந்தாமரைமலரிலிருக்கும் மடப்பத்தையுடைய பெரியபிராட்டியார் வளமிகுந்த பூமிதேவியார் ஆகிய இருவர் பக்கத்திலிருக்க, மாலையைப்பூண்ட மேகமென்று சொல்லும்படி, கிடந்த திருக்கோலமாயிருக்கும் திருத்துழாய்மாலையையணிந்த கோவிந்தராசப் பெருமானை வந்து தொழுதனர். (எ-று.) (௧௦௫)

௧௦௬. நாகங்கலந்தவிமையோர்வணங்கு நலனுகநம்பிநவில்வான், மீகம்பரித்துவினவாவவன்ற விருதாள்விரும்பிகுமா, யோகம்புரிந்தவுரவோர்கடேவர் தொழவேயுறங்குமழைமா, மேகம்புரைந்ததிருமானகர்க்கு ளுறைகின்றவேலையதனில்

(இ-ள்.) தேவலோகத்திலிருக்கும் தேவர்கள்வந்து வணங்கும் மேன்மையுண்டாவதாகத் திருமலைநம்பிகள் அருளிச்செய்யும் ஸ்ரீமத் வான்மீகிராமாயண காலக்ஷேபத்தை விரும்பிக் கேட்டு, அவரது இரண்டு திருவடிகளையும் விரும்பி, மிகுந்த பெருமையையுடைய யோகஞ்செய்த அறிவுடையோர்களும் தேவர்களும் தொழும்படி அறிதுயிலமரும் குளிர்ந்து கறுத்த மேகம்போன்ற பெருமானது நிறைந் திருப்பதியில் வாசஞ்செய்யுங் காலத்தில், (எ-று.) (௧௦௬)

வேறு.

௧௦௭. பொருவிலுயர்சதுமறையோர் புரவலரோனையர்வணங்கிப புகழுந்தொல்சீர்த், திருமலைநம்பிக்குமுதன் மாணுக்கன்யாவரினுஞ்சிறந்தமேலோன், பெருகுபுகழெம்பாரென் றுலகேத்துங்கோவிந்தப் பெருமானேர்நாள், அருமணிமஞ்சத்தனையை நம்பிதிருக்கண்வளர்தற் கழகுசெய்யா

(இ-ள்.) ஒப்பின்றி யுயர்ந்த நான்கு வேதங்களையுணர்ந்தோரும் அரசர்களும் மற்றவர்களும் வணங்கித் துதிக்கும் பழமையான சீரையுடைய திருமலைநம்பிகட்கு முதன் மாணுக்கரும் யாவரினுஞ் சிறந்த மேலோருமாய் விர்த்தியாகுங் கீர்த்தியையுடைய எம்பாரென்று உலகத்திலுள்ளோர் துதிக்கும் கோவிந்தப் பெருமானென்பவர், ஒருதினம் அரிய மணிகளிழைத்த கட்டிலின்மீதுள்ள படுக்கையைத் திருமலைநம்பிகள் திருக்கண் வளர்வதற்கு அலங்கரித்து, (எ-று.)

இங்கு எம்பாரென்பேர், இச்சருக்கம் அ-வது செய்யுளுக்கடியிற் குறிக்கப்பட்ட கோவிந்தபட்டராம். இவர் உள்ளங்கைகொணர்ந்த நயி ஞரெனப் பெயரேற்று காளத்தியிலிருக்கையில், திருமலைநம்பிகள் செ ன்று, அவர் கேட்டவைகட்குத் தக்க விடையளித்து அவரைத் தமக்கு மாணாக்கராக்கிக் கொண்டனர். (க0எ)

க0அ. உன்னரியபெருந்தகைமை நம்பிதிருமேனியினி லுறுத்தரீ தோர்வான், முன்னரதிற்றுன்படுப்ப வதனையிராமாநுசப்பேர் முனிவன்காணு, இன்னதொருமுறைமையிவன் வழங்குவதேயெ ன்னநம்பிக் கிசைத்தலோடும், அன்னவனுங்கோவிந்தப் பெருமா னைவருதியென வழைத்துநோக்கா

(இ-ள்.) நினைப்பதற்கரிய பெரிய பெருமையையுடைய நம்பிகளது திருமேனியில் உறுத்தாதபடியை அறியுமாறு முன்னர் அப்படுக்கையில் தாம் படுக்க, அதனைப் பெருமையையுடைய இராமாநுசமுனிவர் கண்டு, இப்படிப்பட்டதொரு வழக்கம் இவர் செய்வதேயென்று நம்பிக்கு விண் ணப்பித்தலும், நம்பிகளும், கோவிந்தப்பெருமானை வருவீராகவென்று அழைத்துக் கடாக்ஷித்து, (எ-று.) (க0அ)

க0௯. இன்றுநமதணைமிசைநீ துயின்றனையென்றனரிதுநீ யிழை த்ததீமைக், கொன்றுகதியாவதென நரகமெனவுணர்ந்திழைத்த தேதுவென்ன, நன்றுதருநீதனிம முறுத்தாது துயில்பெறவோர் நன்மைபெய்தில் சென்றுதீயெனரகத் தழுந்துகினுமதுவுமிகு சிறப்பாமென்றான்.

(இ-ள்.) இன்றையதினம் நமது படுக்கையின்மீது நீவிர் துயின்றீர் என்றனர்; நீவிர் செய்த இந்தத் தீமைக்காக அடையும் கதியாது என்று கே ட்க, அவரும் நரகமென்ன, நம்பிகள் அதனையுணர்ந்துவைத்தும் அப்படி செய்தகாரணம் சொல்வீராகவென்ன, நன்மையைத்தரும் தேவரீர் படுக் கையுறுத்தாமல் திருக்கண்வளர ஒப்பற்ற நன்மையயடையின், அடியேன் போய் நரகத்தில் அழுந்தினும், அதுவும் மிகவும் சிறந்ததேயென்றனர். (எ-று.)

கக0. எனவுரைத்தகோவிந்தப் பெருமானையிலக்குவப்பே ரெதிர் புஞ்சால, மனமகிழ்ச்சியொடுநோக்கி யிவனிகர்தகைமையினே ர மற்றின்றென்றுந், தனதகத்துட்கொண்டொருநா ணம்பிபதம் பணிந்துவிடை தருதிமாயோன், பன்கமிசைத்துயிலரங்கப் பதிக் கேகவெனவுநம்பி பரிந்துநோக்கா

(இ-ள்.) என்று உரைத்த கோவிந்தப்பெருமானை இராமாநுசரென்னுந் திருநாமமுடைய யதியும் மிகுந்த மனமகிழ்ச்சியோடு கடாக்ஷித்து, இவரை யொத்த பெருமையையுடையோர் வேறில்லையென்று தமது திருவுள்ளத் திற்கொண்டு, ஒருதினம் திருமலைநம்பிகளது திருவடிகளைவணங்கி, பெரு மான் திருவநந்தாழ்வான்மீது அறிதுயிலமரும் திருவரங்கத் திருப்பதிக் குப் போக விடைதருவீராக வென்னலும், நம்பிகள் பிரீதியோடு கடா க்ஷித்து, (எ-று.) (கக0)

கக௧. உனக்கரியபொருளுளதென் றுதவவியான்கண்டிலனீண் டொன்றுமென்று, மனக்கருணையொடுமுகமன் புகலவிராமாநுசப்

பேர் வள்ளறுனும், எனக்குதவவருளுண்டே லெம்பாரைத்தரு குதியென விறைஞ்சியேத்தத், தனக்குநிகர்கோவிந்தப் பெருமானை யுளத்துவகை ததும்பவிந்தான்.

(இ-ள்.) உமக்கு அருமையான பொருள் என்னிடமுள்ள தென்று கொ டுப்பதற்கு யான் இங்கு ஒன்றுங் கண்டிலேனே யென்று திருவுள்ளத்திற் கருணையோடு உபசாரஞ் சொல்லவே, இராமாநுசரென்னுந் திருநாமமுடைய உதாரரும், அடியேனுக்கு ஒன்று கொடுப்பதற்குத் திருவருளுண்டாயின், எம் பாரை யளிப்பீராகவென்று வணங்கித்துதிக்க, நம்பிகள் தமக்கு நிகர்த்த கோவிந்தப்பெருமானைத் திருவுள்ளத்தில் சந்தோஷ மதிரிக்கக் கொடுத் தருளினர். (எ-று.) (கக௧)

கக௨. கோதிலிராமாநுசனு நம்பிபதம்பணிந்துவிடை கொண்டு சாலபு, நீதியாயில்கோவிந்தப் பெருமானோடணிநகர்நீங்கிப்பைம் பொற், சோதிமதிற்கச்சிபுகுந் தருளாளன்பதம்பணியாத் துதித் துக்கோதில், ஆதிமுனிவராங்கிறைதாள் பணிந்துதிருக்காவேரி யரங்கஞ்சார்ந்தான்.

(இ-ள்.) குற்றமற்ற இராமாநுசரும், நம்பிகளது திருவடிகளை வண ங்கி விடைகொண்டு, மேன்மையும் மெய்ம்மையுமுடைய கோவிந்தப்பெரு மானுடன் அழகிய நகரத்தை நீங்கிப், பசிய பொன்மயமாய்ப் பிரகாசமுடைய திருமதில்கள் சூழ்ந்த திருக்கச்சியிற் பிரவேசித்து, பேரருளாளப் பெருமா னது திருவடிகளைத் துதித்து, குற்றமற்ற ஆதியோகியரில் முதல்வரான பொய்கையாழ்வாரைப் பணிந்து, திருக்காவேரி சூழ்ந்த திருவரங்கத்தைச் சார்ந்தனர். (எ-று.) (கக௨)

கக௩. ஆதவளான்மணிக்கோயி லரங்கேசன்றிருமலர்த்தா ளன் பிற்போற்றி, வரமுனிவனுறைந்தருள்வோன் புன்சமயங்களைநீக்க மனனுட்கொள்ளாச், சரதகவில்வேதாந்த சாரதீபஞ்சருக்கஞ் சகமுண்டோங்கும், பரமனருட்சனைமுறைமை பகர்கீதாவிவரண மாம் பனுவல்செய்தான்.

(இ-ள்.) இரத்தினமயமாய் உயர்ந்த அழகிய திருக்கோயிலையுடைய திரு வரங்கப்பெருமானது திருவடித்தாமரைகளை அன்போடுபோற்றி எழுந் தருளியிருக்கும் சிரேஷ்டரான இராமாநுசமுனிவர், இதரமான புல்லிய சமயங்களை நிரசிக்கத் திருவுள்ளத்திற்கொண்டு, உண்மையைச் சொல்லும் வேதாந்தசாரம் வேதாந்ததீபம் வேதார்த்தசங்கிரகம் உலகங்களையுண்டு யர்ந்த பெருமானது திருவாராதநக்கிரமம் பெரியோர்கள் சொல்லும் கீதா பாஷ்யம் ஆகிய கிரந்தங்களை யருளிச்செய்து, (எ-று.) (கக௩)

கக௪. புல்லருள்சிரங்கதந் தியமுதலமூவகையாப் புகன்றுதொ ன்னூல், நலவனிமிசைவிளங்க விருத்திமவின்றவையனைத்து நவிமாறுக்கர், குலைமுகுபெறப்போதித் துறைநாளிற்புன்சமயக் கூட்டஞ்சால, விலைநிசமுறக்காறுக் திக்குவிசயம்புரிவானினைந் தானன்றே.

(இ-ள்.) ஞானந்தரும் ஸ்ரீரங்ககத்தியம் முதலானவற்றை மூன்றுவிதமாக அருளிச்செய்து, பழமையுடைய வேதாந்த சூத்திரத்தின் நன்மை பூமியின்மீது விளங்கும்படி ஸ்ரீபாஷ்யத்தை யருளிச்செய்து, அவைகளையெல்லாம் மாணாக்கர்களின் சமூகங்கள் மிகவும் அழகுபெறும்படி போதித்து எழுந்தருளியிருக்கும்போது, புல்லிய சமயக்கூட்டங்கள் மிகவும் பூமியின்மீது அதகப்படக்கண்டு திக்குவிஜயம் செய்யும்படி திருவுள்ளத்திற் கொண்டனர். (எ-று.)

கத்தியங்கள் மூன்றுவன: ஸ்ரீரங்ககத்தியம், சரணாகதிகத்தியம், ஸ்ரீவைகுண்டகத்தியம். இவை கத்தியத்திரயமெனப்படும்.

௧௧௫. தாசரதிகூரத்தான் முதலாயமுதலிகளுந் தானுங்கோயில் ஈசனடிவணங்கிவிடை கொண்டுதிருவனந்தபுரத் தெய்திச்சின்னாள், வாசமவட்புரிந்துமடந் தன்பெயராலமைத்திகலுமதத்தோர்மாட்சி, நாசமுறமுடித்தவனி வலம்வரவுத்தரதிசையே நடப்பதானான்.

(இ-ள்.) முதலியாண்டான் கூரத்தாழ்வான் முதலான முதலிகளும் தாமுமாகத் திருவரங்கத்திலெழுந்தருளிய பெருமானது திருவடிகளை வணங்கி விடைபெற்றுக்கொண்டு, திருவநந்தபுரத்தையடைந்து சிலநாள் அவ்விடத்தில் வாசஞ்செய்து, அங்கு தமது திருநாமத்தாலே மடமொன்றமைத்து, தம்மோடு மாறுபட்ட மதஸ்தர்களது பெருமை நாசமடையும்படி வென்று பூப்பிரதக்ஷணம் வரும்படியாக உத்தரதிசையே பிரயாணமாயினர். (எ-று.) (௧௧௫)

௧௧௬. கண்ணனுறைமதுரைதுவாரகைபடர்ந்துபிரயாகைக் கருணைநீல, வண்ணனுயர்மாதவனைக் காசிவிந்துமாதவனை வணங்கிப் போற்றி, வெண்ணகைச்சேயிதழ்வாணி விளங்குபட்டிமண்டபத்தை மேவலோடும், எண்ணருஞ்சீர்நாமகளு மெதிர்ந்துதழீஇக் கொண்டுதன திருக்கைபுக்காள்.

(இ-ள்.) கண்ணனெம்பெருமான் நித்தியவாசஞ்செய்யும் திருமதுரை திருத்துவாரகைகளையடைந்து, பிறகு பிரயாகையிலெழுந்தருளிய கருணையையுடைய நீலவண்ணனான உயர்ந்த மாதவனையும் காசியிலிருக்கும் பிந்துமாதவப்பெருமானையும் வணங்கித்துதித்து, வெண்மையான பற்களையும் சிவந்த இதழையுமுடைய சரசுவதிதேவியார் வீற்றிருக்கும் பட்டிமண்டபத்தை யடைதலும், எண்ணுவதற்கரிய வைபவத்தையுடைய நாமகளான சரசுவதிதேவியும் எதிர்வந்து தழுவிக்கொண்டு தமதிருப்பிடத்திற் பிரவேசித்தனள். (எ-று.) பட்டிமண்டபம்-வித்தியாமண்டபம். (௧௧௬)

௧௧௭. பழுதின்மணித்தவிசிருத்தி யருச்சனைசெய்தயலிருந்து பனுவலாட்டி, எழுதரியசதுமறையே முதலியனபனுவலின்று லிலைன்சீர்தேர, முழுதுமுணர்முனிவரனு மவற்றினுயர்திடப்பொருளை மொழியக்கேளாத், தொழுது துதித்தனளெதிரா சனுமவளை மகிழ்வினெதிர் துதித்துநோக்க.

(இ-ள்.) பனுவலாட்டியான சரசுவதிதேவியும், இராமாநுசரைக் குற்றமற்ற மணிகளிழைத்த ஆசனத்தின் மீதிருத்தி அர்ச்சனைசெய்து பக்கத்திலிருந்து, எழுதுவதற்கரிய நான்கு வேதங்கள் முதலிய நூல்களினுடைய இவரது வைபவத்தை யாராயவே, முழுதுமுணர்ந்த மகாநீரரான

இராமாநுசரும் அவற்றின் உயர்ந்த திடமான பொருள்களை யருளிச்செய்யக்கேட்டு, வணங்கித்துதித்தனள். யதிராசரும் அந்நாமகளை மகிழ்ச்சியோடு எதிராகத் துதித்துச் சேவித்து, (எ-று.) (௧௧௭)

௧௧௮. அன்னையுலகனைத்தினுக்கு நீயெனையின்றகமகிழ்வுற் றூர்வங்கூர்தற், கென்னைதவமுயன்றனனென் றலுமவளுஞ்சங்கரப்பேரதியான்கேட்ட, முன்னைமறைவாக்கியத்தின் பொருளுணரான் றிகைத்தனனீ மொழிதலாலே, உன்னையுவந்தனன்போதாயனவிருத்திகொள்கவென வுவப்பினீந்தாள்.

(இ-ள்.) உலகங்களெல்லாவற்றுக்கும் தாயாகிய நீவிர் இன்று என்னை மகிழ்வடைந்து பிரீதிசெய்வதற்கு நான் முன்பு என்ன தவஞ்செய்தேன் என்று சொல்லுதலும், சரசுவதிதேவியாரும், சங்கராசாரியர் என்னும் பெயரையுடைய சந்நியாசியானவர் நான் கேட்ட முதன்மையான வேதவாக்கியத்தின் பொருளையுணராதவராகித் திகைத்தனர்; நீவிர் திகைக்காமற் சொன்னதினாலே உம்மை யுவந்தேன்; வேதாந்த சூத்திரத்துக்குப் போதாயனமுனிவ ரருளிச்செய்த போதாயனவிருத்தி கிரந்தத்தைக் கொள்வீராகவென்று சந்தோஷத்தோடு கொடுத்தருளினள். (எ-று.) (௧௧௮)

௧௧௯. கவர்ந்ததனைத்தானவின்ற வேதாந்ததீபமவள் கரத்திலீய்ந்தான், உவந்தவள்கைக்கொண்டதனின் பொருடேர்ந்துசிரத்திலணிந்துந்திப்போதின், பவந்தனதாமுனிவரனுந் தெரிவரியபொருண்மையதிப் பனுவலென்றுச், சிவந்ததுகிர்நிகர்திருவாய் மலர்ந்துவகைபொடுமலகில் சிறப்புச்செய்தாள்.

(இ-ள்.) இராமாநுசர் அதனைப்பெற்றுத் தாமருளிச்செய்த வேதாந்ததீபத்தை யவளது திருக்கரத்திற் கொடுத்தனர். அப்பெருமாட்டி உவந்து திருக்கையிற்கொண்டு அதன் பொருளையுணர்ந்து சிரத்தின்மீதணிந்து, பெருமானது திருவுந்தியிற்பூத்த தாமரைப்பூவில் உண்டான பிறப்புதன்னுடையதாயிருக்கும் மகாசீலனான பிரமதேவனும் தெரிவதற்கரிய பொருளையுடையது இந்தக் கிரந்தமாகுமென்று சிவந்த பவளத்தையொத்த திருவாய்மலர்ந்துரைத்து, சந்தோஷத்தோடு கணக்கற்ற சிறப்புக்கள் செய்தனள். (எ-று.) (௧௧௯)

௧௨0. கலைமகளைவிடைகொடெதிர் கவிஞர்களைவென்றுதிறை கவர்ந்துசொல்லும், தொலைவில்புகழிலக்குவப்பெ ரெதிராதன் பெருந்தகைமைத் தோற்றமெல்லாங், கொலையயில்வேனிருபசிங்க மென்னும்பேர்ப்புவிபுரக்குங் கோமான்கேளா, அலைகடலிற் றுயில்புரிமா லிவனேயென்றவனையடைந் தடிமையானான்.

(இ-ள்.) இப்படி கலைமகளான சரசுவதிதேவியாரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, எதிர்த்த கவிஞர்களை வென்று அவர்களிடம் திறைபெற்று, யாவரும் சொல்லும் ஒழியாத புகழையுடைய இளையபெருமாளென்னுந் திருநாமமுடைய யதிராசரது பெருந்தகைமையின் தோற்றத்தையெல்லாம், கொலைசெய்யும் கூர்மையான வேலைத்தரித்த நிருபசிங்கமென்னும் பேரையுடையவனாய்ப் பூமியைரக்ஷிக்கும் அரசன் கேட்டு, அலைகளையுடைய திருப்பாற்கடலில் அறிதுயிலமரும் பெருமான் இவரேயென்று இராமாநுசரையடைந்து அடிமையாயினன். (எ-று.) (௧௨0)

கஉக. தரையிலெல்லாமதமுமுயர் தன்மதத்தாற்றொலைத்தவர் புன் சமயநீக்கித், திரையிலரவணைத்துயின்மால் சமயநிலைநிறுத்துமிவ ன்றிறனேறுது, புரையிலவர்சிலரிவனை வதைத்திடவொன்கருதிம சம்புரிதலோடும், வரையினுயர்பெரும்பூத மடக்கலாயுதித்தனவம் மக்குணமாதோ.

(இ-ள்.) பூமியிலுள்ள எவர்களுடைய மதத்தையும் உயர்ந்த தமது மதத்தினாலே நிவர்த்தித்து அவர்களது புல்லியமதத்தை நிராகரித்து, திருப்பாற்கடலில் ஆதிசேஷசயநத்தில் அறிதுயிலமரும் பெருமானது சமயத்தை நிலைநிறுத்திய இராமாநுசரது திறலைப் பொறுக்காமல், குற்றமுடையவர்களான சிலர் இவரை வதைக்கும்படி யெண்ணி (சேனவித்) யாகஞ் செய்ததும், மலையைப்போல உயர்ச்சியையுடைய பெரும்பூதங்களுதித்திடுமென்னும்படி அவ் யாகத்திலுண்டாயின. (எ-று.) (கஉக)

கஉஉ. உய்த்தனர்ஈங்கவற்றையிரா மாநுசன்மீதவனுமிக வுருத்து மாயோன், கைத்தலநேமியைக்கருதத் திகிரிபெனுக்கடவுளுமக் கணத்திற்றோன்றிப், பைத்தடுதல்கண்டவன்றுள் பணிந்தடியாரினரப் பூரான்வேந்தும், மெய்த்தவனைமணிமதிலது மயோத்தி பெனுநகர்காறும் விடுத்துமீண்டான்.

(இ-ள்.) (அவர்கள்) அவற்றை இராமாநுசர்மீது விட்டனர். அவரும் மிகக்கோபித்து ஆச்சரியகுண சேஷ்டிதனை பெருமானது திருக்கைத்தலத்திலுள்ள திருவாழியாழ்வானைச் சிந்திக்க, அச்சக்கரத்தாழ்வாணும் அந்தக்ஷணமே அங்குத் தோன்றி (அப்பூதங்களையும் அவர்களையும்) கோபித்து வருத்துவதைக்கண்டு, அவர்கள் (வேறுகதியின்றி) இராமாநுசரது திருவடிகளை யாசிரயித்து அடிமையாயினார்கள். அப்பூமியையாளும் அரசனும் உண்மையான தவத்தையுடைய இராமாநுசரை அழகிய மதில் சூழ்ந்த அயோத்தியென்னும் நகரம்வரையில் (திருமேனிக்குக் காவலாகப்போய்) வழிவிடுத்து மீண்டனன். (எ-று.) (கஉஉ)

கஉங. அங்கணிராமனைப்பரவ வக்கடவுளிமக்கோ ரனுசன்றூலம், எங்கணுநீவெல்கவென வரமுதவவாய்த்தவன்று விறைஞ்சி யேத்தித், துங்கமுடிபயில்சாளக் கிராமவரைபதரிகையைத் தொழுதுபோற்றிச், சங்கரன்மாதுலனுகு மிமயவரையடைந்துசெயத் தம்பநட்டான்.

(இ-ள்.) இராமாநுசர் அங்கு எழுந்தருளியிருக்கும் சக்ரவர்த்தித் திருமகனைத் துதிக்க, அப்பெருமான் நீவிர் நமக்கு ஒப்பற்ற திருத்தம்பியாராயிருப்பவராதலால் பூமியெவ்விடத்தும் நீவிர் ஜயிக்கக்கடவீராக வென்று வரங்கொடுக்கப் பெற்றுக்கொண்டு, அப்பெருமானது திருவடிகளை வணங்கித்துதித்து, உயர்ந்த சிகரத்தையுடைய சாளக்கிராமபர்வதம் பதரியாசிரமம் இவைகளைத் தொழுதுபோற்றி, சிவபெருமானுக்கு மாமனை இமயகிரியையடைந்து அங்கு ஜயஸ்தம்பத்தை நாட்டினர். (எ-று.) (கஉங)

கஉச. தோதரிகைநைமிசா ரணியமுதற்பதியெவையுந் தொழுதுபோற்றிச், சீதநதிசிந்துமுதற் படிந்தயனேமுதலாய தேவர்க

கெல்லாம், நாதனெடுமால்புவியோர் நாதனியானெனவிருது நவின்றுநான்கு, வேதமுனிவரையுபய வேதாந்த மூனிக்குரவன் வென்றுமீண்டான்.

(இ-ள்.) தோதரிகை, நைமிசாரணியம் முதலிய பதிகளெவற்றையும் தொழுதுபோற்றி, குளிர்ந்த நதியாகிய சிந்து முதலியவைகளில் நீராடி, பிரமதேவன் முதலான தேவர்களுக்கெல்லாம் நாதன் நெடுமாலேயாவன்; பூமியிலுள்ளவர்களுக்கு நாதன் நானே யாவனென்று விருது கூறி, அவ்விடத்திலுள்ளவர்களான நான்கு வேதங்களையுணர்ந்த முனிவர்களை உபய வேதாந்தங்களை யுணர்ந்த மகாசிலரும் ஜகதாசாரியருமான இராமாநுசர் வென்று மீண்டனர். (எ-று.) (கஉச)

கஉ௫. சிறந்தபுருடோத்தமநீ லக்கிரியொண்கூர்மாத்ரி சிங்கவெற்பு, பிறந்தையகற்றிடுந்தகைமைப் புட்கரங்கோகுலமுதலாம் பிறங்கலெண்ணுன், கறந்தழைத்தகச்சிதிருக் கோவன்முட்டஞ்சித்திரகூ டம்பார்யாவுந், துறந்தவர்வாழ்சீராம விண்ணகரந்திருநகரிதுலங்குநாங்கை.

(இ-ள்.) சிறப்பையுடைய புருஷோத்தமம், நீலகிரி, ஒள்ளிய கூர்மாத்திரி, சிங்கவேள்குன்றம், பிறவியை யகற்றும் பெருமையையுடைய புஷ்கரம், கோகுலம் முதலாகிய பர்வத திவ்யதேசங்கள், முப்பத்திரண்டு தருமங்கள் தழைத்த திருக்கச்சி, திருக்கோவலூர், ஸ்ரீமுஷ்ணம், திருச்சித்திரகூடம், உலக இன்பம் யாவுந் துறந்தவர்கள் வாழும் சீராமவிண்ணகரம், ஆழ்வார் திருநகரி, விளங்கும் திருநாங்கூர், (எ-று.) (கஉ௫)

கஉசா. கண்ணபுரந்திருக்குடந்தை காவேரிநனந்தலைவாழ் கரியமேக, வண்ணனரவணைத்துயிலுங் கோழியிலொண்மதிலரங்கமணிப்பொற்கோயில், அண்ணலிராகவன்றிருப்புல் லணைசேது திருமோகூ ரண்டராலும், எண்ணருஞ்சீர்த்திருக்குருகூர் குறுங்குடிமாலிருஞ்சோலை யெனும்பேர்வாய்த்த

(இ-ள்.) திருக்கண்ணபுரம், திருக்குடந்தை, திருக்காவேரியின் மத்தியிலே நித்தியவாசஞ்செய்யும் கரிய மேக நிறத்தையுடைய மேகவண்ணன் திருவநந்தாழ்வான்மீது அறிதுயிலமரும் கோழியூரிலுள்ள ஒள்ளிய மதிலையுடைய திருவரங்கமாகிற மணியாலும் பொன்னாலுமான திருக்கோயில், பெருமையிற் சிறந்த இராகவபிரா னெழுந்தருளிய தர்ப்பசயநம், சேது, திருமோகூர், தேவர்களாலும் நினைப்பதற்கரிய சீரையுடைய திருக்குருகூர், திருக்குறுங்குடி, திருமாலிருஞ்சோலைமலை யென்னும் பெயரையுடைய (எ-று.) (கஉசா)

கோழியூரிலுள்ள திருப்பதி கோழியரங்கமென்னப்படும்.

கஉஎ. பதிகளெனுமியாநெடுமா லருச்சனையின்படிமைகளைப் பணிந்துபோற்றி, எதிகளிறைதன்பெயரான் மடமமைத்துமதிலரங்கத் தெய்வநாதன், கதிதருநாதனைவணங்கிக் கொணர்போதாயனவிருத்தி கவினப்பார்மேன், மதியினுயர்மாணுக்கர்க் கிசைத்தொருவரினையிலனாய் வைகினனால்.

(இ-ள்.) திருப்பதிகள் வழியாகப் பெருமானது அர்ச்சாவிக்கிரகங்களைப் பணிந்து போற்றி, இராமாநுசர் தமது திருநாமத்தாலே மடங்களை யமைத்து, மதில்சூழ்ந்த திருவரங்கத்தையடைந்து, கெடாத மோக்ஷத்தை யளிக்கும் திருவரங்கநாதனை வணங்கி, தாம் கொண்டுவந்த போதாயந விருத்தி கிரந்தம் அழகு பெறும்படி பூமியின்மீது ஞானத்தாலுயர்ந்த மாணாக்கர்களுக்கு அருளிச்செய்து, தமக்கு ஒருவரு மொப்பில்லாதவரா யெழுந்தருளியிருந்தனர். (எ-று.) (௧௨௭)

வேறு.

௧௨௮. இவனிருக்குமிப்பரிசெலாஞ்சிவத்தின்மேலிலையென்
றவனியிற்பலசமயமுமொருமதத்தடக்குங்
கவனமுற்றிடுசிறுதொழிற்கண்டனுங்கோரத்
தவனனிற்கனன்றவனேயிக்கணந்தருகெனலும்

(இ-ள்.) இராமாநுசர் இருக்கும் இவ்விதத்தையெல்லாம், சிவத்தின் மீது வேறொருபொருளில்லையென்று பூமியிலுள்ள பலசமயங்களையும் ஒரு மதத்திலடக்கும் கலக்கங்கொண்ட சிறு தொழிலையுடைய கண்டனென்னு மொரு சோழன் கேள்விப்பட்டு அக்கினியைப்போலக் கோபித்து (தன் ஏவலாளர்களை நோக்கி), இராமாநுசரை இந்த க்ஷணமே கொண்டு வருவீர்களாக வென்று சொல்லுதலும் (எ-று.) (௧௨௮)

௧௨௯. எண்ணிறாதுவரோடினரெம்பிரானரங்கம்
நண்ணிவாழிராமாநுசன்றனக்கிதுநவின்றார்
புண்ணில்வேலெனச்செவியுளம்மொழிபுகப்பொருஉய்
விண்ணில்வாசவனெனினும்வெல்குவனெனவெகுண்டான்.

(இ-ள்.) கணக்கற்ற தூதுவர்கள் ஓடிச்சென்று, எம்பெருமானது திருவரங்கத்தை யடைந்து வாழும் இராமாநுசரது மடத்தில் இதைச் சொல்லினர். புண்ணிலிட்ட வேலைப்போலச் செவியில் அம்மொழி புகப்பொருந்தவராகி, தேவலோகத்திலுள்ள தேவேந்திரனேயாயினும் வெல்லக்கடவோமென்று கோபித்து (எ-று.) (௧௨௯)

௧௩௦. பையராவணைமேவியபரமனைப்பணியா
ஐயயான்செயவடுப்பதேதறைகுதியெனலும்
வையமுண்டவன்மாதவநிற்கொடுமகியிற்
செய்யயாகினைந்துள்ளனபலவெனத்தெரிவாய்.

(இ-ள்.) படத்தையுடைய ஆதிசேஷசயநத்திலமர்ந்த எம்பெருமானைப் பணிந்து, ஸ்வாமீ! இப்போது அடியேன் செய்யத்தகுவது யாது சொல்லியருளவேண்டுமென்ன, உலகமுண்டபெருமான், பெருந்தவமுடையீர்! உம்மைக்கொண்டு உலகத்தில் நாம் செய்ய நினைந்துள்ள காரியங்கள் பலவாகுமென்று தெரிவீராக; (எ-று.) (௧௩௦)

௧௩௧. நாளைநீநெறிக்கொண்டுமேனாட்டிடைநண்ணா
வேளையோர்ந்திராக்கதர்செயல்விட்டியவிதமே
காளையாத்திரிகாவலன்செருக்கினைக்காற்றிற்
பூளைவீயெனப்புரிகுவம்யாமெனப்புகன்றான்.

(இ-ள்.) ஆகவே, நாளை நீவிர் வழிகொண்டு மேனாட்டுக்குச் செல்லுவீராக; காலமறிந்து இராக்கதரது அக்கிரமச் செயல்களைக் கெடுத்தபடியே, காளையாகத்திரியும் சோழனது அகங்காரத்தைக் காற்றிலகப்பட்ட பூளைப்பூவைப்போலாகும்படி விரைவிலேயே நாம் செய்வோமென்றுரைத்தருளினன். (எ-று.) (௧௩௧)

௧௩௨. கூரனுங்கதுகாண்டலுங்கொடியவன்றன்பால்
சேரனீயென்றடிகளின்றிருவருளுண்டேல்
ஆரணிந்தநோனறிவிலானவையகமனுகிப்
பாரகம்புகழ்விடைகொடுக்குவனெனப்பகர்ந்தான்.

(இ-ள்.) கூரத்தாழ்வானென்பவர் அங்கே அதைக் கண்டதும் கொடியவனை சோழனிடத்துக்குத் தேவரீர் செல்லுதல் நீதியன்று; ஸ்வாமிகளது திருவருளுண்டாயின் ஆத்தியையணிந்த தோளையுடைய தத்துவஞானமில்லாத சோழனது சபையினிடத்தடைந்து பூமியிலுள்ளோர் புகழ்தலான மறுமொழிசொல்லக் கடவேனென்றுரைத்தனர். (எ-று.) (௧௩௨)

௧௩௩. அருள்விரித்தமுக்கோலுடன்றனதுருவளித்துப்
பொருள்விரித்துமாணாக்கரோடேகெனப்புகலும்
உருள்பரித்தேரிரவிபோலவரொடுமொருவா
இருள்விரித்தபுன்மதத்திறனவைபுகுந்திருந்தான்.

(இ-ள்.) இராமாநுசர், அருள் விரித்த முக்கோலுடன் தமது உருவத்தை யவர்க்களித்து, சாஸ்திரார்த்தங்களை விரித்துச் சொல்லி, தமது மாணாக்கர்களோடு செல்லுவீராக வென்றுகூற, கூரத்தாழ்வான் யாவரும் சொல்லும் சக்கரங்களைப்பூண்ட தேரையுடைய சூரியனைப் போல் அம்மாணாக்கர்களுடன் சென்று, இருளைவிரித்த புல்லிய மதத்தனான சோழனது சபையை யடைந்திருந்தனர். (எ-று.) (௧௩௩)

௧௩௪. தந்திபூதத்துளரியெனத்தாவியவுழையின்
பந்திபுக்கதோர்புலியெனப்பயின்றபாதகத்தின்
முந்தியுற்றதோர்தருமத்தின்வடிவெனமுனிவன்
வந்திருத்தலுமதியிலாவளவனுநோக்கா

(இ-ள்.) யானைக்கூட்டத்தில் சிங்கம் போலவும், தாவும் சுபாவமுடைய மான்களின் வரிசையிற் பிரவேசித்த ஒரு புலியைப்போலவும், பொருந்திய பாதகத்தின் முன்பு வந்ததான ஒப்பற்ற தருமத்தின் வடிவமெனவும், மகாசீலரான கூரத்தாழ்வான் வந்து இருத்தலும், தத்துவஞானமில்லாத சோழனும் பார்த்து (எ-று.) (௧௩௪)

௧௩௫. அழுத்துசீற்றத்திற்சிவத்தின்மேற்பொருளிலென்றமைய
எழுத்திடென்றலுஞ்சிவமதாங்குருணிமேலெவனும்
பழுத்திடுந்துரோணப்பெயர்ப்பதக்குமுண்டென்று
வழுத்தரும்பெருந்தகைத்திருவற்சனும்வரைந்தான்.

(இ-ள்.) மிகுதியான கோபத்தோடு சிவத்தின்மீது வேறொருபொருளில்லை யென்று அமையும்படி கையெழுத்திடுவாயாக வென்னுதலும், மெலினும் குருணியின்மீது எவ்விடத்திலும் வழங்குவதான துரோண

மென்னும் பெயருடைய பதக்கும் உண்டென்று, சொல்லுவதற்கரிய பெரிய பெருமையையுடைய கூரத்தாழ்வாரும் கையெழுத்திட்டனர். (எ-று.) (கநுரு)

சோழராசன், "சிவாத்பரதரம்நாஸ்தி" (சிவாத்-சிவத்தைக்காட்டிலும், பாதரம்-மேலானது, நாஸ்தி-இல்லை) என்றெழுதி அதன் கீழே கூரத்தாழ்வானைக் கைபெழுத்திடக் கேட்டனன். சிவம் என்பது சிவபிரானுக்கும் குருணி என்னும் நாழிபடிகொண்ட முகத்தலளவைக்கும் பெயராதலால், கூரத்தாழ்வான், சோழன் கருத்தை யுணர்ந்திருந்தும் அது தவறெனத்துணிந்து, தாம் சிவம் என்பதற்குக் குருணியெனப் பொருள் கொண்டு, "த்ரோணமஸ்திததபரம்" (ததா-அச்சிவத்தைக் காட்டிலும், பரம்-மேலானதாக, த்ரோணம்-எட்டுப்படிகொண்ட பதக்கு என்னும் முகத்தலளவை, அஸ்தி-உண்டு) எனக்கையெழுத்திட்டனர். எனவே சிவபிரானுக்கு மேற்பட்டவர் உண்டெனக் குறிப்பித்தபடியாம்.

கநுசு. கண்டகண்டனுங்கட்கனல்பிறழ்தரக்கதமுட்
கொண்டகாலையிற்றூதர்வந்தவனடிகுறுகி
எண்டவத்திராமாநுசனிவனலனெனவாய்
விண்டரங்கத்துளானெனவிரித்தார்.

(இ-ள்.) அதைப் பார்த்த கண்டனும் கண்களில் அக்கினியுண்டாவதாக உள்ளத்தில் கோபங்கொண்ட காலையில், தூதர்கள் வந்து அவனது பாதங்களை யணுகி, எண்ணும் தவத்தையுடைய இராமாநுசர் இவரன்று என்று வாய்திறந்து சொல்லி, அவர் திருவரங்கத்திலுள்ளாரென்று தெரிவித்தார்கள். (எ-று.) (கநுசு)

கநுஎ. சுற்றியங்கவன்றன்னைநந்நானைபோய்த்துனைவில்
பற்றிவீக்கிடுக்கணந்தருநெறிபெனப்பகர்ந்தான்
வெற்றிவீரருஞ்சேனையும்படர்வதுவினவா
மற்றிவன்றனாட்டுறைதரீதெனமுனிமதித்தே.

(இ-ள்.) நமது சேனையுடன் விரைவாகப்போய் அங்குள்ள அவ்விராமாநுசனைச் சூழ்ந்து பற்றிக் கட்டிக்கொண்டு இந்த க்ஷணமே கொண்டுவந்து கொடுப்பீர்களாகவென்று சொல்லினன். வெற்றியையுடைய வீரரும் சேனையும் வருவதைக்கேட்டு இவனது நாட்டில் இனி யிருப்பது தீங்குண்டாக்குமென்று சிலர் சொல்ல, அதனை இராமாநுசமுனிவர் மதித்து (எ-று.) ()

கநுஅ. கடந்துபொன்னியாகதியினைக்குடதிசைகடிதிற்
படர்ந்தபான்மைகேட்டறிவிலாவிறையவன்பதாதி
தொடர்ந்துபின்செலப்பட்டர்கோன்கவியொன்றுசொல்லிக்
கிடந்ததோர்பரலெறிந்தனனெழுந்ததோர்கிரியே.

(இ-ள்.) பெருமைபொருந்திய திருக்காவேரியாற்றைக் கடந்து மேற்றிசையே விரைவாகச்சென்ற விதத்தைக்கேட்டுத் தத்துவஞானமில்லாத சோழனது சேனை தொடர்ந்து பின்னே செல்ல, இராமாநுசர் "கொடுமை செய்யுங் கூற்றமுமென் கோலாடி குறுகப்பெறா, தடவரைத்தோள் சக்ரபாணி சார்ங்கவிற்சேவகனே" யென்னும், பெரியாழ்வாருரைச்செய்யலான கவியொன்றை யநுஸந்தித்து அங்குக்கிடந்ததான ஒரு பருக்காங்கல்லை யெறிந்தனர்; அங்கு ஒரு மலை தோன்றியது. (எ-று.) (கநுஅ)

கநுகூ. அங்ஙனம்ப்ரமுனிவரன்றனைத்தொடர்ந்துபின்னணுகும்
என்னரும்படைகிரியிடைபெழுதலானினியாம்
தன்னலர்க்கவன்றனையரிதாமெனகவிலாப்
பண்ணமைக்கதேராசனுக்கிமமுறைபகர்ந்தார்.

(இ-ள்.) பெருமையிற் சிறந்தவராய்ப் பெரியபிராட்டியாரது திருவருளுக்கிலக்கான இராமாநுசமுனிவரைத் தொடர்ந்து பின்செல்லும் எண்ணுதற்கரிய சேனையானது இடையில் மலை தோன்றியதனாலே இனி நாம் அவரை யடைதல் அரிதாகுமென்று சொல்லி, செய்கையமைந்த தேவாயுடைய சோழனுக்கு இவ்விதத்தைச் சொல்லினார்கள். (எ-று.) (கநுகூ)

கசுo. ஆசனம்முனிவரன்றனையழல்விழிநோக்கிக்
குருணிமேற்பதக்குண்டெனமுனிவரனும்
பாவுகன்மறைபுகன்றிபராபரனென்றே
இருபதைந்தெனுங்கட்டியாற்சிவமதரிறுத்தான்.

(இ-ள்.) சோழன் அம்முனிவரான கூரத்தாழ்வானை அழலுமிழும் கண்களாலே பார்த்து, குருணிக்கு மேலே பதக்குண்டோ வென்று கேட்கக் கூரத்தாழ்வாரும், யாவரும் அறிக்கும் தன்மையையுடைய வேதவசனங்களை யநுசரித்து, ஸ்ரீமந்நாராயணனுடைய பெருமானே பராபரனென்று இருபத்தைந்தென்று சொல்லும் சுருதிகளாலே சைவமதத்தைக் கண்டித்தனர், (எ-று.) (கசுo)

கசுக. விரோவதோரிருட்பொருண்டுகட்டனையினைவிழியைக்
களைதிரென்றனுமவனுரிந்கண்டகன்கலிறுல்
அனைநுகர்ந்தமாலடியாரைக்காண்டீதாமென்
றினையவன்பதவினைந்துதன்விழிகளைத்தொழுந்தான்.

(இ-ள்.) பின் விளையப்போவதை யறியாதவனான சோழன் கோபித்து, கூரத்தாழ்வானது இரண்டு கண்களையும் பிடுங்கி விடுங்களென்று சொல்லுதலும், கூரத்தாழ்வாரும் உன்னைப் பார்த்தகண்களாலே வெண்ணெயுண்ட பெருமானது அடியார்களைச் சேவிப்பது தீதாகுமென்று இனியாழ்வாரான இராமாநுசரது திருவடிகளை நினைந்து தமது திருக்கண்மலர்களைத் தோண்டி விட்டெறிந்தனர் (எ-று.) (கசுக)

கசுஉ. கோயில்புக்கவணிருந்தனன்குவலயத்துயிர்க்கோர்
தாயின்மிக்கவன்புளவிராமாநுசன்றானும்
வேயினைக்கடந்திரும்புகாவெறிக்கொடுமேல்பாற்
போயிடக்குடகடலினுட்பதங்கனும்புகுந்தான்.

(இ-ள்.) திருவரங்கத்திற் சென்று அவ்விடத்தில் எழுந்தருளியிருந்தனர்; பூமியிலுள்ள உயிர்களுக்கு ஒப்பற்ற தாயினும் மிகுந்த அன்புள்ளவரான இராமாநுசரும், மூங்கிற் காட்டைக்கடந்த காட்டில் மடங்கிச் சென்றும் காவழியே கொண்டு மேற்றிசைக்குப்போக, மேற்குக் கடலில் சூரியனும் பிரவேசித்தனன். (எ-று.) (கசுஉ)

கசுங. முனிபுமொன்பதிற்[illegible]ராமுதலிகளுடனே
குனிதருஞ்சிலைக்கொலைஞர்சேரூர்வயின்குறுகி
இனிதிருந்தவயினைவொன்றுமுதலிகட்கெம்பும்
புனிதவர்சகக்கேட்டோர்குரம்பைவாழ்புளிஞர்.

(இ-ள்.) இராமாநுசமுனிவரும், தொண்ணூற்றைந்து திருநாமங்களாகிய முதலிகளுடனே விளக்கும் சிலையையுடைய வேடமுதலிகளிருக்கும் சிறிய ஊரினிடத்தையடைந்து, இவ்விடத்தில் இனியிருப்போமென்று முதலிகளுக்கு அருளிச்செய்யும் பரிசுத்தமான வார்த்தையைச் சிறுகுடில்களில் வாழும் அவ்வேடமுதலிகள் கேட்டனர். (எ-று.) (௧௪௩)

௧௪௪. இருளிலுற்றவரெவர்கொலென்றயிர்த்தயிலெடுத்தே
அருகிலுற்றவர்வயினவரெனமொழியாலுந்
திருநுதற்றிருமண்ணினுந்தெளிந்தவர்திருத்தாள்
உருகுளத்தொடும்பலமுறைபணிந்தனருவப்பால்.

(இ-ள்.) அவர்கள் இவ்விருளில் வந்தவர்கள் யாவரோவென்று சந்தேகித்து வேலை யெடுத்துக்கொண்டு சமீபத்தில்வந்து, வார்த்தையாலும், அழகிய நெற்றியிலிருக்கும் திருமண்ணினாலும் அவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்களென்று தெளிவடைந்து, அவர்களது திருவடிகளை உருகும் உள்ளத்தோடும் உவப்போடும் பலமுறையும் வணங்கினார்கள். (எ-று.) (௧௪௪)

௧௪௫. யாண்டிருந்தெழுந்தருள்குலவதடிகளின்டெனத்தாள்
பூண்டிறைஞ்சியேவினவலும்புகலுதற்குரியோர்
வேண்டிருங்கதியுதவியேயுலகெலாம்விருப்பால்
ஆண்டிலங்குமாலரங்கமாநகரமென்றறைந்தார்.

(இ-ள்.) எவ்விடத்திலிருந்து ஸ்வாமிகள் இவ்விடத்துக்கு எழுந்தருள்வது என்று அவ்வைஷ்ணவர்களது திருவடிகளைப்பூண்டு வணங்கி வினவுதலும், பதில் சொல்லுதற்குரியோரான வைஷ்ணவர்களும், அடியார் வேண்டும் பெரிய மோக்ஷசாம்ராஜ்யத்தை யளித்து உலகங்களையெல்லாம் விருப்பத்தோடு ஆட்கொண்டு விளங்கும் திருவரங்கத்தெம்பெருமானது திருவரங்கமாநகரமென்று அருளிச்செய்தார்கள். (எ-று.) (௧௪௫)

௧௪௬. என்னலோடுமங்ஙகரில்வாழெம்பெருமானார்
நன்னர்வாய்த்துறைபரிசறைகுதிரெனநவின்றார்
அன்னமாமுனிவரனைச்சுதந்தனர்வினவு
முன்னமேதெனவணங்கியப்புளிஞருமொழிவார்.

(இ-ள்.) என்று முதலிகள் சொல்லுதலோடும், (அவ்வேடமுதலிகள்) அத்திருவரங்கமாநகரத்தில் நித்தியவாசஞ்செய்யும் எம்பெருமானார் நன்மைபெற்று எழுந்தருளியிருக்கும் விதத்தைச் சொல்லுவீர்களாகவென்று கேட்டார்கள். அந்த இராமாநுசமுனிவரை நீங்கள் அறிந்து கேட்கும் குறிப்பு யாது என்று வைஷ்ணவர்கள் கேட்க, அவ்வேடமுதலிகளும் வணங்கிக் கூறுவார்கள். (எ-று.) (௧௪௬)

௧௪௭. இலங்குபொன்மதிற்கச்சிமாதிருவருட்கிலக்காய்
வலங்கொள்வேங்கடமாதவன்விரும்புறமானந்
துலங்கியோபளக்கிரியுறவாயிகெருலைத்தே
நலங்குலாவியமுனிவரன்றிருமலைநல்லான்

(இ-ள்.) விளங்கும் பொன்மயமான மதில்களையுடைய திருக்கச்சிப் பேரருளாளப்பெருமானது திருவருளுக்கு இலக்காகி, வெற்றியைக் கொண்டிருக்கும் திருவேங்கடத்து ஸ்ரீநிவாசப்பெருமான் விருப்பமடையும்படி

அப்பெருமானது அபிமானம் பெற்று, அகோபில சயிலத்தின் சம்பந்த முற்று, பகையை வென்று நன்மைபொருந்திய மகாசீலர்களில் சிரேஷ்டரான திருமலை நல்லான் சக்ரவர்த்திஸ்வாமி, (எ-று.) (௧௪௭)

௧௪௮. மருள்கடிந்தெமையாளுநரெம்பெருமானார்
ஒருவர்மாநிலத்துயிரெலாமுய்யவாழ்பரம
குருவவன்றிருவடிகளேசரணெனக்குறித்தே
இருமினீவிரெனவிசைத்தாலறிந்தனமென்றார்.

(இ-ள்.) அஞ்ஞானத்தை நிவர்த்திசெய்து எங்களை யடிமை கொள்ளும் போது, எம்பெருமானாரான ஒப்பற்றவர் பெரிய பூமியிலுள்ள உயிர்களெல்லாம் உஜ்ஜீவிக்கும்படி வாழும் பரமாசாரியராவர்; அவர் திருவடிகளே சரணம் என்று குறிக்கொண்டு நீங்கள் வர்த்தியுங்கள் என்று அருளிச்செய்ததாலே அறிந்தோமென்றார்கள். (எ-று.) (௧௪௮)

௧௪௯. உளமகிழ்ந்திராமாநுசமுனிவனுமுயர்சீர்
வளமலிந்தநல்லானெனுமுகிலடிவளத்தும்
அளவியேபொழிந்ததுகொலென்றசகிராதருக்குத்
துளவணிந்தமாலிகர்தனதுருவமுஞ்சொற்றான்.

(இ-ள்.) அப்போது இராமாநுசமுனிவரும் திருவுள்ளமகிழ்ந்து, "உயர்ந்த சீரின் வளப்பம் மிகுந்த நல்லானென்னும் காளமேகம் இங்குகாட்டிலும் கூடி வருஷித்ததோ" என்று பணித்து, அந்த வேடமுதலிகளுக்குத் திருத்துழாய்மாலையையணிந்த பெருமானுக்குச் சமானமான தமது திருவுருவத்தையும் சொல்லியருளினார். (எ-று.) (௧௪௯)

௧௫௦. அரங்கமாநகரவனைக்கடவுளீண்டடியார்க்
கிரங்கியாட்கொளவந்ததேயெனப்பணிந்தேத்தாக்
கரங்கள்கூப்பித்தமபதியினுட்கொடுசெலாக்களித்தார்
சரங்களாற்பொலியார்வகாழிப்புறச்சவரர்.

(இ-ள்.) திருவரங்கமாநகரத்தில் திருவரங்காழ்வான்மீது எழுந்தருளியிருக்கும் பெருமான் இவ்விடத்தில் அடியார்களுக்கு இரங்கி அடிமை கொள்வதற்காக எழுந்தருளினாற் போலே, வணங்கித் துதித்து, கைகள் கூப்பிக்கொண்டு தங்கள் ஊரிற் கொண்டு சென்று களித்தார்கள் பாணங்களாற் பொலிந்த அம்புக்கூட்டைத் தரித்த பின்புறத்தையுடைய வேடர்கள். (எ-று.) (௧௫௦)

௧௫௧. வருக்கைவாழைதேமாங்கனிதுவலைதேன்மகிழ்வாற்
பொருக்கெனத்திருமுன்னர்வைத்தருந்தெனப்புகன்றார்
பெருக்குமன்புடன்முதலிகளுடனுமப்பெரியோன்
சருக்கமின்றியேகடன்முடித்தயின்றவட்டுயின்றான்.

(இ-ள்.) பலாக்கனி வாழைக்கனி தேமாங்கனி தினைமா தேன் இவைகளை மகிழ்ச்சியோடு விரைவாகத் திருமுன்பே சமர்ப்பித்து இதனை யமுசை செய்தருளவேண்டுமென்று விண்ணப்பித்தார்கள். அப்பெரியோரும் அன்போடு முதலிகளுடனும் அவ்விராமாநுசமுனிவர் சருக்கமில்லாமல் தமது அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு அமுதுசெய்து அவ்விடத்தில் துயிலமர்ந்தனர். (எ-று.) (௧௫௧)

கருஉ. அங்குநின் றறுகாவதங்கடந்துதன்னடியார்
தங்குமோர் பதிதரித்துமற்றப்பதிதனங்கே
கங்குலிங்குறக்கதிர் விடுமரதனக்கணங்கள்
எங்குமார்ந்தயாதவக்கிரியடைந்தவணிருந்தான்.

(இ-ள்.) பிறகு அங்கு நின்றும் ஆறுகாதங்கடந்து தமது திருவடி சம்பந்திகள் வர்த்திக்கும் ஒரூரில் தங்கி அந்தப்பதியையும் விட்டுநீங்கி இருள் போம்படி பிரகாசம் விடும் ரத்தினக் கூட்டங்கள் எவ்விடத்தும் பொருந்திய யாதவாத்திரியை யடைந்து அவ்விடத்திலிருந்தனர். (எ-று.)

வேறு.

கருங. அவணவனுறையவரங்கமாநகரத் தமர்திருவற்சனுமன்பால், இவணிகழ்முறைமைகவின்மெனத்துதர்க் கியம்பவத்தூதருமேகிக், கவலையொடிறைஞ்சிநிகழ்ந்தவாறுரைப்ப வெதிகணுநனுமிக்கனன்றே, தவறல்செய்யரசன்முடிந்திடவென்றே யரங்கர் தாணினைந்தனன்சபித்தான்.

(இ-ள்.) அவ்விடத்தில் இராமாநுசர் எழுந்தருளியிருக்க, திருவரங்கமாநகரத்தில் எழுந்தருளியிருக்கும் மங்களகரமான கூரத்தாழ்வானும், அன்போடு இவ்விடத்தில் நிகழ்ந்த முறைமைகளைச் சொல்லுவீர்களாகவென்று தூதர்களுக்குச்சொல்ல, அந்தத் தூதர்களும்போய் வருத்தத்துடன் இராமாநுசரை வணங்கி நிகழ்ந்த விதத்தையெல்லாம் விண்ணப்பிக்க, எதிராசரும் மிகக்கோபித்து, கூரத்தாழ்வான் விஷயத்திற் குற்றத்தைச் செய்த அரசன் முடிவானாக வென்று திருவரங்கமாநகரப்பனது திருவடிகளைச் சிந்தித்துச் சபித்தனர். (எ-று.) (கருங)

கருச. கடுமிடற்றரவினணைத்துயிலரங்கக் கடவுளுங்கனவினிற் கண்டங், கொடுமிடற்கண்டன்கண்டமேகண்டங் காண்டலுங்குலைந்துயிர்த்தெழுந்தே, கடுமிடற்கிடனுய்க்கிருமிவாய்வழியே சொரிந்துதன்கிளையொடுந்தொலைந்தான், விடுமிடர்ப்பெரியோர்வெகுண்டிளோரெவரே விளிந்திலார்விரிகடற்புவிமேல்.

(இ-ள்.) விஷமுற்ற கண்டத்தையுடைய திருவனந்தாழ்வானுகிற படுக்கையில் அறிதுயிலமரும் திருவரங்கத்தெம்பெருமானும் கனவில் வாளைக்கொண்டு வலியையுடைய கண்டனென்னும் சோழனது கழுத்தைத் துண்டித்தனும், அவன் நித்திரைகுலைந்து உயிர்த்தெழுந்து குரூரமான துன்பத்துக் கிடமானவனுகித் தனது வாய்வழியே புழுக்களைச் சொரிந்து தன் குடும்பத்தோடுந் தொலைந்தனன். விரிந்த கடல்சூழ்ந்த பூமியின்மீது இடரையொழித்த பெரியோர்களாலே கோபிக்கப்பட்டவர்களில் கெட்டுப்போகாதவர்கள் யாவர்? (எ-று.) (கருச)

கருரு. அன்னவாறரங்கத்தமருமாருதியம் மாடிருமாருதியாண்டான், என்னவாழிருவரிலக்குவமுனிபா லெய்தியேயிறைஞ்சினரியம்ப, உன்னலாவுவகையொடுதழீஇயவர்கட் குதவுவானுயர்பொருளரிதாய், முன்னமேமொழிந்ததுவயமந்திரத்தின் மூலமாம் பொருளினைமொழிந்தான்.

(இ-ள்.) அவ்விதத்தைத் திருவரங்கத்தில் நித்தியவாசிகளாய் வாழும் மாருதியம்மாள் அழகிய மாருதியாண்டான் என்னு மிருவர் இராமாநுச

முனிவரிடத்துக்குவந்து வணங்கிச் சொல்லவே, இராமாநுசர் அவர்களை நினைப்பதற்கரிய சந்தோஷத்தோடு தழுவிக்கொண்டு, அவர்கட்குக் கொடுப்பதற்கு உயர்ந்த பொருள் ஒன்று மில்லாமல் முன்பு தாமருளிச்செய்த துவயமந்திரத்தின் மூலமான பொருளை யருளிச்செய்தனர். (எ-று.) ()

கருசு. யாதவபுரியிற்கண்ணனூர் படிமை யியற்றியிற்பதிட்டைசெய்தெயிறேர், கோதகறிருக்கோபுரந்திருக்கோயி லமைத்தவன்றனைவிடைகொடுநீன், மாதவனரங்கமாயவற்பணிவான் கருதமற்றவனுளோர்வணங்கி, நீதனைத்திடயாந்தரிக்கிலோமெனவே நிகழ்த்துபுநெடிதுயிர்த்திருந்தார்.

(இ-ள்.) பின்னர், திருநாராயணபுரத்தில் செல்வப்பிள்ளையினது அர்ச்சாவிக்கிரகத்தை முயற்சியுடன் பிரதிஷ்டைசெய்து, திருமதில் திருத்தேர் குற்றமற்ற திருக்கோபுரம் திருக்கோயில் இவைகளை யமைத்து, அப்பெருமானிடத்து விடைபெற்றுக்கொண்டு, உயர்ந்த மாதவனுய்த் திருவரங்கத்திருக்கும் மாயப்பிரானைப் பணிவதாகத் திருவுள்ளத்திற் கொள்ள, யாதவசைலத்திலுள்ளவர்கள் இராமாநுசரை வணங்கி, தேவரீர் எங்களை விட்டு நீங்க நாங்கள் தரிக்கமாட்டோமென்று விண்ணப்பித்துப் பெருமூச்செறிந்திருந்தார்கள், (எ-று.) இயற்றி-முயற்சி. (கருசு)

கருஎ. மற்றவர்துயரந்தணித்தவண்டனையோர் படிமையின்வருத்திளிதமைத்தே, நற்றவனரங்கநகர்வயினனுகா நாகமீத்துயின்மறைநாதன், பொற்றடந்துணைத்தாள்பணிந்தனன்பலகாற் புகழ்தனுங்கருணையம்புயனும், உற்றனைகொல்லோவருத்தநஞ்சமயநிறுத்துவானெனத்தழீஇபுவந்தான்.

(இ-ள்.) அவர்களது துயரத்தைத்தணித்து, அவ்விடத்தில் தம்மை ஒரு அர்ச்சாரூபமாகச்செய்து ஸ்தாபித்து, நல்ல தவத்தையுடைய இராமாநுசர், திருவரங்கநகரத்தையடைந்து திருவனந்தாழ்வான்மீது அறிதுயிலமரும் வேதங்களாற் கூறப்படும் நாதனுன பெருமானது அழகிய விசாலமான இரண்டு திருவடிகளைப் பணிந்து பலமுறையும் புகழ்தலும், கருணை மழையையுடைய மேகமான பெருமானும், நாம் வகுத்ததான நமது சமயத்தை நிலைநிறுத்துவதற்காக வந்தீரோ? என்று தழுவிக்கொண்டு சந்தோஷித்தனன். (எ-று.) (கருஎ)

கருஅ. ஊழிநூறுருளியுலகுயிரெவையு மொழியினுமுலைவிலாதுயர்ந்தே, வாழிநீவாழிமதருநிற்பணிந்தோர் வணங்கிறுேரெமையெனுமகிழ்வாற், சூழிமால்கரிகாத்தருள்பிரான்வரமீந் தரவணைமீதுகண்டுயின்றுன், ஆழிமாதவன்பால்விடைகொடுமுனியும் வற்சன்மாளிகைதனையடைந்தான்.

(இ-ள்.) ஊழிகாலம் நூறுகடந்து உலகமும் உயிர்கள் எவையும் அழியினும் கெடாமலுயர்ந்து நீவிர் வாழக்கடவீராக; நும்மதமும் வாழ்வதாக; உம்மைப்பணிந்தோரும் எம்மை வணங்கினுேராவர் என்று மகிழ்ச்சியோடு முகபடாமணிந்த உயர்ந்த கஜேந்திராழ்வானைக் காத்தருளிய பெருமான் வரமளித்து, திருவனந்தாழ்வான்மீது திருக்கண்மலர்கள் துயிலமர்ந்தனன். திருவாழியாழ்வானைத் தரித்த அப்பெருமானிடத்து விடைபெற்றுக்கொண்டு, இராமாநுசமுனிவரும் கூரத்தாழ்வானது திருமாளிகையை யடைந்தனர். (எ-று.) (கருஅ)

௧௫௯. எதிரெழுந்திறைஞ்சும்வற்சனைதழீஇக்கொண் டிருகணீரா ட்டியாண்டிருந்து, முதிர்கருணையிறுற்கைகளால்விழியைத் தைவ ராமுதுமறைமுதலே, மதிலரங்கேசவற்சனதிருகண் டருகென வழுத்தமாலபலித்தான், எதிகடம்மிறையுமெழுந்துதன்மடஞ்சா ர்ந் தெழுந்தருளினனினிதிருந்தான்.

(இ-ள்.) எதிராக எழுந்துவந்து வணங்கும் கூரத்தாழ்வானைத் தழுவிக் கொண்டு இருகண்களிலுள்ள நீராலே மஞ்சனமாட்டி அவ்விடத்து எழுந் தருளியிருந்து, முதிர்ந்த கருணையுடன் தமது திருக்கைகளாலே கூரத் தாழ்வானது திருக்கண்மலர்களைத் தடவி, பழமையான வேதமுதல்வனே! மதில்சூழ்ந்த திருவரங்கேசனே! கூரத்தாழ்வானது இரண்டு திருக்கண் மலர்களும் கொடுத்தருள்கவென்று துதிக்க, அப்போதே பெருமானும் கூரத்தாழ்வானுக்குத் திருக்கண்மலர்களை அளித்தனன். எதிராசரும் அங்கு நின்று எழுந்து தமது மடத்தையடைந்து இனிது எழுந்தருளியிருந்தனர். (எ-று.) (௧௫௯)

௧௬0. வஞ்சமோவியசீர்வற்சனுங்கோயின் மருவியேமணிமறு மார்போன், கஞ்சமாமலர்த்தாண்முதல்முடிகாறுங கண்களாலுகைக் குபுகளித்தே, தஞ்சநீயெனையாண்டருள்கெனவணங்கி வழுத்த லுஞ்சகமளந்தோனும், எஞ்சலாவரநீவேட்டவைதருவா மெனத் திருவாய்மலர்ந்திசைத்தான்.

(இ-ள்.) வஞ்சனையைத் தொலைத்த சீரையுடைய கூரத்தாழ்வானும், பெருமானது திருக்கோயிலையடைந்து, கவுத்துவமணியும் ஸ்ரீவற்சமும் பொருந்திய திருமார்பையுடைய திருவரங்கத்தெம்பெருமானது பெருமை பொருந்திய தாமரைமலர்போன்ற திருவடிமுதல் திருமுடிவரையில் தமது திருக்கண்களாலே சேவித்துச் சந்தோஷித்து, தஞ்சமாயிருக்கும் தேவரீர் அடியேனை யாண்டருள்வீராக என்று வணங்கித் துதித்தலும், உலகமளந்த பெருமானும் நீவிர் விரும்பிய குறைவில்லாத வரத்தைக்கொடுப்போமென்று திருவாய்மலர்ந்து அருளிச்செய்தனன். (எ-று.) (௧௬0)

௧௬௧. உலைவிலாப்பரமபதந்தருகுதியென் றிறைஞ்சமாலுதவின னுயர்சீர், தொலைவிலாமுனியும்விடைகொளாத்தனதா மியதிருமா ளிகைதுறந்தே, நிலையிலாவடிவையகற்றுவானெனையா ணெடிய மாதிருவடிநினையா, அலைவிலாயோகத்தினிலமர்ந்திருந்தா னெதிக ளுதனுமஃதறிந்தான்.

(இ-ள்.) கெடாத பரமபதத்தை அளிப்பீராகவென்று வணங்கப் பெரு மான் அளித்தருளினன். உயர்ந்த சீர் தொலைதலில்லாத கூரத்தாழ்வானும் விடைகொண்டு, தம்முடையதாகிய திருமாளிகையை விட்டு, நிலையில்லாத சரீரத்தை நீக்குவதற்காக என்னையாண்ட நெடிய பெருமானது திருவடி களை நினைந்து அலைதலில்லாத யோகத்தின் விதத்தைப் பொருந்தியிருந்த னர். அதனை எதிராசரு மறிந்து (எ-று.) (௧௬௧)

௧௬௨. துயருழந்தவன்மாட்டணுகிநீயெனையுந் துறந்ததென்ன வில்லெனத்துயர்தீர, தயர்தவமுனியுமுளத்திலைம்புலனு மமை

இராமாநுசச்சருக்கம்.

னாராளஃதிராமாநுசனறிந்தே, மயர்விலாத்துவயமனுவினைச்செ விக்கே வழங்கினனள்ளற்கனுமகிழ்ந்தே

(இ-ள்.) அன்பமடைந்து கூரத்தாழ்வானிட மெழுந்தருளி, நீவிர் என் னையும் நீங்கியது யாதுக்கு? சொல்லுகவென் றருளிச்செய்ய, துயரந் தீர்ந்த செய்த தவத்தையுடைய கூரத்தாழ்வானும் திருவுள்ளத்தில் ஐம் புலன்களையு மடக்கிப் பெருமானது திருவடிகளில் தமது திருவுள்ளத்தைச் சேர்த்து அழியாத யோகத்திலிருந்தவராய் ஒன்றும் உணராதவராக, அதனை இராமாநுசர் அறிந்து மயக்கமற்ற துவயமந்திரத்தை அவரது திருச்செவி யில் அருளிச்செய்தனர். கூரத்தாழ்வானும் மகிழ்வடைந்து, (எ-று.) (௧௬௨)

௧௬௩. உடலுறந்தரிவாழுயர்திருநாட்டை யடைந்தனன்குரவனு முலையாப், படருழந்தவன்செய்பட்டனுமுனியாற் பழுதிலாச்சாரு ளொற்படியே, கடனயர்ந்தவனைக்கைக்கொடாடரவிற கனவளர் கருணையங்கடவுள், இடனடைந்திவனின்கையடையெனையா ளிச வென்றடிபணிந்திருந்தான்.

(இ-ள்.) தமது திருமேனியைவிட்டு நீங்கிப் பெருமான் நித்தியவாசஞ் செய்யும் உயர்ந்த திருநாட்டையடைந்தனர். ஆசாரியரான இராமாநுச ரும் கெடாத துக்கமடைந்து, அவரது திருக்குமாரரான ஸ்ரீபராசரபட்ட ரிய மகாசீலராலே பழுதில்லாத வேதசாஸ்திரப்படியே செயடவேண் டிய கடமைகளை முடித்து, ஸ்ரீபராசரபட்டரைத் தமது கையிற்பிடித்துக் கொண்டுபோய், ஆதிசேஷன்மீது திருக்கண்வளரும் கருணை யையுடைய அழகிய திருவரங்கநகரப்பனது ஸந்நிதானத்தையடைந்து, என் னையாண்ட ஈசனே! இவர் உமக்கு அடைக்கலம் என்று பெருமானது திரு வடிகளைப் பணிந்து சமர்ப்பித்தனர். (எ-று.) (௧௬௩)

௧௬௪. இந்திரைபுடவியெனுமனைவியரோ டெம்பிரான்றிருவரங் கேசன், செந்திருக்கரத்தாற்றழீஇத்தனக்கினிய சிறுவனுய்விரும்பி நந்செல்வம், முந்தியவரிசையிவனதென்றருளான் மொழிந்தனன் [illegible] றமுனியும், உந்தியம்புயத்திலுதித்தசேய்வானிற் குயர்ந் [illegible] வெனப்புவிக்குயர்ந்தான்.

(இ-ள்.) பெரியபிராட்டியார் பூமிப்பிராட்டியார் என்று சொல்லும் திருத்தேவிமார்களோடு எம்பிரானான திருவரங்கேசன் சிவந்த திருக்கரத் தாலே பட்டரைத்தழுவி, தனக்கு இனிய திருக்குமாரராக அபிமானித்து, நமது செல்வத்தில் முந்தியவரிசை இவருடையதென்று திருவருளோடு அரு ளிச்செய்தனன். பட்டராகிய முனிவரும், பெருமானுடைய திருவுந்தித் தாமரையிலுண்டான குமாரனான பிரமதேவன் மேலுலகில் உயர்ந் திருப்பதுபோல, பூமியில் உயர்வையடைந்தனர். (எ-று.) (௧௬௪)

௧௬௫. பரிவினம்பெருமான்பின்னருஞ்சுதனும் பட்டனுமிகா வைபலித்தான், உரியவிஞ்சையினையிலக்குவமுனிவோ னுதவி னுலகெலாம்பரவுந், தெரிசனமுதன்மையளித்தனன்புகழெம் பாரெனுமுனிவரன்றிருமால், அரிவரகுமரனெனபட்டனும்பாரடி பணிந்திடவினிதமர்ந்தான்.

௮௯௪ ... ௭௬௪ 987 64 / 11825

(இ-ள்.) பின்னரும் நம்பெருமான் ப்ரீதியோடு தனது திருக்குமாரான ஸ்ரீபட்டருக்கு ஆயுளை யளித்தனன்; இராமாநுசமுனிவர் உரிமையான வித்தையை யளித்தனர்; புகழையுடைய எம்பாரென்னும் முனிசிரேஷ்டர் உலகமெல்லாம் பரவும் தரிசனத்துக்கு முதன்மையாந் தலைமையை யளித்தனர். பெருமானது சிரேஷ்டமான திருக்குமாரரான பட்டரும், பூமியிலுள்ளோர் தமது திருவடிகளைப் பணியும்படி நன்கு எழுந்தருளியிருந்தனர். (எ-று.) (கசுரு)

வேறு.

கசுசு. நற்றவஞ்சேர்முக்கோல ரெழுநூற்றுவோரெழுபா னுன்கிஷேர்மாண், பெற்றருள்சிங்காதனரோ காந்தியரீராயிரவர் பிரியாதேத்த; உற்றபொருட்பனுவலவர்க் குரைத்தனனுற்கடலுடைகு மூலகோர்வாழக், கொற்றவிராமாநுசனு முனிவரனுநம்பெருமாள் கோயில்வாழ்ந்தான்.

(இ-ள்.) நல்ல தவத்தையுடைய திரிதண்டதாரிகள் எழுநூறு திருநாமங்கள், பெருமைபெற்ற சிம்மாசனாதிபதிகள் எழுபத்துநால்வர், ஏகாந்தியர் ஈராயிரந்திருநாமங்கள் ஆகிய இவர்கள் பிரியாமலிருந்து ஏத்த, பொருந்திய சாஸ்திரார்த்தங்களை அவர்களுக்கு அருளிச்செய்து நான்கு கடல்களை பக்கங்களிற் சூழ்ந்த உலகத்திலுள்ளோர் வாழும்படி வெற்றியையுடைய இராமாநுசராகிய முனிசிரேஷ்டரும் நம்பெருமாள் நித்தியவாசஞ்செய்யும் கோயிலாகிய திருவரங்கந் திருப்பதியில் வாழ்ந்தனர். (எ-று.) (கசுசு)

கசுஎ. அரிசமயதீபமென்றோர் காவியமாவிருத்தமுமா யிரத்தைஞ்ஞூறும்த், தெரிவருஞ்செந்தமிழாழ்வார் சரிதைகுருபரம்பரையுந் தெளிந்துசொற்றான், புரிவருள்கிழையிலரங்க நம்பெருமான் பதம்பணிவோன் பொருப்பினல்லான், பெரியதிருவடிமறவாச் சடகோபதாசனெனும் பெயரினானே.

(இ-ள்.) அரிசமயதீபமென்று சொல்லப்படும் ஒரு காவியமாய், அதில் விருத்தப்பாக்கள் ஆயிரத்தைஞ்ஞூறாய், தெரிவதற்கரிய செவ்வையுடைய தமிழில் ஆழ்வார்கள் வைபவங்களையும் குருபரம்பரையையும் தெளிந்து அருளிச்செய்தவர், அன்புற்ற திருவருளையுடைய கிழை யரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் நம்பெருமானது திருவடிகளைப் பணியுமவராய், திருமலை நல்லான் சக்ரவர்த்திஸ்வாமியின் பெருமைவாய்ந்த திருவடிகளை மறவாத சடகோபதாசர் என்னும் திருநாமமுடையவர். (எ-று.) (கசுஎ)

இராமாநுசச்சருக்கம் முற்றிற்று.

அரிசமயதீபம் முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

சடகோபதாசர் பொன்னடி வாழ்க.